Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 20 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

முரசு - 05 திருவள்ளுவர் ஆண்டு 2046 ஆடி 12 செவ்வாய்க்கிழமை (28.07.2015) பக்கங்கள் 20 ஓசை - 300

நாடாளுமன்றத் தேர்தல் - 2015

ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி



# வடக்கே வருகிறார் ஜனாதிபதி

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இன்று யாழ்ப்பாணத் திற்கான விஜயமொன்றை மேற் கொள்ளவுள்ளார். முதலில் இன்று காலை விமானப்படையின் உல ங்கு வானூர்தி மூலம் கிளிநொச் சிக்கு விஜயம் மேற்கொள்ளும் ஜனாதிபதி அங்கு சில நிகழ்வு களில் கலந்துகொள்ளவுள்ளார்.

கிளிநொச்சியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள கட்டட மொன்றையும் வைபவரீதியாக திறந்துவைக்கவுள்ளார். அந்த வைபவத்தில் அவர் சிறப்புரை யாற்றுவார்.

அதன் பின்னர் யாழ்ப்பாணத் திற்கான விஜயத்தை ஜனாதிபதி மேற்கொள்ளவுள்ளார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மாவ ட்ட அலுவலகத்துக்கும் விஜயம் செய்யவுள்ளார்.

இதைவிட வேறும் சில நிகழ் வுகளிலும் அவர் கலந்துகொள்ள வுள்ளார். (25)

## கூட்டமைப்பு பிரசாரக் குழு மீது மாணவர்கள் தாக்குதல்

(கொழும்பு)

நடைபெறவுள்ள நாடாளுமன் றத் தேர்தலில் வன்னி மாவட் டத்தில் போட்டியிடும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பா ளர் சி.சிவமோகனின் ஆதரவா ளர்கள் மீது மாணவர்கள் சிலர் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

நேற்று இடம்பெற்ற இச்சம்ப வம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்துக்கு அண்மித்ததாக கண்டி வீதி வழி யாக தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் வேட்பாளர் சிவமோக னின் ஆதரவாளர்களான இளை ஞர்கள் சிலர் நடந்து வந்துள்ள னர். இதன் போது பாடசாலை விட்டு அவ்வீதி வழியாக பாட சாலை சீருடையுடன் வந்த மாண

19 ஆம் பக்கம் பார்க்க

## போதைவஸ்து கடத்தல் ஆனைக்கோட்டையில் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

இளைஞர் ஒருவரிடமிருந்து 12 கிலோ (மாவா) போதைப் பொருளை பொலிஸார் மீட்டது டன், இளைஞரையும் கைதுசெய் துள்ளதாக யாழ்ப்பாணம் பொலி ஸார் நேற்று தெரிவித்தனர்.

யாழ். பொலிஸ் நிலைய குற் றப்பிரிவினருக்கு கிடைத்த தகவ லின் பிரகாரம் யாழ். ஆலடி ஆனைக்கோட்டைப் பகுதியில் வைத்தே குறித்த இளைஞரை நேற்று கைதுசெய்துள்ளனர்.

19 ஆம் பக்கம் பார்க்க

## கூட்டமைப்பின் விஞ்ஞாபனத்தை ஐ.தே.கட்சி ஏற்றுக்கொள்கிறதா?

### கேள்வி எழுப்புகிறார் டளஸ்

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் தேர்தல் விஞ்ஞாபனத்தை ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஜாதிக ஹெல உறுமய ஆகிய கட்சிகள் ஏற்றுக்கொள்கிறதா என்று டளஸ் அழகப்பெரும கேள்வி எழுப்பியுள்ளார்.

எதிர்க்கட்சி அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவிய லாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ் வாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து உரை யாற்றுகையில்,


தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்த ஜனநா யகத்திற்கான ஆதரவானவர்கள் இல்லாமல்போய் இனவாதிகளின் கைகளுக்கு கட்சியின் அதிகாரங் கள் சென்றிருப்பதுபோலவே அவர்களது தேர்தல் விஞ்ஞாபனம் அமைந்துள்ளது.

அவர்களது தேர்தல் விஞ்ஞாபனம் 1976 ஆம் ஆண்டு வட்டுக்கோட்டை சம்மேளனத்தை நோக்கி யதாகவே அமைந்துள்ளது.

வடக்கு, கிழக்கை மீண்டும் ஒன்றாக இணைப் பது, தமிழ் பேசும் மக்கள் வாழும் பிரதேசத்தில் சுயாட்சியை ஏற்படுத்துதல், அந்த சுயாட்சியில் காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்குதல் போன்ற விடயங்கள்

19 ஆம் பக்கம் பார்க்க

## அப்துல் கலாம் காலமானார்



இந்தியாவின் மேகாலய மாநில தலைநகர் ஷில் லாங்கில் உள்ள இந்திய மேலாண்மைக் கல்வி நிறுவனத்தில் (ஐ.ஐ.எம்.) நேற்று நடைபெற்ற கருத் தரங்கில் முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் கலந்து கொண்டார். அப்போது மேடையில் பேசிக் கொண்டிருந்த அப்துல் கலாமுக்கு திடீரென மாரடைப்பு ஏற்பட்டது.

மயங்கிச் சரிந்த அவர் அங்குள்ள பெத்தானி மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பிரிவில் அனு மதிக்கப்பட்டார்.

19 ஆம் பக்கம் பார்க்க

## மன்னாரில் எண்ணெய் அகழ்வு இந்திய நிறுவனம் வெளியேறியது

(கொழும்பு)

மன்னார் வளைகுடாவில் எண்ணெய் அகழ்வுப் பணிகளுக்கான ஆரம்ப முயற் சிகளில் ஈடுபட்டுவந்த இந்திய நிறுவனம் அந்த முயற்சியை கைவிட்டு வெளியேற தீர்மானித்துள்ளது.

இப்போது மன்னார் எண்ணெய் அகழ் வில் ஈடுபட மூன்று சர்வதேச எண்ணெய் நிறுவனங்கள் விருப்பம் தெரிவித்துள்ள தாக மின்சக்தி எரிசக்தி அமைச்சு தெரி வித்துள்ளது.

மன்னார் வளைகுடாவில் எண்ணெய் அகழும் நடவடிக்கையில் இருந்து வில கிக் கொள்வதாக இந்தியாவின் கெயின் நிறுவனம் அறிவித்திருந்தது.

கெயின் நிறுவனத்தின் பணிகளைத் தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கு மூன்று சர்வதேச எண்ணெய் நிறுவனங்களிடம் இருந்து விண்ணப்பம் கிடைக்கப் பெற் றுள்ளதாக மின்சக்தி அமைச்சின் செயலா ளர் பி.எம்.எஸ்.பட்டகொட தெரிவித்துள் ளார்.

கெயின் லங்கா நிறுவனம் விலகுவ தற்கு

19 ஆம் பக்கம் பார்க்க

நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2015



டக்ளஸ் தேவானந்தா


உங்களோடு உங்களுக்காக நாங்கள்



ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)

# மக்களிற்கு சேவையாற்றாது உறங்கிக்கொண்டிருப்பவர்களால் பிரச்சினைகளிற்கு தீர்வுகளை எட்ட முடியாது

## முன்னாள் எம்.பி. சந்திரகுமார் தெரிவிப்பு



(கிளிநொச்சி)

மக்களுக்கு சேவையாற்றாது தூங்கிக்கொண்டிருக்கும் அரசியல்வாதிகள் தேர்தல் காலங்களில் மட்டும் விழித்தெழுந்து மக்களிடம் வாக்கு கேட்டு வருகின்றனர் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார் நேற்று முன்தினம் பாரதிபுரத்தில் இளைஞர், யுவதிகளை சந்தித்து கலந்துரையாடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

இளைஞர்கள் மத்தியில் சரியான கருத்துருவாக்கம் ஏற்படும் போதே ஒரு சீரான சமூகத்தைக் கட்டி அமைக்க முடியும். இன்று, சமூகத்தின் மீது அதிக கரிசனையுடன் செயற்படவேண்டிய பொறுப்பில் இருப்பவர்கள் சமூகத்தின் மீது அக்கறையற்று செயலாற்றுகின்ற நிலைமையினைக் காணமுடிகின்றது. இவற்றை நெறிப்படுத்துவதற்கு சரியான அரசியல் தலைமைத்துவத்தினால் மட்டுமே முடியும் ஆனால துரதிஸ்ரவசமாக தமிழ் அரசியல் தலைமைகள் மக்களை சரியான பாதையில் வழிநடத்த தவறிவிட்டன. அதனால் மக்கள் பல துன்பங்களையும் துயரங்களையுமே எதிர்கொண்டனர். ஆகவே இனிவரும் காலங்களிலும் தவறான வழிநடத்தலை ஏற்றுக்கொண்டு அதன்படி செயற்படுவோமானால் தொடர்ந்தும் அழிவையே எதிர்கொள்ள நேரிடும். ஆகவே எமது சமூகத்தை சரியான பாதையில் வழிநடத்த வேண்டிய கடமையும் பொறுப்பும் இன்றைய இளம் சமூகத்திற்கு உண்டு அந்தப் பொறுப்பிலிருந்து அவர்கள் விலகிவிட முடியாது.

இன்று இளைஞர்கள் மத்தியில் அரசியல்சார்ந்த விழிப்புணர்வு ஏற்பட்டிருப்பதனைக் காண்கின்றோம். சமூகம் பல அரசியல் தலைமைகளால் ஏமாற்றப்படுகின்ற நிலையினை அவர்கள் உணர்ந்துள்ளார்கள். எமது மக்களின் எதிர்காலம் தொடர்பான எந்த தூரநோக்கு சிந்தனையும் பல அரசியல் தலைவர்களிடம் இல்லை என்ற உண்மையை அவர்கள் உணர்ந்துள்ளனர். என குறிப்பிட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்,

ஆனால் இன்று மக்கள் பல தேவைகளுடனும் பிரச்சினைகளுடனும் வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள் ஆகவே இவ்வாறு உறங்கிக் கொண்டிருப்பவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களானால் தீர்வுகளை எட்டுவதற்கான காலங்கள் இழுத்தடிக்கப்படுமே தவிர எவ்வித முன்னேற்றங்களை எட்டுவதற்கும் வழிபிறக்கப்போவதில்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில வடக்கு மாகாணசபை உறுப்பினர் வை.தவநாதன் கரைச்சி பிரதேசசபை உறுப்பினர் கிருஸ்ணசாமி மற்றும் அப்பகுதி மக்கள் அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் இளைஞர், யுவதிகளும் கலந்துகொண்டனர். (160)

# கிராம அபிவிருத்திச் சங்கத்தின் புதிய நிர்வாகத் தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். பிரதேச கிராம அபிவிருத்திச் சங்க சமாசத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் கடந்த வெள்ளிக்கிழமை யாழ். பிரதேச செயலக மண்டபத்தில் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் யூட் ததேயூஸ் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் ஜெனற் டியோனியஸ்ரின் மற்றும் கிராம மாதர் சங்க உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

புதியநிர்வாக சபைக்கு தலைவர் கலாநிதி த.தனேந்திரன், உபதலைவர் திருமதி இரா.புவனேஸ்வரி, செயலாளர் திருமதி வ.சசிரேகா, உப செயலாளர் திருமதி வே.ராஜமலர், பொருளாளர் க.தம்பிராசா மற்றும் நிர்வாக சபை உறுப்பினர்களாக அ.யஸ்மின், என்.சாந்தினி, செ.வின்சன், செ.கெலன்திரேசா, அ.க.ஏணஸ்ற், மு.கௌரி, செ.மேரிஅர்சலா, டி.ஜே.ஜீவித்தாவுடன் ரி.நிசாகரன் கணக் காய்வாளராகவும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (105)

# குடிநீர்ப் போத்தல்களுக்கு தரச்சான்றிதழ் செப்ரெம்பர் முதல் அமுல்

(யாழ்ப்பாணம்)

குடிநீர் நிரப்பும் கொள்கலன்கள், போத்தல்கள் யாவும் பொலிமன் மூலப் பொருளால் ஆக்கப்பட்டதாகவும் எஸ்.எல்.எஸ். தரச் சான்றிதழை கொண்டிருப்பதையும் உறுதிப்படுத்த வேண்டுமென பாவனையாளர் பாதுகாப்பு அதிகார சபை அறிவித்துள்ளது.

அவ்வாறன்றி இக்குடிநீர் போத்தல்களை உற்பத்தி செய்யவோ, விநியோகிக்கவோ, கொண்டு செல்லவோ, களஞ்சியப்படுத்தவோ முடியாதெனவும் அதிகார சபை விடுத்துள்ள அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இப்பணிப்புரை அடுத்த வருடம் செப்ரெம்பர் முதலாம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரவிருப்பதாகவும் இந்த அதிகார சபையின் தலைவர் ரூமி மர்சூக் வெளியிட்ட அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# முறையற்ற தேர்தல் பிரசாரம் சமூக அமைப்புக்கள் கண்டனம்

(அச்சுவேலி)

தேர்தல் நடவடிக்கைகளுக்காக தமது அனுமதியின்றி உள்ளூரமைப்புக்களின் கட்டடத்தை அரசியல் கட்சிகள் பயன்படுத்துவதற்கு நிலைய நிர்வாகிகள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

அச்சுவேலிப் பகுதியைச் சேர்ந்த சனசமூக நிலையங்கள் இவ்வாறு பயன்படுத்தப்படுவதாக அச்சுவேலி தெற்கு கலாநிதி சனசமூக நிலையத்தின் பொருளாளர் த. செல்வநாதன் தெரிவித்தார்.

ஏற்கனவே, தமது சனசமூக நிலையத்திலிருந்து தாமகவே விலகிக் கொண்ட முன்னாள் தலைவர் தற்போதைய நிர்வாகத்தின் அனுமதியின்றி தமது நிலையத்தில் தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றை நடாத்தியதை அடுத்து இப்பகுதி மக்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

சனசமூக நிலையங்களுக்கென அப்பகுதி மக்களால் தெரிவான நிர்வாகமொன்று செயற்பாட்டில் இருக்கும்போது அவற்றின் எழுத்து அனுமதியுடன் கூட்டங்களை நடாத்த தேர்தல்கள் ஆணையாளர் அறிவுறுத்தியுள்ள நிலையில் இவ்வாறு ஒழுங்கீனமாக நடந்து கொள்வது தமக்கு வருத்தமளிப்பதாக அவர் தெரிவித்தார்.

தமது பிரசாரங்களை முன்னெடுக்க விரும்பும் அரசியல் கட்சிகள் தேர்தல் ஒழுங்கு விதிகளை அனுமதித்து அந்தப் பகுதி உள்ளூரமைப்புகளின் அனுமதியுடன் கூட்டங்களை நடாத்தும் போதே அதனை மக்கள் சாதகமாக நோக்குவர் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-168)

# யாழில் இந்து ஆராய்ச்சி மாநாடு

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை இந்து மாமன்றம் இவ்வாண்டுக்கான இந்து ஆராய்ச்சி மாநாட்டை யாழில் நடாத்தவுள்ளது. இந்து மாமன்றம் தனது 60ஆவது ஆண்டு நிறைவையொட்டி நடாத்தும் இவ்வாராய்ச்சி மாநாடு நல்லூர் ஸ்ரீதுர்க்கா மணி மண்டபத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை தொடக்கம் ஞாயிற்றுக்கிழமை வரை இடம்பெறவுள்ளது.

இம்மாநாடு ஈழத்து இந்து மதத்தின் வரலாற்று வளர்ச்சிப்போக்கு எனும் தொனிப் பொருளில் இடம்பெறவுள்ளது.






பச்சிலைப்பள்ளி பிரதேசத்திற்குட்பட்ட தருமக்கேணி இளம்புயல் விளையாட்டுக்கழகத்தினால் அண்மையில் நடாத்தப்பட்ட விளையாட்டுப் போட்டியில் வீரர்கள் மற்றும் பார்வையாளர்கள் அமர்ந்திருப்பதையும், வெற்றிபெற்ற அணிக்கான வெற்றிக்கேடயம் வழங்கி வைக்கப்படுவதையும் காணலாம்.

# சுமந்திரனின் பிரசாரக் கூட்டத்தை புறக்கணித்தனர் மக்கள்

## பங்காளிக் கட்சிகளும் பகிஷ்கரிப்பு



(பருத்தித்துறை)

சுமந்திரனிற்கு ஆதரவு தேடும் வகையினில் பருத்தித்துறை கடற்கரையினில் தமிழரசுக்கட்சியினால் கூட்டப்பட்ட பொதுக்கூட்டம பிசுபிசுத்துள்ளது.

மிகக் குறைவான மக்களுடன் கூட்டம் கூடி கலைந்துள்ளது. கட்சி தலைவர் இரா.சமபந்தன் மற்றும் தமிழரசுக்கட்சி தலைவர் மாவை சேனாதிராசா பங்கு கொண்ட கூட்டத்தினில் பங காளிக்கட்சிகள் எவையும் பங்கெடுத்திருக்கவில்லை.

அதன் தலைவர்கள் மற்றும் அதன் சார்பினில் போட்டியிடும் வேட்பாளர்கள் எவரும் பங்கெடுத திருக்காமை சுமந்திரனை புறக்கணிக்கும் மனோநிலையினில் உள்ளமை மற்றும் உட்கட்சி முரண்பாடுகளை வெளிப்படுத்தி நின்றதை காணக்கூடியதாக இருந்தது.

4 மணிக்கு கூட்டம் ஆரம்பமாகுமென தெரிவிக்கப்பட்ட போதும் இரண்டு மணிநேர தாமதத்தின் பின்னரே கூட்டம் தொடங்கியது. முன்னதாக அப்பகுதியினில் கூட்டத்தை நடாத்த வேண்டாமென அப்பகுதியைச் சேர்ந்த கொட்டடி பொது அமைப்புக்கள் போர்க் கொடி தூக்கியிருந்தன.

எனினும் அவர்கள் குழப்பத்தினில் ஈடுபடலாமென்ற அச்சத்தினில் பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர். சுமநதிரனை புகழ்ந்து பாடுவதினில் சம்பந்தர், மாவை குதித்திருந்தனர்.

அப்பகுதியை பிரதிநிதித்துவப்படுத்தும் பெண் வேட்பாளரான மதினி நெல்சனை உரையாற்ற சுமந்திரன் அனுமதித்திருக்கவில்லை. இதனால் வந்திருந்த அவரது ஆதரவாளர்கள் கடும் சீற்றத்தினிலிருந்தனர்.

வடமராட்சி மக்களது ஒன்றிணைந்த புறக்கணிப்பு கூட்டமைப்பு தலைமைக்கு வழங்கப்பட்டுள்ள முக்கிய சமிக்ஞை என வடமாகாணசபை உறுப்பினர் சுகிர்தன் தெரிவித்தார். அத்துடன் தாம் போன்ற வளர்ந்து வரும் அரசியல் தரப்புக்களது எதிர்காலத்தை இருண்டதாக்கிவிடுமெனவும் அவர்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

# கட்டாக்காலி நாய்களை கட்டுப்படுத்தக் கோரிக்கை

(வவுனியா)

வவுனியாவில் கட்டாக்காலி நாய்களின் தொல்லையை கட்டுப்படுத்த அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் முன்வராத பட்டசத்தில் நாய்கடிக்கு இலக்காவோர் தொகை அதிகரிக்கும் என பொது மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் கட்டாக்காலி நாய்களின் தொகை அதிகரித்துச் செல்கிறது. கடந்த யுத்தகாலத்தில் கட்டாக்காலிநாய்கள் ஏராளமாக பெருக்கமடைந்திருந்தன. இத்தொகை தற்போதும் அதிகரித்திருக்கிறது.

இதனை கட்டுப்படுத்த அரச அரசசார்பற்ற நிறுவனங்கள் முனவராத பட்சத்தில் இத்தொகை மேலும் அதிகரிக்கும். இந்நாய்கள் வர்த்தக நிலையங்கள் மற்றும் பொது இடங்களில் தமது பொழுதை கழிக்கின்றன.

இதனால் பொது இடங்களில பாடசாலை சிறுவர்கள் உட்பட பலரும் நாய்கடிக்கிலக்காகின்றனர் என பொதுமக்கள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்படுகிறது.

# கத்தோலிக்க மறையாசிரியர் சான்றிதழ் பரீட்சைக்கு விண்ணப்பம் கோரல்

கத்தோலிக்க மறையாசிரியராருக்கான சான்றிதழ் , பரீட்சைக்கு இலங்கை பரீட்சைகள் திணைக்களம் விண்ணப்பங்களை போரியுள்ளது.

இதற்கான விண்ணப்பப்படிவங்களை கல்வி அமைச்சில் பதிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கு ஏற்கனவே அனுப்பி வைத்துள்ளதாகவும் மும்மொழிகளிலும் இப்பரீட்சையை நடாத்த ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாகவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் வெளியிட்டுள்ள அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை விண்ணப்பப் படிவங்கள் கிடைக்கப்பெறாத மறைப் பாடசாலைகள் எதிர்வரும் 10 ஆம் திகதிக்குமுன் பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு, வெளிநாட்டு பரீட்சைகள் கிளை, இலங்கை பரீட்சைகள் திணைக்களம் தபால்பெட்டி இலக்கம். 1503 கொழும்பு என்ற முகவரியுடன் தொடர்பு கொண்டு விண்ணப்பங்களை பெற்றுக் கொள்ள முடியுமென அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தகைமையுடைய தனிப்பட்ட பரீட்சார்த்தி ஒருவர் இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கவிரும்பின் அண்மையிலுள்ள மறைப் பாடசாலை ஊடாக பரீட்சைக் கட்டணமாக 150 ரூபாவை செலுத்தி இப்பரீட்சைக்கு தோற்ற முடியுமெனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஒக்ரோபரில் நடாத்தப்படவுள்ள இப்பரீட்சைக்கான விண்ணப்பங்களை அடுத்தமாதம் 27 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்குமாறும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் அந்த அறிவிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# 12 ஆம் ஆண்டு நிறைவும் மலர் வெளியீட்டு விழாவும்

கனடா' நெடுந்தீவு பாடசாலைகளின் பழைய மாணவர்கள் மன்றத்தின் 12ஆவது ஆண்டு நிறைவு விழாவும் பகிர் மலர் வெளியீட்டு விழாவும் நாளை புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நெடுந்தீவு பிரதேசசபையின் தேவானந்தா கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பழைய மாணவர் சங்கத்தின் நெடுந்தீவுக் கிளைத் தலைவர் ஏ. அருந்தவசீலன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வின் பிரதம விருந்தினராக தீவக வலய கல்விப் பணிப்பாளர் ரி.ஜோன் குயின்ரஸ், கௌரவ விருந்தினராக நெடுந்தீவு பிரதேச செயலர் சிவராஜசிங்கம் ஜெயகாந்த், சிறப்பு விருந்தினர்களாக வடமாகாணசபை ஆளுநரின் பிரதிச் செயலாளர் கே.எஸ். செல்வநாயகம், நெடுந்தீவு பிரதேசசபை தவிசாளர் எஸ்.பி. அருளப்பு மற்றும் நெடுந்தீவு ப.நோ.கூ.சங்கத் தலைவர் க.கேதீஸ்வரநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

# தபால் மூல வாக்களிப்பு 6967 பேர் தகுதி வன்னியில்

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் வன்னி மாவட்டத்தில் தபால் மூலம் வாக்களிக்கவென 6967 பேர் தகுதி பெற்றுள்ளனர். மன்னார் மாவட்டத்தில் 2654 பேரும் வவுனியா மாவட்டத்தில் 2670 பேரும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 1643 பேரும் தபால் மூலம் வாக்களிக்கும் தகைமை பெற்றுள்ளனர். மூன்று மாவட்டத்துக்குமான வாக்குச் சீட்டுகள் கடந்த 22 ஆம் திகதி வவுனியா மாவட்ட செயலகத்துக்கு எடுத்துவரப்பட்டு 23 ஆம் திகதி முல்லைத்தீவுக்கும் மன்னாருக்கும் அனுப்பி வைக்கப்பட்டன.

# பொது மக்களுக்கான நடமாடும் சேவை



(வல்வெட்டித்துறை)

வல்வெட்டித்துறை பொலிஸாரின் பொதுமக்களுக்கான நடமாடும் சேவையொன்று பொலிகண்டி கிழக்கு கிராம சேவகர் பிரிவில் நேற்றுமுன் தினம் நடைபெற்றது.

தேசிய அடையாள அட்டையை பெறுவதில் சிரமங்களை எதிர் கொள்ளும் பொதுமக்கள் பிறப்பு, இறப்பு அத்தாட்சிப்பத்திரம் மற்றும் கடவுச்சீட்டுக்களை இலகுவாக பெறுவதற்கான ஆலோசனை கூட்டமாக இது அமைந்தது.

உள்ளூரில் சிறு பிணக்குகள் ஏற்படும் போது அவற்றை தவிர்த்து ஒற்றுமையாக செயற்படுவதற்கான ஆலோசனைகள், சட்டவிரோத மது பாவனை, மற்றும் போதைப்பொருள் பாவனையில் இளம் சந்ததியினர் எதிர்கொள்ளும் அவலங்களை விளக்கும் விழிப்புணர்வு கருத்தரங்காக இது அமைந்தது.

பின் தங்கிய பகுதிகளில் வாழும மக்களுக்கு சட்டம், ஒழுங்கு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதாகவும், இம்மக்கள் தமக்கான குடியுரிமை ஆவணங்களை இலகுவாக பெறுவதற்கான வழிமுறைகளை அறிந்து கொள்ளும் வரையிலும் பொலிஸாரின் இந்த நடமாடும் சேவை அமைந்திருந்தது.

பொலிகண்டி பகுதியைச் சேர்ந்த பெரும் எண்ணிக்கையான பொது மக்கள் இந்த நடமாடும் சேவையில் கலந்து கொணட பயனுள்ள சந்திப்பாக இது அமைந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ,18)


நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2015

(தேர்தல் மாவட்டம் — வன்னி)



அன்ரனி அருள்ராஜசேகர்

(சாந்தன்)

மாவட்ட இணைப்பாளர் வவுனியா



X | 1

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)

பதவியும் பணமும் பண்புள்ளவனைக்கூட
பாழ்பட்டவனாக மாற்றிவிடுகின்றன *-அன்புவழியூர்க்கவிராயர் -*

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## போழிபோக்கு வீர உரைகள்!

வடக்கு கிழக்கு மாகாணங்கள் இணைந்த அலகைக் கொண்ட சமஷ்டிக் கட்டமைப்புக்குள் தீர்வு என்பதை இந்தத் தேர்தல் விஞ்ஞாபனத்திலும் சொல்லியிருக்கிறது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.

இதற்கு முந்திய தேர்தல் விஞ்ஞாபனங்களிலும் இதைச் சொல்லியுள்ளது. இந்த ஆறு வருடங்களிலும் அதற்கான எந்த முயற்சிகளைச் செய்து அதன் சாதக பாதகங்களை ஆராய்ந்திருக்கிறது கூட்டமைப்பு?

இடையில் ஒரு ஆறு மாதம் அவர்களே கொண்டு வந்ததாகச் சொல்லிக் கொண்ட ஆட்சியும், அதில் நிறைவேற்றுச்சபை உறுப்பினராகக் கூட்டமைப்பும் இருந்திருக்கிறது.

வடக்கு கிழக்கு இணைப்புக்குள் சமஷ்டிக் கட்டமைப்பு அலகுக்கு தெற்கிலோ சர்வதேசத்திலோ எந்த ஒரு தரப்பிடமிருந்தாவது அதற்கான இணக்கப்பாட்டைப் பெற்றுக் கொள்ளும் முயற்சியைச் செய்துபார்த்து அதன் சாத்தியத்தைப் பரிசீலித்திருக்கிறதா? அதில் கிடைத்த பெறுபேறு என்ன?

அதைச் சொல்லாமலே, அதுபற்றிய பேச்சுக்களை நடத்தாமலே தேர்தலுக்குத் தேர்தல் வந்து, “அவர்கள் ஒற்றையாட்சிக்குள்தான் தீர்வு என்கிறார்கள்; அதை எதிர்ப்பதற்கு வாக்குகள் மூலம் ஒற்றுமையைக் காட்டுங்கள்” என்று கேட்டுக்கேட்டு, ஆன பலன் என்ன?

தெளிவாக வரையறுக்காமல், மறுதரப்பின் கருத்துக்களைப் பற்றி லட்சியமே செய்யாமல், ‘வடக்கு கிழக்கு இணைந்த சமஷ்டி’ என்று போடிபோக்காக இவர்கள் போடும் குண்டை, தெற்கின் இரு பெரிய கட்சிகளுமே... ஏன் பாராளுமன்ற அங்கத்துவம் கொண்ட ஏனைய சிறு கட்சிகளுமே ஏற்றுக்கொள்ளவில்லை.

“ஒற்றையாட்சிக்குள் தீர்வு என்று தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் சொல்லியிருக்கும் ஐ.தே.க. மீது கூட்டமைப்புத் தலைவர் சம்பந்தன் கடும் தாக்கு” என்கிறது நேற்றைய பத்திரிகைச் செய்தி.

தேர்தலின் பின் பிரதமராகப் போவது ரணிலா மகிந்தவா என்பதாகத்தான் தெற்கின் போட்டி நிலைமை இருக்கிறது. மகிந்த தீர்வு தரமாட்டார் என்பதைக் கூட்டமைப்பு ஏற்கனவே சொல்லிவிட்டது.

இப்போது ரணிலும் தரப்போவதில்லை என்று கூட்டமைப்புத் தலைவரே கூறுகிறார் என்றால், “2016-ல் தீர்வு நிச்சயம்” என்று அவர் கூறுவது பச்சையான ஏமாற்றுப் பேச்சல்லவா! பாராளுமன்றத்தைப் பகைத்துக்கொண்டு மைத்திரி தனியாகத் தீர்வு தருவார் என்பது நம்பக்கூடிய கதையா?

“நாங்கள் சொல்லும் சமஷ்டித் தீர்வு என்பது இந்த இந்த முறையிலானது; அது பிரிவினைக்குச் சமாந்தரமானது என்று நீங்கள் பயப்படக் கூடியது அல்ல” என்று அங்கு நியாயமாகச் சிந்திக்கக் கூடியவர்களுக்காவது விளங்க வைத்திருக்க வேண்டுமல்லவா?

உடனேயே அங்கே நியாயமாகச் சிந்திக்கக் கூடியவர்களே இல்லை என்று ஒரு சமூகத்தையே எதிரிகளாய்க் கட்டமைக்கும் இனவாதக் கோஷத்தைத் தூக்குவது, யாரை இனவாதிகளாகவும் பாசிஸ்ட்டுகளாகவும் காட்டும்?

மாறாக, கூட்டமைப்பின் மற்றொரு தலைவரான பிரேமச்சந்திரன் சொல்கிறார்: “நாங்கள் சமஷ்டியைக் கேட்கிறோம்; நீங்கள் ஒற்றையாட்சிக்குள் தீர்வு என்பீர்களானால் எங்களைத் தனித்துப் போகும் முடிவுக்குத் தள்ளுவதாகத்தான் முடியும்” என்று பொறுப்பேயற்ற விதத்தில் தெற்கின் சந்தேகங்களுக்கு எண்ணெய் வார்க்கிறார்.

தேர்தலுக்காக மக்களுக்குக் கிளுகிளுப்பேற்றும் எதையாவது பேசி ‘தமிழ்வீர’ இமேஜைக் காட்டி எம்பியாகி விடுவதுதான் அவர் இலக்கு.

சமஷ்டியின் திட்ட வரைபைத் தெளிவாகச் சொல்லிச் சாத்தியங்களை உரையாடாமலே, சமஷ்டியை மறுத்தால் தனிநாடுதான் என்ற வீர உரைக்கு அவசியம் என்ன? தனிநாட்டுக்குள்ள சாத்தியங்கள் என்ன?

இன்று இந்தத் தனிநாட்டுப் பயமுறுத்தல் எதற்காக?

அவர்கள் எந்தவொரு தீர்வுக்கும் வந்துவிடக்கூடாது என்று அவர்களைப் பகைவர்களாகவே தூரநிறுத்தும் ‘தமிழ்எத்தனம்’ அல்லவா இது?

*- ஆசிரியர்*

# மைத்திரி - சந்திரிகா
# விரைவில் முக்கிய சந்திப்பு

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கும் இடையில் விரைவில் முக்கிய சந்திப்பொன்று இடம்பெறவிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தச் சந்திப்பு நேர்தலை மையமாகக் கொண்டே அமையவுளளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மாலைதீவிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, நாடு திரும்பியதன் பின்னர் இந்த சந்திப்பு இடம்பெறும்.

ஜனாதிபதியை சந்திப்பதற்கான நேரத்தை ஒதுக்கித் தருமாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா சார்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக அவரது தரப்பிலிருந்து தகவல்கள் வெளியாகியுள்ளன. பொதுத் தேர்தலுக்கான வேட்பு மனு விவகாரத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பிற்குள் முரண்பாடுகள் ஏற்பட்ட சந்தர்பத்தில் சந்திரிகா குமாரதுங்க, பிரித்தானியாவிற்கு பயணமானார்.

மேலும், பொதுத் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் செயயப்பட்ட காலத்தில் இடம்பெற்ற சில அரசியல் நடவடிக்கைகள் காரணமாக சந்திரிக்கா அதிருப்தியடைந்திருப்பதாகவும் தெரிய வந்துள்ளது.

இந்நிலையில், நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நாடு திரும்பிய அவர், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்திப்பதற்கு தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பில் கம்பஹா மாவட்டத்திற்கான வேட்பு மனுப் பட்டியலை சந்திரிகாவின் ஆலோசனையுடன் தயாரிக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சுசில் பிரேமஜயந்தவிற்கு அறிவித்திருந்தார்.

எனினும் சுசில் பிரேமஜயந்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆலோசனையின் அடிப்படையில் வேட்புமனு பட்டியலை தயார் செய்தமையால் கூட்டமைப்பிற்குள் சர்ச்சைகள் தோன்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சிறந்த ஊடகவியலாளர்களுக்கு விருது வழங்கும் விழா

இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கமும் இலங்கை பத்திரிகை ஸ்தாபனமும் இணைந்து 16 ஆவது வருடமாகவும் ஏற்பாடு செய்துள்ள 2014 ஆம் ஆண்டுக்கான அச்சு ஊடகத்துறையைச் சேர்ந்த சிறந்த ஊடகவியலாளர்களுக்கு விருது வழங்கும் நிகழ்வு இன்று மாலை 7 மணிக்கு கல்கிசை மவுண்ட்லெவனியா ஹோட்டலில் நடை பெறவுள்ளது.

இவ்வைபவத்திற்கு இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் முரண்பாட்டுத் தீர்வுக்குழுவின் தலைவரும் ஓய்வு பெற்ற நாடாளுமன்ற செயலாளர் நாயகமுமான நிஷால் செனவிரத்ன பிரதம அதிதியாக கலந்து கொள்கிறார்.

விருதுகளுக்காக தகுதியானவர்களை தெரிவு செய்வதற்காக இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தால் விண்ணப்பங்கள் கோரப்பட்டதற்கிணங்க அச்சு ஊடகத்துறையைச் சேர்ந்த ஊடகவியலாளர்களிடமிருந்து சமர்ப்பிக்கப்பட்டிருந்த சுமார் 250 இற்கும் மேற்பட்ட விண்ணப்பங்களில் இருந்து 14 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

வருடத்தின் சிறந்த ஊடகவியலாளர்களுக்கான மேர்வின் டி. சில்வா விருது, விறுவிறுப்பான செய்திக்கான விருது, புலனாய்வு செய்திக்கான விருது, சிறந்த சுற்றாடல் செய்திக்கான விருது, சிறந்த சமூக விடய அறிக்கையிடலுக்கான சுப்பிரமணியம் செட்டியார் விருது, சிறந்த விளையாட்டு செய்தியாளருக்கான விருது, இளம் செய்தியாளருக்கான டென்சில் பீரிஸ் விருது, சிறந்த புகைப்படப்பிடிப்பாளர் விருது, சிறந்த பத்திரிகை வடிவமைப்புக்கான விருது, சிறந்த வணிக செய்தியாளருக்கான விருது, சிறந்த கட்டுரையாளருக்கான உபாலி விஜேவர்த்தன விருது, சிறந்த கேலிச் சித்திர வரைஞருக்கான விருது, சிறந்த பத்தி எழுத்தாளருக்கான பீ.ஏ.சிரிவர்த்தன விருது, நெருக்கடி நிலைமையின் கீழ் கடமையாற்றியமைக்கான பேராசிரியர் கைலாசபதி விருது என்ற அடிப்படையில் இந்த 14 பிரிவுகளும் அடங்குகின்றன.

இந்தப் பிரிவுகளின் அடிப்படையிலான விருதுகளுக்கு மேலதிகமாக ஊடகத்துறைக்கு வாழ்நாள் முழுவதும் சேவையாற்றிய மூத்த ஊடகவியலாளர்கள் ஐந்து பேர் தெரிவு செய்யப்பட்டு வாழ் நாள் சாதனையாளர்களாக தங்கப்பதக்கம் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர்.

அவ்வகையில் 2014 ஆம் ஆண்டுக்கான வாழ்நாள் சாதனையாளர் விருதினை பெறவுள்ளோர்- பினோய் குமார் விக்கிரம சுரேந்திரா, இலத்தீப் பாரூக், நிஷால் ரட்னாயக்க, சரணபால பமுனுவா மற்றும் எஸ்.தில்லைநாதன் ஆகியோர்களாவார்.

# சந்திரிகா விசேட உரை

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க இன்று விசேட உரையொன்றை ஆற்றவுள்ளார். தற்போதைய அரசியல் சூழ்நிலைமை குறித்து அவர் உரையாற்ற உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை பாதுகாப்பது குறித்து கருத்து வெளியிடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் வேட்பு மனு பெற்றுக்கொண்ட, ஊழல் மோசடிகளில் ஈடுபட்ட தரப்பினர் தொடர்பிலும் தகவல்களை வெளியிடவுள்ளார். சந்திரிகா கடந்த 9 ஆம் திகதி வெளிநாட்டுக்கு விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார். வேட்பு மனு வழங்குவது தொடர்பில் ஏற்பட்ட சர்ச்சை காரணமாக அவர் வெளிநாட்டு விஜயமொன்றை மேற்கொண்டதாக அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. கடந்த 25 ஆம் திகதி நாடு திரும்பிய அவர் நாட்டின் அரசியல் சூழ்நிலைகளை அவதானித்து இன்று விசேட உரையொன்றை ஆற்றவுள்ளார்.

# கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது மகிந்தவின் தேர்தல் வியாபாரம்

## மேல் மாகாணசபை எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

பொதுத் தேர்தலுக்காக ஐ.ம.சு. கூட்டணியில் குருநாகல் மாவட்டத்தில் போட்டியிடவுள்ள முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தேர்தல் வியாபாரங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக மேல் மாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் ஜே.சீ.அலவத்துவல தெரிவித்துள்ளார்.

தம்பதெனிய பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், குருணாகல் நகரத்தில் அமைந்துள்ள ராஜபக்ஷவின் தேர்தல் அலுவலகத்தினுள் கரம் போட்டிற்கு அவசியமான குறைந்த பட்சம் நான்கு பேரேனும் இல்லை.

இவ்வாறான நிலைமையில், அம்பாந்தோட்டையில் இருந்து குருநாகல் மாவட்டத்திற்கு தப்பி வந்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பாதிக்கப்பட்டுள்ள நிலைமையினை காண முடிகின்றது.

முழு நாடும் நிராகரித்த ஒருவரை குருநாகலில் வெற்றியடைய செய்யும் அளவு முட்டாள் மக்கள் அம்மாவட்டத்தில் இல்லை என்பதனை மகிந்த ராஜபக்ஷ புரிந்துகொள்ள வேண்டும்.

குருநாகல் மாவட்டத்திற்கு மோசடி, ஊழல், கலாசாரத்தை அறிமுகப்படுத்திய கூட்டணி பெரும்பான்மை இம்முறை பொதுத்தேர்தலின் பின்னர் அரசியலில் இருந்து ஓய்வு பெறவுள்ளனர், அவர்களுக்கு இடையில் முன்னாள் ஜனாதிபதியும் உள்ளடக்கப்பட்டுள்ளார்.

நாட்டிற்கு அவசியமாக இருப்பது குடும்ப ஆட்சி அல்ல அனைத்து மக்களுக்கும் சுதந்திரமாக வாழக்கூடிய அபிவிருத்தியாகும், அதற்காக ஐக்கிய தேசியக் கட்சி மீது நம்பிக்கையை வைக்கவும். இப்பயணம் மேலும் வலுவடைய செய்வதற்காக குருநாகல் மாவட்டத்தில் போட்டியிடும் என்னுடன் இணைந்து கொள்ளுங்கள் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# ஈரான் அணுசக்தி உடன்படிக்கை: வெற்றி யாருக்கு?

தெ.ஞாலசீர்த்தி மீநிலங்கோ கட்டுரையிலிருந்து



**ஈரானுடனான அணுசக்தி உடன்படிக்கையை இஸ்ரேல் கடுமையாக எதிர்த்திருக்கிறது. இது ஓர் 'அதிர்ச்சி தரத்தக்க வரலாற்றுத் தவறு' என இஸ்ரேலின் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாஹு' கூறியுள்ளார். இவ்வுடன்படிக்கைய்ய வன்மையாகக் கண்டிக்கின்ற இன்னொரு நாடு சவுதி அரேபியா. மத்திய கிழக்கில் அமெரிக்க நலன்களின் எடுபிடிகளாக, காவலாளிகளாகச் செயற்படுகின்ற இவ்விரு நாடுகளின் கடும் எதிர்ப்புக்கு நடுவே அமெரிக்கா இப்பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ளது என்றால் இவ்விடயத்தில் அமெரிக்க நலன்களின் முக்கியத்துவத்தை விளங்குவதில் சிரமங்கள் இரா.**

**எல்லாப்** போர்களும் போர்க்களங்களில் நடப்பதில்லை. இப்போதெல்லாம் அநேகமான போர்கள் பேச்சு மேசைகளில் தான் நடக்கின்றன. அதனால் தானோ என்னவோ வென்றவர் யார்? என்பதை ஊடகங்களே முடிவெடுக்கின்றன.

எமக்குச் சொல்லப்படும் தகவல்களின் அடிப்படையில் முடிவை நாம் எட்டுகிறோம். பெரும்பாலான எமது முடிவுகளுக்கு மேற்குலக ஊடகங்களின் தகவல்களே அடிப்படையாக இருக்கின்றன.

ஆனால், அவை உண்மையல்ல எனப் பல தருணங்களில் கண்டிருக்கிறோம். அவ்வகையான இன்னொரு தருணத்தை வரலாறு - கடந்தவாரம் ஏற்படுத்தித் தந்தது. வரலாறு, தன் கடமையைச் செய்து கொண்டே இருக்கிறது.

கடந்தவாரம் ஈரானின் அணுசக்தித் திட்டம் தொடர்பாக எட்டப்பட்ட உடன்படிக்கை, பலவகைகளில் முக்கியமானது என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால், எல்லாமே போராகப் பார்க்கப்படுகின்ற நிலையில் யார் வெற்றியாளர் என்ற கேள்வியே முன்னகர்த்தப்படுகிறது.

இவ்வுடன்படிக்கை, அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவின் வெற்றியாகவும் ஈரானின் இயலாமையின் விளைவென்றும் மேற்குலக ஊடகங்கள் மெச்சுகின்றன. இவ்வுடன்படிக்கை எட்டப்பட்டதன் காரணங்களையும் இதனால் பூகோள ரீதியில், குறிப்பாக மத்திய கிழக்கில் ஏற்படப்போகும் புதிய அதிகாரச் சமநிலையையும் கவனித்தல் தகும்.

அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும் இடையிலான முரண்பாட்டின் வரலாறு மிகவும் நீண்டது. அதன் தொடர்ச்சியாகவே இந்த உடன்படிக்கையை நோக்க வேண்டியிருக்கிறது. ஈரானின் மீதான அமெரிக்க ஆதிக்கத்துக்கு அறுபது வருடங்களுக்கு முன்னமே அத்திவாரமிடப்பட்டது.

ஈரானின் ஆட்சித் தலைவர் மொஸாடெக், படுகொலையின் பின்பு அமெரிக்க-பிரித்தானிய முயற்சி மூலம் ஈரானில் முடியாட்சியொன்று நிறுவப்பட்டது.

அதைப்போன்ற பயங்கரமான சர்வாதிகாரக் கொடுங்கோன்மை ஆசியாவில் வேறெதுவும் இல்லை எனுமளவுக்கு அந்த ஆட்சி சகல எதிர்ப்பாளர்களையும் கடுங்கண்காணிப்பு, ஆட்கடத்தல், சித்திரவதை, கொலை என்பன மூலம் கட்டுப்படுத்தியது. அந்த ஆட்சி கொமெய்னி தலைமையிலான இஸ்லாமியப் புரட்சியால் 1979இல் தூக்கி எறியப்படும் வரை, அமெரிக்காவின் நெருங்கிய கூட்டாளியாகவே ஈரான் இருந்தது.

ஈரானின் பொருளாதாரம் அமெரிக்காவின் நெருக்குவாரங்களால் ஒரு புறமும் ஈரானிய ஆட்சியின் பழமைவாதப் போக்கால் இன்னொரு புறமும் பல சிக்கல்களை எதிர்நோக்கினாலும், ஆசியாவின் வலுவான ஒரு நாடாக ஈரான் வளர்ந்துள்ளது. மத்திய கிழக்கில் அமெரிக்க ஆதிக்கத்துக்குத் தடையாகவும் சீனாவைச் சுற்றி வளைத்துத் தனிமைப்படுத்தும் முயற்சிக்குத் தடையாகவும் உள்ள முக்கியமான ஒரு நாடு ஈரான். ஈரானில் ஓர் அமெரிக்கச் சார்பு ஆட்சியை நிறுவும் முயற்சியில் தோல்வி கண்ட பின்பே, ஈரான் பற்றிய கடும் போக்கை அமெரிக்கா மேற்கொண்டது. ஈரானுக்கு எதிரான கடும் போக்கு முஸ்லிம் மதவாத ஜனாதிபதி அஹ்மெடி நெஜாடினின் தெரிவுக்குப் பின்பு தீவிரமாகியது. அஹ்மெடி நெஜாடினுக்குப் பின்னான புதிய ஜனாதிபதியின் நெகிழ்வான போக்கும் மத்திய கிழக்கில் அதிகரிக்கும் ஈரானிய செல்வாக்கும் மத்திய கிழக்கில் இருக்கின்ற அமெரிக்கக் கூட்டாளி நாடுகள் சந்தித்துள்ள மோசமான பின்னடைவும் குறிப்பானவை.

ஈரான், தனது அணுசக்தியை விருத்தி செய்யவும் அணு உலைகளில் பயன்பட்ட யூரேனியத்தைச் செறிவுபடுத்தி மீண்டும் பயன்படுத்த ஆய்வுகளை நடத்தவும் கூடாது என அமெரிக்கா கடும் எதிர்ப்பைத் தெரிவித்து வந்துள்ளது. இந்த எதிர்ப்புக்கு இஸ்ரேலும் ஒரு முக்கியமான தூண்டு சக்தியாக இருக்கிறது. அமெரிக்க நெருக்குவாரத்தின் அடிப்படையில், சர்வதேச அணுசக்தி அதிகாரசபையில் அணுசக்தி தொடர்பான ஈரானின் செயற்பாடுகள் பற்றிய கண்டனத் தீர்மானம் ஒன்று 2005 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நிறைவேற்றப்பட்டது.

இந்தியாவும் அமெரிக்காவுடனான தனது புதிய நெருக்கத்தின் விளைவாக அதை ஆதரித்தது. இதனடிப்படையில் அமெரிக்க மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் பொருளாதாரத் தடைகள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

ஆனால், மத்திய கிழக்கில் தவிர்க்கவியலாத ஒரு சக்தியாக ஈரான் தடைகளையும் தாண்டி வளர்ந்துள்ளது. இப்பின்னணியிலேயே P5101 என்ற கூட்டு (அமெரிக்கா, பிரித்தானியா, பிரான்ஸ், ரஷ்யா, சீனா மற்றும் ஜேர்மனி) ஈரானின் அணுசக்தி திட்டம் தொடர்பில் பேச்சுவார்த்தைகளைத் தொடங்கின.

ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் தமது பொருளாதார நலன்களுக்காக ஈரானுடன் வணிக உறவைப் பேண வேண்டிய நிலையிலுள்ளன. அதே வேளை ஈரானின் அணுசக்தி விருத்திக்கு உதவிசெய்து வந்த ரஷ்யா, இதில் தவிர்க்கவியலாத அரங்காடியாக மாறியது. ஈரானின் அணுசக்திப் பிரச்சினையானது பாதுகாப்புச் சபைக்குப் போவதை சீனா' விரும்பவில்லை.

மத்திய கிழக்கில் அமெரிக்காவின் சரியும் ஆதிக்கம், இஸ்ரேலிய நெருக்குவாரங்களையும் தாண்டி அமெரிக்கா இவ்விடயத்தில் ஓர் உடன்படிக்கைக்கு வருவதை கட்டாயமாக்குகின்றது. அமெரிக்கா, கடந்த பத்தாண்டுகளில் ஈரான் தொடர்பில் இரண்டுவிதமான முனைப்புகளை மேற்கொண்டது.

ஒன்று ஈரானுடனான போரொன்றுக்கு அமெரிக்கா ஆயத்தமாவது போன்றதொரு தோற்றத்தை உருவாக்கியது. மற்றையது, ஈரானைத் தனிமைப்படுத்துகிற முயற்சிகளைத் தீவிரமாக்கியது. அமெரிக்கா, ஏற்கனவே உருவாக்கியுள்ள போர்க்களங்களில் ஏற்பட்டுள்ள பின்னடைவும் ஆப்கானிலும் ஈராக்கிலும் முடிவற்றுத் தொடரும் போர்களும் இன்னொரு போரைத் தொடங்குவதைச் சாத்தியமற்றதாக்கின.

அமெரிக்காவின் நெருக்கடிக்குள்ளாகியிருக்கும் பொருளாதாரம், விரும்பினாலும் ஈரான் மீது போரை நடாத்த முடியாத நிலைக்கு அமெரிக்காவைத் தள்ளியுள்ளது. ஈரானுக்கு ரஷ்யாவும் சீனாவும் அதன் நட்பு நாடுகளும் வழங்கி வந்த ஆதரவும், மத்திய கிழக்கில் அதிகரித்த ஈரானின் செல்வாக்கும் ஈரானைத் தனிமைப்படுத்தும் அமெரிக்க முயற்சிகளுக்குத் தடையானது.

ஈரானிய ஆட்சியாளர்கள் அமெரிக்க-இஸ்ரேலிய நெருக்குவாரங்களுக்குப் பணியப் போவதில்லை என்பதில் உறுதியாயிருந்தனர். ஏனெனில் அமெரிக்காவுக்கு ஈரான் பணிந்து போனால்,. அமெரிக்கா அதை மேலும் அடக்கியாளவே முற்படும் என்பதை அவர்கள் நன்கறிந்திருந்தனர்.

இந்தச் சூழலிலேயே ஈரானின் அணுசக்தி தொடர்பான உடன்படிக்கையொன்றை எட்டுவதற்கான முனைப்புகள் முதன்மை பெற்றன. பேச்சுக்களில் பங்குப்பற்றிய வேறெவரையும் விட இவ்வுடன்படிக்கையை எட்டுவதில் அமெரிக்கா காட்டிய அதிக அக்கறை, பலர் கவனிக்க மறந்தவொன்று.

1979இல் நடந்த ஈரானியப் புரட்சியைத் தொடர்ந்து அமெரிக்காவின் மன்னிக்கமுடியாத எதிரியாக ஈரான் மாறியது. மிக அண்மைக்காலம் வரை ஈரானுடன் எதுவிதமான பேச்சுவார்த்தைகளையும் மேற்கொள்ளாத, மேற்கொள்ள விரும்பாத அமெரிக்காவின் இத் திடீர் மனமாற்றம் ஆராயப் பயனுள்ளது. குறிப்பாக இஸ்ரேலிய லொபிகளின் ஆளுகைக்குட்பட்ட அமெரிக்க வெளியுறவுக் கொள்கை வகுப்பாளர்கள் இஸ்ரேல், முற்றுமுழுதாக எதிர்க்கின்ற ஒரு செயற்பாட்டை முன்னெடுக்கிறார்கள் என்றால் அதன் பின்னால் மிகப் பாரிய நலன்கள் ஒளிந்துள்ளன என்பது விளங்க வேண்டும்.

எட்டப்பட்ட உடன்படிக்கையை இஸ்ரேல் கடுமையாக எதிர்த்திருக்கிறது. இது ஓர் "அதிர்ச்சி தரத்தக்க வரலாற்றுத் தவறு" என இஸ்ரேலின் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாஹு" கூறியுள்ளார். இவ்வுடன்படிக்கையை வன்மையாகக் கண்டிக்கின்ற இன்னொரு நாடு சவுதி அரேபியா. மத்திய கிழக்கில் அமெரிக்க நலன்களின் எடுபிடிகளாக, காவலாளிகளாகச் செயற்படுகின்ற இவ்விரு நாடுகளின் கடும் எதிர்ப்புக்கு நடுவே அமெரிக்கா இப்பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ளது என்றால் இவ்விடயத்தில் அமெரிக்க நலன்களின் முக்கியத்துவத்தை விளங்குவதில் சிரமங்கள் இரா.

உலகில் எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகளில் ஈரான் முக்கியமானது. அதிலும் குறிப்பாக எரிவாயு உற்பத்தியில் ஈரானின் இடம் பிரதானமானது. ரஷ்யாவுக்கு அடுத்தபடியாக உலகில் இயற்கை வாயுக்களை அதிகம் கொண்ட நாடு ஈரான். இந்த இயற்கை வாயுக்களும் எரிவாயுக்களையும் சர்வதேச சந்தையில் விற்பதில் முன்னிலையில் இருப்பது ரஷ்யா.

பொருளாதாரத் தடைகள் காரணமாக ஈரானால் இவற்றை அமெரிக்க மற்றும் ஐரோப்பிய சந்தைகளுக்கு விற்க முடிவதில்லை. ஈரானுடன் உடன்பாட்டை எட்டுவதன் மூலம் இரண்டு விடயங்களை அமெரிக்கா சாதிக்க நினைக்கிறது. முதலாவது உக்ரேன் சிக்கலைத் தொடர்ந்து அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தால் ரஷ்யா மீது விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடைகள், ரஷ்யாவிலிருந்து எரிவாயுக்களையும் இயற்கை வாயுக்களையும் வாங்க இயலாமல் செய்துள்ளன. எனவே, ஈரானுடனான உடன்படிக்கையின் விளைவாக ஈரான் மீதான பொருளாதாரத் தடைகளை நீக்குவதன் மூலம் எரிவாயுக்களையும் இயற்கை வாயுக்களையும் ஈரானிடமிருந்து பெறமுடியும்.

இதனூடு ரஷ்யாவுடனான பொருளாதாரத் தடைகளை நீடிப்பதன் ஊடு, ரஷ்யாவின் பொருளாதாரத்தை நெருக்கடிக்குள்ளாக்கல். இரண்டாவது முதன்மையான வழங்குனர் என்ற வகையில் உலக சந்தையின் எரிவாயுக்களினதும் இயற்கை வாயுக்களினதும் விலைகளை ரஷ்யா தீர்மானிக்கிறது. ஈரான் மீதான தடைநீக்கமானது ஈரானானது ரஷ்யாவின் சந்தைக்கு சவால் விடுக்கும் நிலையை உருவாக்கும்.

இது ஆசிய, கிழக்கு ஐரோப்பிய ஆபிரிக்க சந்தைகளில் ரஷ்யாவின் ஏகபோகத்தைக் கேள்விக்குள்ளாக்கும். நீண்டகால நோக்கில் ஈரானை விட ரஷ்யாவையே அமெரிக்கா பிரதான எதிரியாகக் கருதுகிறது.

இவ்வுடன்படிக்கையை எட்டுவதில் பிரதான தடைக்கல்லாக இருந்தது அமெரிக்கா பொருளாதாரத் தடைகளை முற்றாக நீக்க மறுத்தமையாகும். இவ்விடத்தில் ரஷ்யாவின் வகிபாகம் முக்கியமானது. பொருளாதாரத் தடைகள் முற்றாக நீக்கப்படமாட்டாதெனின் பேசிப் பயனில்லை என்ற நிலைப்பாட்டை ரஷ்யா எடுத்தது. அமெரிக்க மைய உலகுக்கு மாற்றாக ரஷ்யா-சீனா இணைந்து உருவாக்கியிருக்கும் ஷங்ஹாய் ஒத்துழைப்பு அமைப்பின் முக்கிய பங்காளியாக ஈரான் இருக்கிறது. இவ்வமைப்புக்கு தலைமையை ரஷ்யா வழங்குகின்ற நிலையில் பொருளாதாரத் தடைகள் நீக்கப்படுவதானது ரஷ்ய- ஈரானிய பொருளாதார உறவுகளை மேலும் மேம்படுத்தும். ஈரானுக்கான ரஷ்யாவினது தொடர்ச்சியான ஆதரவு ரஷ்யாவை நம்பிக்கையான பங்காளியாக்கியுள்ளது.

(13ஆம் பக்கம் பார்க்க)

# கூட்டமைப்பின் விஞ்ஞாபனம் இறைமைக்கு அச்சுறுத்தல்

## திஸ்ஸ அத்தநாயக்க எச்சரிக்கை



(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் நாட்டின் இறைமைக்கு பெரும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளதாக ஐக்கிய பிரஜைகள் முன்னணியின் தலைவர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளுக்கு மன்னிப்பு வழங்கப்பட வேண்டுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரி வருகின்றது. கூட்டமைப்பின் தேர்தல் விஞ் ஞாபனம் யுத்த வெற்றிக்கு சவால் விடுக்கும் வகையில் அமைந்துள்ளது.

வடக்கு கிழக்கு மாகாணங்களை மீள இணைக்க வேண்டுமெனவும், சுயாட்சி அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டுமெனவும் கோரப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் கடந்த 2012 முதல் 2014 ஆம் ஆண்டு வரையில் நிறைவேற்றப்பட்ட அனைத்து தீர்மானங்களையும் அமுல்படுத்த வேண்டுமெனவும தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு கோரி வருகின்றது.

13 ஆம் திருத்தச் சட்டத்திற்கு அப்பாலான தீர்வுத் திட்டமொன்றை அமுல்படுத்த வேண்டுமெனவும் கோரியுள்ளது.

நாட்டின் இறைமை பற்றி பேசி வரும் சம்பிக்க ரணவக்க, அதுரலிய ரதன தேரர் ஆகியோர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு குறித்த தங்களது கருத்துக்களை வெளியிட வேண்டுமெனவும் அவர் கோரிகை விடுத்துள்ளார்.

# சரத் என் சில்வாவின் நடவடிக்கைகளில் அதிருப்தி

(கொழும்பு)

முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வாவின் நடவடிக்கைகள் அதிருப்தி அளிக்கும் வகையில் அமைந்துள்ளதாக சட்டத்தரணிகள் சங்கம் அறிவித்துள்ளது.

ஜனநாயகத்திற்கான சட்டத்தரணிகள் மற்றும் சட்டத்தரணிகள் கூட்டமைப்பு ஆகியன இவ்வாறு எதிர்ப்பை வெளியிட்டுள்ளன.

ஹெல்பிங் அம்பாந்தோட்டை வழக்கில் மகிந்த ராஜபக்ஷவிற்கு சார்பாக தீர்ப்பளித்தமையை இட்டு வருந்துவதாக சரத் என் சில்வா கடந்த காலங்களில் தெரிவித்திருந்தார். எனினும் தற்போது அந்த கூற்றுக்களை அவர் மறுத்து வருகின்றார்.

முன்னாள் பிரதம நீதியரசர் என் சில்வாவின் நடவடிக்கைகள் நீதிமன்றின் நன்மதிப்பிற்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளதாகத் தெரிவித்துள்ளனர். ஹெல்பிங் அம்பாந்தோட்டை வழக்கில் மகிந்தவிற்கு உதவிகளை வழங்கியமைக்காக மக்களிடம் மன்னிப்பு கோருவதாகசரத் என்சில்வர் தெரிவித்திருந்தார்.

எனினும் தற்போது அவ்வாறான எவ்வித கூற்றையும் கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது வெளியிடவில்லை என சரத் என் சில்வா கூறி வருவதாகவும், இதனை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் சட்டத்தரணிகள் தெரிவித்துள்ளனர்.

# பிரதமர் பதவியை மகிந்தவுக்கு கொடையாக வழங்கியுள்ளேன்

## நிமல் சிறிபால டி சில்வா

(கொழும்பு)

பிரதமர் பதவியை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு கொடையாக வழங்கியுள்ளதாக முன்னாள் எதிர்க்கட்சித் தலை வர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் என்ற ரீதியில் பொதுவான நடைமுறையின் அடிப்படையில் அடுத்த பிரதமர் நானே. எனினும் நான் வெஸ ஸந்தர சிறிசங்கபோ போன்ற பண்டைய கொடையாளிகளைப் போன்று பிரதமர் பதவியை கொடையாக வழங்கினேன்.

எனக்கு வர வேண்டிய பதவியை நான் மிகுந்த விருப்பத்துடன் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு விட்டுக் கொடுத்தேன். ஏனெனில் நாம் மக்களின் பக்கம் இருக்கின்றோம்.

மக்களின் ஆசீர்வாதம் ஏற்படும் வகையில் நாம் அரசியல் செய்ய வேண்டும். பதவிகள் பெரிதல்ல. கட்சி ஆதரவாளர்களே எமக்கு முக்கியம்.

கட்சி ஆதரவாளர்களை பாதுகாத்து, கட்சியை வெற்றி பெறச் செய்ய வேண்டும்.

எமது அரசாங்கம் இருந்த காரணத்தினால் பாரியளவில் அபிவிருத்தி மேற்கொள்ள முடிந்தது.


மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக நியமிக்க நம் அனைவருக்கும் தேவைப்பாடு உண்டு.

அவருக்கு 113 ஐ விடவும் அதிகளவான ஆசனங்களை வழங்க வேண்டும் என நிமல் சிறிபால டி சில்வா ஊவா மாகாணத்தில் நடைபெற்ற பிரசாரக் கூட்டமொன்றில் தெரிவித்துள்ளார்.

சிங்கள வரலாற்றில் வெஸ் ஸந்தர சிறிசங்கபோ போன்றோர் மிகப்பெரிய கொடையாளிகளாக கருதப்படுகின்றனர் என்

# ஆசிய பிராந்திய வலயத்தில் போதைப்பொருளை ஒழிக்கப்பாடுபடுவேன்

## ஜனாதிபதி மாலைதீவில் சூளுரை



ஆசிய பிராந்திய வலயத்தில போதைப்பொருளை இல்லாதொழிக்க தாம் தொடர்ந்தும் பாடுபடுவேன் என, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

மாலைத்தீவின் 50ஆவது சுதந்திர தின பொன்விழாவில் கலந்துகொள்ளும் நோக்கில் ஜனாதிபதி மைத்திரி நேற்று முன்தினம் பிற்பகல் மாலைதீவு சென்றார். இதன்போது, அந்நாட்டு ஜனாதிபதி அப்துல்லா யாமீனை சந்தித்து இது குறித்து உரையாடினார்.

தெற்காசியாவுக்கே சவாலான ஒன்றாக மாறியுள்ள போதைப் பொருளை, தமது ஆட்சிக்காலத்தில் முற்றாக ஒழிப்பதாக கூறிய ஜனாதிபதி மைத்திரி, இதற்கு தெற்காசிய வலயத்தின் அனைத்து அரச தலைவர்களும் பொது இணக்கப்பாட்டின் அடிப்படையில் ஒன்றிணைய வேண்டுமென தெரிவித்தார்.

அதனைத் தவிர கிரமமான உணவு உற்பத்தி மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு உள்ளிட்ட விடயங்களையும், தாம் மேம்படுத்தவுள்ளதாகவும் ஜனாதிபதி இதன் போது குறிப்பிட்டார்.

இதனையடுத்து இலங்கையால் முன்னெடுக்கப்படும் அனைத்து வேலைத்திட்டங்களுக்கும் மாலைத்தீவு தொடர்ந்தும் ஒத்தாசையுடன் செயற்படும் என, அந்நாட்டு ஜனாதிபதி தெரிவித்தார்.


நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2015

[தேர்தல் மாவட்டம் – வன்னி]



அ.ஜெயராஜ்



X

2

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)


# இலங்கையில் கார்கள் உற்பத்தி செய்யப்படும்

## பிரதமர் ரணில் தேர்தல் வாக்குறுதி

(கொழும்பு)

இலங்கையில் கப்பல்களும் கார்களும் உற்பத்தி செய்யப்படும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் நுவரெலியாவில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு முதலீட்டாளர்களை ஈர்க்கும் நோக்கில் எதிர்வரும் ஆண்டுகளில் இவ்வாறு கார் மற்றும் கப்பல் உற்பத்திகள் மேற்கொள்ளப்படும்.

அம்பாந்தோட்டையில் கப்பல் உற்பத்தி நிறுவனமொன்றை அமைப்பதாக சீன நிறுவனமொன்று உறுதிமொழி வழங்கியுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

குளியாப்பிட்டியில் வொக்ஸ்வோகன் கார் நிறுவனம் உற்பத்திகளை ஆரம்பிக்க திட்டமிட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

திருகோணமலையில் அனல் மின் நிலையமொன்று அமைக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு முதலீடுகள் இன்று நாட்டில் தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்த முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பெருந்தோட்டப் பகுதி மாணவர்கள் கல்வி பயில்வதற்கு விஞ்ஞான பிரிவை உடைய உயர்தரப் பாடசாலைகள் அமைக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நுவரெலியா விசேட சுற்றுலா மையமாக மாற்றப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# இலங்கை – இந்திய கப்பல் சேவை



இலங்கை மற்றும் இந்தியாவிற்கு இடையில் கப்பல் சேவை ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளதாக வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பல் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது .

இந்த விடயம் தொடர்பில் துறைமுக அதிகாரிகளிடம் கலந்துரையாடப்படுவதாகவும் கூட்டுத்தாபனத்தின் தலைவர் சசி தனதுங்க தெரிவித்துள்ளார்.

கப்பல் சேவைக்கு தேவையான சுங்கம் உள்ளிட்ட ஏனைய துறைசார் உத்தியோகஸ்தர்களை இணைத்துக் கொள்வது தொடர்பிலும் கலந்துரையாடப்படுகின்றது.

பயணிகள் கட்டணம் தொடர்பில் இது வரையில் தீர்மானிக்கவில்லை. பயணிகள் எண்ணிக்கை மற்றும் பரிமாற்றத்திற்குட்படும் பொருட்களின் அளவு என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டே கப்பல் சேவைக்கான பண அறவீடு தொடர்பில் அறிவிக்க முடியும் எனவும் தெரிவித்துள்ளார்.

**மேடம்**
பணம் சம்பந்தமாக மாமனாருடன் ஏற்பட்ட தகராறு தீர்ந்து விடல்

**ரிஷபம்**
தேங்கியதை விற்பனை செய்ய அதிரடியாகச் செயற்படல்

**மிதுனம்**
பொறுமை, சகிப்புத் தன்மையினால் காரிய சித்தி ஏற்படல்

**கடகம்**
வசாரணை நம்பகமாக இருந்த படியினால் விவாகத்திற்கு இசைதல்

**சிம்மம்**
பங்குத் தொழிலைக் கைவிட்டு சுயமாக இயங்க முற்படுதல்

**மீனம்**
உணவுப் பொருட்களின் பழுதான நிலையினால் ஒவ்வாமை ஏற்படல்

## முரசின் இன்றைய பலன்

**28.07.2015 செவ்வாய்க்கிழமை**

மன்மத வருஷம் ஆடி மாதம் 12 ஆம் திகதி.
சித்தாமிர்த யோகம் / துவாதசி திதி
கேட்டை நட்சத்திரம் பிற்பகல் - 12.25 வரை பின் மூலம்
இராகுகாலம் 3.02 - 4.32 வரை சுப நேரம் 10.32 - 12.02 வரை



ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**கன்னி**
மேலும் ஒரு கிளை நிறுவனம் திறக்க முயற்சி எடுத்தல்

**கும்பம்**
கொடுத்ததைப் பெற முடியாத நிலையில் முறைப்பாட்டை மேற்கொள்ளல்

**மகரம்**
உணவுக்கட்டுப்பாட்டினால் நீரிழிவு தாக்கம் ஏற்படாமை


**தனுசு**
இழுபட்ட விவாகம் சமரச பேச்சினால் முடிவினை எட்டுதல்

**விருச்சிகம்**
விற்பனை விலைகளை காட்சிப்படுத்தாமையினால் தண்டம் செலுத்தும் நிலைவரல்

**துலாம்**
மஞ்சட்கோட்டினுள்ளும் விபத்து ஏற்படும் அச்ச நிலை உருவாதல்

# சுயநல அரசியல் செய்பவர்களை சமூகத்திலிருந்து ஓரம் கட்டுங்கள்

### ஈ.பி.டி.பி.யாழ்.மாவட்ட அமைப்பாளர், குகேந்திரன் தெரிவிப்பு



1987 ஆம் ஆண்டு இலங்கை இந்திய ஒப்பந்தத்துடன் நிறுத்தப்பட்டிருக்கவேண்டிய ஆயுதப் போராட்டத்தை அரசியற் தேவைகளுக்காக சுயநலமாக்கியதன் விளைவாகத்தான் இன்றுவரை தமிழ் மக்கள் எந்தவொரு உரிமைகளையும் தீர்வுகளையும் பெற்றுக் கொள்ள முடியாத இனமாக இலங்கையில் வாழ வேண்டியுள்ளது - என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஈழ மக்கள் ஜனநாயகக்கட்சியின் யாழ்.மாவட்ட பிரதம அமைப்பாளருமான கா.வேலும்மயிலும் குகேந்திரன் (வி.கே.ஜெகன்) தெரிவித்துள்ளார்.

மானிப்பாய் தொகுதியில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கலந்துரையாடலின் போது கருத்துத்தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு மேலும் கருத்து தெரிவித்த அமைப்பாளர், ஒற்றுமையாக வாழ்ந்த தமிழ் மக்களை திட்டமிட்டவகையில் விரோதிகளாக்கி தன்னினத்துக் குள்ளேயே அழிவுகளை ஏற்படுத்த காரணமானவர்களை இன்று வரை தமிழ் மக்கள் இனங் கண்டுகொள்ளாது தொடர்ந்தும் அத்தகையவர்களிடம் தமது அரசியற் பலத்தை கொடுத்து வருவதனாலும் தான் நாம் அழிவுகளிலிருந்து மீள முடியாத இனமாக வாழ்ந்து கொண்டிருக்க வேண்டியுள்ளது.

இந்த நிலைமைகளை மாற்றியமைத்து புதிய வாழ்வியற் பாதையை உருவாக்கிக் கொள்ள தமிழ் மக்களுக்கு சுயநலமற்ற ஒரு அரசியற் பலம் தான் தற்போது தேவையாக உள்ளது. அத்தகைய மாற்றத்தை செய்வதற்காக பல ஆண்டுகளாக எமது செயலாளர் நாயகம் போராடி வந்தாலும் எமக்கு இன்றுவரை மக்கள் போதியளவான அரசியற் பலத்தை தந்திருக்கவில்லை.

எனவே வரவுள்ள பொதுத் தேர்தலை எமது இனத்தின் வாழ்வியல் இருப்பிடங்களையும் கலாசார விழுமியங்களையும் பேணிப்பாதுகாப்பதுடன் தமிழ் மக்களது உரிமைகளையும் அபிவிருத்திகளையும் வென்றெடுத்துத் தருவதற்காக ஈழ மக்கள் ஜனநாயக கட்சியினரை இம்முறை உங்கள் தலைமைத்துவமாக நாடாளுமன்றம் அனுப்புங்கள் என உங்களிடம் நாம் கேட்கின்றோம்.

60 வருட தமிழ் மக்களது வரலாற்று தடங்களை புரட்டிப் பார்ப்போமானால் சுயநலத்தால் ஏமாற்றப்பட்டதும் மீளமுடியாத வடுக்களை சுமந்ததையும் தவிர வேறெந்த பதிவுகளும் பதியப் பட்டிருக்காது என்பதே உண்மை. இந்த நிலைக்கு யார் காரணம்? போராடியவர்களா? போராடும்படி சுயநலத்திற்காக தூண்டியவர்களா? சிந்தித்துப்பாருங்கள். தமிழ் மக்களது உரிமைக்காக போராடிய பலர் இன்று தனிமைப் படுத்தப்பட்டு ஒருவேளை உணவுக்கு கூட வசதியின்றி திரிகின்றனர். ஏன் இந்த நிலைமை இவர்களுக்கு வரவேண்டும்? போராட்டத்தை முதலீடாக வைத்து இன்றுவரை நாடாளுமன்றம் சென்று சுகபோகம் அனுபவித்துக்கொண்டிருக்கும் கூட்டத்தினர் இந்த பொதுத்தேர்தலில் அவர்களுக்கு எதனை தெரிவிக்கவுள்ளனர் என தெரிவிப்பார்களா? மாற்றம் ஒன்றைத்தவிர வேறெதனையும் கருத்திற்கொள்ளாது எமது வீணைச்சின்னத்திற்கு வாக்களித்து எமது கரங்களை பலப்படுத் துங்கள். நாங்கள் உங்களது வாழ்வியலையும் உரிமைகளையும் வென்றெடுத்துத்தருவோம் என்றார்.

# நல்லூர் உற்சவ கால பண்ணிசை நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். சின்மயா மிஷன் ஏற்பாட்டில் நல்லூர் முருகன் ஆலய உற்சவ காலத்தில் பாடசாலை ரீதியில் பண்ணிசை, பஜனையை மாணவர்கள் நல்லூர் ஆலயத்தில் பாடுவதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்ட பாடசாலை மாணவர்கள் மத்தியில் ஆன்மிக, கலாசார, பண்பாட்டு விழுமியங்களை வளர்க்கும் முகமாக பாடசாலை மாணவர்கள் குழுக்களைக் கொண்டு பண்ணிசை மற்றும் பஜனையினை பக்தி பூர்வமாக இசைப்பதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டு வருகின்றன.

எதிர்வரும் 19ஆம் திகதி முதலாம். திருவிழா முதல் செப்ரெம்பர் மாதம் 12 ஆம் திகதி வரையுமான 25 திருவிழாக்களிலும் ஒவ்வொரு நாளும் இரண்டு பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர் குழுக்கள் பண்ணிசை மற்றும் பஜனையினைப் பாடவுள்ளனர். இதற்காக யாழ். மாவட்ட பாடசாலைகளின் சங்கீத பாடம் மற்றும் சைவ சமய பாட ஆசிரியர்கள், மாகாணக்கல்விப் பணிப்பாளர் அனுமதியுடன் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத்தெரிவிக்கப்படுகின்றது.

### பேருந்து சேவை சீரின்மையால் பயணிகள் சிரமம்

பருத்தித்துறையிலிருந்து யாழ் நோக்கி வருகை தரும் இலங்கை போக்குவரத்துச் சேவையின் 752 இலக்கப்பேருந்து சேவை சீரின்மையால் பயணிகள் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

குறிப்பாக வழமையான சேவையில் ஈடுபடும் இப் பேருந்து சேவை சனி,ஞாயிறு தினங்களில் சீராக சேவையில் ஈடுபடாமையால் அப்பகுதி பயணிகள் நீண்ட நேரம் காத்திருந்தே பயணத்தினை மேற்கொள்வதாக தெரிவிக்கின்றனர். (85)

# கைதடியில் பாதீனியம் அகற்றுமாறு கோரிக்கை

சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கைதடி பகுதியில் பாதீனிய செடிகளின் பெருக்கம் அதிகரித்துக் காணப்படுவதாக அப்பகுதி பொதுமக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

கைதடி வடக்கு மாகாண சபை தலைமை அலுவலகம் பனை ஆராய்ச்சி நிறுவனம் கைதடி சந்திப்பகுதி கைதடி கோப்பாய் வீதி முதலான பிரதேசங்களில் அதிகமாக பாதீனிய செடிகள் காணப்படுவதாகவும் இதனை ஏனைய பிரதேசங்களுக்கு பரவவிடாது தடுக்க பொது அமைப்புக்கள் முன்வரவேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளன. முன்னர் வடக்கு மாகாண விவசாய அமைச்சு பாதீனியத்தை அழிக்க நடவடிக்கை எடுத்திருந்தது என்றும் அவ் நடைமுறையை தொடர்ந்து பின் பற்ற நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் பொதுமக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

# யாழில் நல்லின பசுக்கள் உருவாக்கும் திட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் இந்த வருடம் முதல் ஆறு மாதகாலப் பகுதியில் செயற்கை முறைச் சினைப்படுத்தல் மூலம் நல்லின இளம் பசுக்களை உருவாக்கும் திட்டத்தின் கீழ் 551 இளம் பசுக்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

குறித்த இளம் பசுக்கள் ஒவ்வொன்றையும் பராமரிப்பதற்கு கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் பண்ணையாளர்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபா வீதம் உதவு தொகை வழங்கி வருகின்றது.

கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் நல்லின இளம் பசுக்களை விரைவாக உருவாக்கும் செயற்திட்டத்தின் கீழ் செயற்கை முறை சினைப்படுத்தல் மற்றும் இளம் பசுக்களை பராமரிப்பதற்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவு என்பன வழங்கப்பட்டு வருகின்றன.

யாழ்.மாவட்டத்தில் இந்த வருடம் ஜனவரி மாதம் தொடக்கம் ஜூன் மாதம் வரையான ஆறு மாத காலப்பகுதியில் 551 இளம் பசுக்கள் செயற்கை முறைச்சினைப்படுத்தல் மூலம் உருவாக்கப்பட்டுள்ளதாக கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைகளம் தெரிவித்துள்ளது.

நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2015
[தேர்தல் மாவட்டம் – வன்னி]



அந்தோனிமுத்து அனஸ்ரின்



X 3

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)

# பாகிஸ்தானில் கிரிக்கெட் உயிர்ப்பிரிவதை அனுமதியாதீர்

## ஐ.சி.சி.தலைவர் உருக்கமான கோரிக்கை



பாகிஸ்தானுக்கான சுற்றுப் பயணத்தை மீளவும் ஆரம்பிக்க வேண்டுமென அங்கு ஐ.சி.சி. யின் ஐ.சி.சி.யின் உறுப்பு நாடுகளிடம் கோருவதாக அதன் தலைவர் சகீர் அப்பாஸ் தெரிவித்துள்ளதுடன் இலங்கை பாகிஸ்தானுக்கான சுற்றுப் பயணத்தை மேற்கொள்ளுமென தான் நம்பிக்கை கொள்வதாகவும் தெரிவித்துள்ளார்.

கடந்த 2009 ஆம் ஆண்டு லாகூரில் இலங்கை அணியினர் மீது பயங்கரவாதிகள் தாக்குதல் நடாத்தியதை அடுத்து அந் நாட்டிற்கு எந்தவொரு அணியும் செல்லவில்லை. இந்த நிலையில் 6 வருட இடைவெளிக்குப் பின்னர் கடந்த மே மாதம் பாகிஸ்தானுகசு சிம்பாப்வே அணி சுற்றுப் பயணத்தை மேற் கொண்டு 2 ருவெண்ரி 20, மூன்று ஒருநாள் போட்டிகளில் பங்கேற்றிருந்தது.

இதுதொடர்பாக மேலும் கருத்துத் தெரிவித்த அப்பாஸ், எமது அயல்நாடுகள் பாகிஸ்தானுக்கு வருவதற்கான நேரம் வந்துவிட்டது. அதிலும் குறிப்பாக இலங்கை அணி வருமென எதிர்பார்க்கின்றேன் இருநாடுகளும் ஒவ்வொரு விடயத்திலும் மிகவும் நெருங்கிச் செயற்படுகின்றன.

பாகிஸ்தானுக்கு சிம்பாப்வே அணியின் விஜயம் நல்ல ஆரம்பமாகும். எனினும் பாகிஸ்தானில் மட்டும் ஏன் சர்வதேச போட்டிகளை நடாத்த முடியாது. உதாரணமாக இலங்கையில் மோசமான நிலை நிலவிய வேளையிலும் கூட சர்வதேச போட்டிகள் நடைபெற்றன.

பாகிஸ்தானில் கிரிக்கெட் உயிர்பிரிவதை எவரும் அனுமதியாதீர் எமது நோக்கம் உலக மெங்கும் கிரிக்கெட்டை கொண்டு செல்வதேயாகும் எனவே இதனை ஊக்கப்படுத்த அனைவரும் முன்வரவேண்டுமென அவர் தெரிவித்தார்.

# கடவுள் தந்த தீர்ப்பே சிறிகாந்தின் விடுதலை

## பெற்றோர் ஆனந்தகண்ணீர்



(திருவனந்தபுரம்)

ஸ்ரீசாந்த் விடுதலையானது கடவுள் தந்த தீர்ப்பு என பெற்றோர் ஆனந்தக் கண்ணீர் வடித்துள்ளனர்.

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியல் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி சார்பில் விளையாடிய கேரளாவைச் சேர்ந்த சிறிசாந்த் மற்றும் அஜீத் சண்டிலா, அங்கீத் சவான் ஆகிய 3 வீரர்களும் கிரிக்கெட் சூதாட்டத்தில் ஈடுபட்டதாக கைது செய்யப்பட்டனர்.

இதுதொடர்பான வழக்கு டில்லி நீதிமன்றில் நடைபெற்றது. வழக்கை விசாரித்த நீதிபதி, ஸ்ரீசாந்த் உட்பட 3 பேரையும் விடுதலை செய்து தீர்ப்பு அளித்தார்.

இதைத்தொடர்ந்து சிறிசாந்த் தனது சொந்த ஊரான கொச்சிக்கு திரும்பினார். அவரை அவரது பெற்றோர் சாந்தகுமார் நாயர் சாவித்திரிதேவி ஆகியோர் ஆனந்த கண்ணீருடன் வரவேற்றனர்.


சிறிசாந்த் விடுதலையானது பற்றி அவரது பெற்றோர் கூறியதாவது:

சிறிசாந்திற்கு 3 மாதத்திற்கு முன்பு பெண் குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தை பிறந்த ராசியால எங்களது மகன் குற்றமற்றவர் என்று நிருபிக்கப்பட்டு விடுதலையாகி உள்ளார்.

அந்த குழந்தை சிறிசாந்திற்கு கடவுள் கொடுத்தது. எனவே இந்த தீர்ப்பை கடவுள் கொடுத்த தீர்ப்பாக நாங்கள் நினைக்கிறோம். எங்களது மகன் மீண்டும் பயிற்சி எடுத்து நாட்டுக்காக கிரிக்கெட் விளையாடுவார்.

எங்களது மகன் கைது செய்யப்பட்டபோது எங்களுக்கு ஏற்பட்ட சோகத்தை வார்த்தையால் விளக்க முடியாது. அது போன்ற சோகம் இனி யாருக்கும் ஏற்படக்கூடாது இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

# ஓய்வு எப்போது மனம் திறக்கும் மிஸ்பா




இந்தியாவிற்கு எதிரான டெஸ்ட் போட்டித் தொடர் நடத்தப்பட்டால் அதிலும் விளையாடிய பின்னர் சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறுவேன் எனவும் இந்திய தொடர் தனது இறுதிப் போட்டியாக அமையும் எனவும் பாகிஸ்தான் டெஸ்ட் அணித்தலைவர் மிஸ்பா-உல்- ஹக் தெரிவித்துள்ளார்.

ஒருநாள் மற்றும் இருபது ஓவர் போட்டிகளில் இருந்து முன்னரே ஓய்வு பெற்ற மிஸ்பா டெஸ்ட் போட்டிகளில் இருந்தும் ஓய்வு பெறுவது குறித்த கருத்துக்கள் வெளியாகின்றன.

இந்நிலையில் இது குறித்து கருத்து தெரிவித்த மிஸ்பா, தனிப்பட்ட வாழ்க்கையில் முழுக் கவனத்தை செலுத்துவதற்கு முன்னதாக மேலும் சில டெஸ்ட் போட்டிகளில் விளையாட விரும்புவதாகவும் அது மாத்திரமல்லாது இந்தியாவிற்கு எதிரான டெஸ்ட் தொடரிலும் விளையாட விருப்புவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

எனவே இந்திய டெஸ்ட் தொடர நடத்தப்பட்டால் அதுவே தனது இறுதிப் போட்டியாக அமையும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

# பார்சிலோனாவை வீழ்த்தி முன்னிலை பெற்றது மான்செஸ்டர்



(கலிபோர்னியா)

பார்சிலோனா அணிக்கு எதிரான சர்வதேச சம்பியன்ஸ் கோப்பை கால்பந்து தொடரில் மான்செஸ்டர் யுனைடெட் அணி வெற்றி பெற்றது.

அமெரிக்காவில், சர்வதேச சம்பியன்ஸ் கோப்பை கால்பந்து தொடருக்கான லீக் சுற்றுப் போட்டிகள் நடக்கின்றன. கலிபோர்னியாவில் நடந்த போட்டியில் இங்கிலாந்தின் மான்செஸ்டர் யுனைடெட் அணி, ஸ்பெயினின் பார்சிலோனா அணியை சந்தித்தது.

ஆட்டத்தின் 8ஆவது நிமிடத்தில் மான்செஸ்டர் யுனைடெட் அணியின் ரூனே முதல் கோல் அடித்தார். இதற்கு பார்சிலோனா வீரர்களால் பதிலடி தர முடியவில்லை. முதல் பாதி முடிவில் மான்செஸ்டர் யுனைடெட் 1:0 என முன்னிலை வகித்தது.

இரண்டாவது பாதியில் அசத்திய மான்செஸ்டர் யுனைடெட் அணிக்கு 65ஆவது நிமிடத்தில் லிங்கார்டு ஒரு கோல் அடித்தார். தொடர்ந்து போராடிய பார்சிலோனா அணிக்கு 90வது நிமிடத்தில் ரபின்ஹா ஒரு கோல் அடித்தார். ஸ்டாபேஜ் நிமிடத்தில் (90+1) மான்செஸ்டர் யுனைடெட் வீரர் ஜனுஜாஜ் ஜோல் அடித்தார்.

முடிவில் பார்சிலோனா அணி 1–2 என்ற கணக்கில் தோல்வி அடைந்தது. இதுவரை விளையாடிய 3 லீக் போட்டியிலும் வெற்றி பெற்ற மான்செஸ்டர் யுனைடெட் அணி 9 புள்ளிகளுடன் முன்னிலை வகிக்கிறது. இரண்டு போட்டியில் தலா ஒரு வெற்றி, ஒரு தோல்வியை பெற்ற பார்சிலோனா 3 புள்ளிகளுடன் உள்ளது.

பார்சிலோனா அணியில் நட்சத்திர வீரர்களான மெஸ்சி, நெய்மர் இடம் பெறவில்லை. லூயிஸ் சாரஸ் மட்டும் இடம் பிடித்த போதிலும் வெற்றி பெற முடியவில்லை.

நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2015

(தேர்தல் மாவட்டம்-வன்னி)



குலசிங்கம் திலீபன்

முதன்மை வேட்பாளர்



ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)

# உலக கிண்ண கால்பந்து – 2016 தகுதிச் சுற்று அட்டவணை வெளியீடு

உலகக் கோப்பை கால்பந்து (2018) தொடருக்கான தகுதிச் சுற்றில் பிரான்ஸ், நெதர்லாந்து, சுவீடன் அணிகள் ஒரே பிரிவில் இடம் பிடித்துள்ளன.

வரும் 2018இல் ரஷ்யாவில் பிபா உலக கோப்பை கால்பந்து தொடர் நடக்கவுள்ளது. இதற்கான தகுதிச் சுற்றுப் போட்டிகள் உலகின் பல்வேறு பகுதிகளில் நடக்கின்றன. இதில் ஐரோப்பிய அணிகளுக்கான தகுதிச் சுற்றில் மோதும் அணிகளின் அட்டவணை நேற்று முன்தினம் வெளியிடப்பட்டது.

மொத்தமுள்ள 52 அணிகள் 9 பிரிவுகளாக பிரிக்கப்பட்டன. ஒவ்வொரு பிரிவிலும் முதலிடம் பிடிக்கும் அணிகள் உலக கோப்பை பிரதான சுற்றில் விளையாட தகுதி பெறும். ஒவ்வொரு பிரிவிலும் 2வது இடம் பிடிக்கும் அணிகளில் இருந்து சிறந்த 8 அணிகள் பிளே ஓப் சுற்றில் விளையாடும். இதில் முதல் நான்கு இடங்களை பிடிக்கும் அணிகள் உலக கோப்பையில் விளையாடும்.

இதன்படி ஏ பிரிவு சற்று கடினமாக அமைந்துள்ளது. இதில் நெதர்லாந்து, பிரான்ஸ், சுவீடன், பல்கேரியா, பெலாரஸ், லக்சம்பேர்க் அணிகள் இடம் பிடித்துள்ளன. நடப்பு உலக சாம்பியன் ஜேர்மனி அணி, சி பிரிவில் செக்குடியரசு, நோர்வே, நார்தன் அயர்லாந்து, அஜர்பெய்ஜான், சான் மரினோ அணிகளுடன் இடம் பெற்றுள்ளது.

இங்கிலாந்து அணி, எப் பிரிவில் ஸ்கொட்லாந்து, சுலோவேகியா, சுலோவேனியா, மால்டா அணிகளுடன் விளையாடுகிறது. ஸ்பெயின், இத்தாலி, இஸ்ரேல் உள்ளிட்ட அணிகள் ஜி பிரிவில் உள்ளன. போர்ச்சுகல், சுவிட்சர்லாந்து, ஹங்கேரி அணிகள் பி பிரிவில் இடம் பெற்றுள்ளன.

# பிரதேச செயலக கரப்பந்தாட்டம்
# தெல்லிப்பளை,கோப்பாய் அசத்தல்





(தெல்லிப்பளை)

யாழ்ப்பாண தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் பிர தேச செயலக அணிகளுக்கி டையே நடாத்திய கரப்பந்தாட்டப் போட்டியில் பெண்கள் பிரிவில் தெல்லிப்பளை ஆண்கள் பிரிவில் கோப்பாய் பிரதேச செயலக அணிகள் சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்தன.

தெல்லிப்பளை மகாஜன கல்லூரியில் இப்போட்டிகள் நடைபெற்றன.

பெண்களுக்கான அரையிறுதிப் போட்டியில் தெல்லிப் பளை-உடுவில் பிரதேச் செயலக அணிகள் மோதின ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய தெல்லிப்பளை 25:15,25:10 என 2:0 என்ற நேர் செற்றில் வென்று இறுதிப்போட்டிக்குத் தெரிவாகியது.

அதேபோன்று மற்றொரு அரையிறுதிப் போட்டியில் காரை நகரை எதிர்த்தாடிய கரவெட்டி அணியினர் 25:10, 25:5 என 2:0 என்ற நேர் செற்றில் வென்று இறுதிக்கு தெரிவாகினர்.

பரபரப்பாக இடம்பெற்ற இறுதிப்போட்டியில் தெல்லிப் பளை-கரவெட்டி அணிகள் மோதின. இந்த ஆட்டத்தில் தெல் லிப்பளை அணியின் ஆதிக்கமே காணப்பட்டது. முதல் செற்றை 25:14 என கைப் பற்றிய தெல்லிப்பளை இரண் டாவது செற்றிலும் கரவெட்டியை வாட்டி எடுத்தது. இந்த செற் றையும் 25:5 என கைப்பற்றிய தன் மூலம் 2:0 என்ற நேர் செற்றில் வென்று சம்பியனானது

அடுத்து ஆண்களுக்கான அரையிறுதிப் போட்டியில் தெல் லிப்பளை ஊர்காவற்றுறை அணிகள் மோதின மிகவும் பரப ரப்பாக இடம்பெற்ற இப்போட்டியில் 25:19, 25:18 என்ற செற்றின் அடிப்படையில் வெற்றி பெற்ற தெல்லிப்பளை இறுதிப் போட்டிக்குத் தெரிவானது.

மற்றொரு போட்டியில் சாவகச்சேரியை எதிர்த்தாடிய கோப்பாய் 25:17, 25:19 என வென்று இறுதிப்போட்டிக்கு முன்னேறியது.

இறுதிப்போட்டியில் பலம் பொருந்திய இரு அணிகளான தெல்லிப்பளை கோப்பாய் பலப்பரீட்சை நடாத்தின. இரு அணியினரும் மிகவும் சிறப்பாக விளையாடியதால் பார்வையாளருக்கு எந்த அணி வெற்றி பெறும் என்பதை ஊகிக்க முடியாத நிலை ஏற்பட்டது. இந்த நிலையில் முதலாவது செற்றை தெல்லிப்பளை 26:24 என கைப்பற்றியது. இதனால் எழுச்சி கொண்ட கோப்பாய் அடுத்த இரண்டு செற்களையும் முறையே 25:23, 25:22 என கைப்பற்றியது.

எனினும் நான்காவது சுற்றை தெல்லிப்பளை 25:23 என கைப் பற்ற 2:2 என இரு அணிகளும் சமநிலை பெற்றன. வெற்றியைத் தீர்மானிக்கும் 5 ஆவது சுற்றில் பேரெழுச்சி கொண்ட கோப்பாயின் ஆட்டத்திற்கு ஈடுகொடுக்க முடியாமல் திணறியது தெல்லிப் பளை. இறுதியில் 15:4 என அந்த செற்றை கோப்பாய் கைப் பற்ற 3:2 என்ற செற்கணக்கில் வென்று சம்பியனானது.

(93)

# அமரர் பத்மநாதன் ஞாபகார்த்த ஹொக்கி சுற்றுப் போட்டி இன்று



தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி அமரர் ரி.பத்மநாதன் ஞாபகார்த்தமாக நடாத்தும் ஹொக்கி சுற்றுப்போட்டி இன்று காலை 8.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் ம.மணி சேகரன் தலைமையில் இன்று காலை 8.30 இற்கு ஆரம்பமாகும் இப் போட்டியில் 15 வயதுப் பிரிவில் ஆண்களுக்கான போட்டியில் தெல்லிப்பளை யூனியன், சென்.ஜோண்ஸ், வட்டு.யாழ்ப்பாணக் கல்லூரி மற்றும் மகாஜனக் கல்லூரிகள் மோதவுள்ளன.

அதேபோன்று 15 வயதுப் பிரிவு பெண்களுக்கான போட்டியில் பண்டத்தரிப்பு மகளிர், உடுவில் மகளிர் மற்றும் குளமங்கால் றோ.த.க. பாடசாலைகள் மோதவுள்ளன.

இன்றைய தினமே இறுதிப் போட்டியும் இடம்பெற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (93)

# 10,000 ஓட்டங்களை கடந்தார் டில்ஷான்



ஒருநாள் போட்டிகளில் 10,000 ஓட்டங்களைக் கடந்த நான்காவது இலங்கை வீரர் என்ற பெருமையை நேற்று முன்தினம் பாகிஸ்தானுடனான ஐந்தாவது ஒரு நாள் போட்டியில் டில்ஷான் தனதாக்கியுள்ளார்.

இந்தப் போட்டியில் 62 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் இவர் ஆட்டமிழந்து வெளியேறினார்.

முன்னதாக சனத் ஜெயசூரிய, மஹேல ஜெயவர்த்தன மற்றும் குமார் சங்கக்கார ஆகியோர் இவ்வாறு 10,000 ஓட்டங்களைக் கடந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தொண்டைமானாறு கலைவாணி உதைபந்து இறுதிக்குத் தெரிவானது யங்கம்பன்ஸ்



தொண்டைமானாறு கலைவாணி விளையாட்டுக்கழகம நடாத்தி வரும் யாழ்.மாவட்ட ரீதியான 9 பேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுத் தொடரின் லீக் போட்டியின் வரிசையின் நேற்று முன்தினம் நடந்த அரையிறுதி ஆட்டத்தில் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மோதிய கம்பர் மலை யங்கம்பன்ஸ் இறுதிப் போட்டிக்கு தெரிவானது.

மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற முதல் பாதியில் யங்கம்பன்ஸ் அணி வீரர்களான குகரதன் மற்றும் பிரகாஷ் மிகவும் சிறந்த முறையில் 2 கோல்களைப் பெற்றுக் கொடுத்தனர்.

ஆட்டத்தின் பிற்பாதியில் விண்மீன் ஒரு கோலைப் பெற்ற போதும், சிறிது நேர இடை வெளியில் யங்கம்பன்ஸ் அணி வீரர் தர்ஷன் ஒரு கோலைப் பெற 3 : 1 என்ற கோல் கணக்கில் யங் கம்பன்ஸ் வெற்றி பெற்று இறுதி ஆட்டத்திற்கு தெரிவாகியுள்ளது.

இந்தப் போட்டியின் ஆட்ட நாயகனாக யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழக வீரர் குகரதன் தெரிவு செய்யப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.

# தேசிய மட்ட போட்டியில் குஞ்சுக்குளம் மாணவன்



(மன்னார்)

மன்னார் மாவட்டத்தின் மடு வலயத்தில் அமைந்துள்ள மிகவும் பின்தங்கிய கிராமம் தான் பெரியகுஞ்சுக்குளம்.

மன்னார் வவுனியா பிரதான பாதையிலிருந்து ஆற்றையும் காட்டையும் கடந்து 15 km தொலைதூரத்தில் இந்த சிறு கிராமம் அமைந்துள்ளது. இங்கே வாழும் மக்கள் விவசாயத்தை மட்டுமே நம்பி வாழும் சாதாரண வாழ்க்கைத்தரமுடைய ஏழை மக்களே.

இப்படிப்பட்ட ஒரு சாதாரண குடும்பத்தில் பிறந்து தனது விடா முயற்சியாலும் அயராத உழைப்பினாலும் பொறுப் பாசிரியர்,அதிபர் ஆசிரியர்களின் உன்னத வழிகாட்டலிலும் இன்று சாதனை நாயகனாக மிளிர்கின்றான்

கடந்த 12 ஆம் திகதி வவுனியா வில் நடை பெற்ற மாகாண மட்ட விளையாட்டுப் போட்டியில் 15 வயதுப்பிரிவில் கலந்து கொண்டு நீளம் பாய்தலில் முதலாம் இடத்தினை தன்வசப் படுத்தி தேசியமட்ட போட்டிக்கு தெரிவாகியுள்ளான்.

மன்/பெரிய குஞ்சுக்குளம் R.C.T.M.S இருந்து முதல் முறையாக தேசியமட்ட போட்டிக்குச்செல்லவிருக்கும் மாணவன் அஜந்தனே,

அது மட்டுமல்லாமல் வசதி வாய்ப்புக்கள் அற்ற ஒரு கிராமத்தில் சாதாரண குடும்பத்தில் பிறந்து இன்று தான் கற்ற பாடசாலைக்கும் சொந்த மண்ணுக்கும் பெருமை சேர்த்த இந்த மாணவன் உண்மையில் சாதனை நாயகனே

நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2015
(தேர்தல் மாவட்டம்-வன்னி)



பொ.குணபாலா



X | 5

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)

# இந்தக் கேள்விகளுக்கு மலையக கட்சிகளின் பதில் என்ன?

- அருட்தந்தை மா. சக்திவேல் -

இலங்கை அரசியலில் தேர்தல் களம் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளது. மலையகத்தில் போட்டியிடுகின்ற திகாம்பரம், ராதாகிருஷ்ணன் சார்ந்துள்ள கட்சிகள் ரணிலுக்கு ஆதரவு வழங்குவதோடு, ரங்காவின் கட்சியும் ஆறுமுகன் தொண்டமானின் காங்கிரஸ் கட்சியும் மகிந்தவுக்கு ஆதரவு வழங்கி புதிய ஆட்சியைக் கைப்பற்ற முழு மூச்சுடன் களத்தில் நிற்கின்றன.

மலையகம் சார்ந்த தமிழ்க் கட்சிக்ளில் ரங்காவின் கட்சியைத் தவிர திகாம்பரம், ராதாகிருஷ்ணன், ஆறுமுகன் தொண்டமான் சார்ந்த கட்சிகள் பதுளை, நுவரெலியா பிரதேசங்களில் ஆசனங்களைப் பெற வாய்ப்புகள் அதிகம் உள்ளன. மலையகத்தின் ஏனைய பிரதேசங்களில் தமிழ் வாக்குகளை யானைக்கும் வெற்றிலைக்கும் பெற்றுக்கொடுப்பதில் மலையகக் கட்சிகள் ஆர்வத்தோடு செயற்படுகின்றன.

தமது அணிக்கு வெற்றி வாய்ப்பைப் பெற்றுக்கொடுத்து நாடாளுமன்ற ஆசனங்களைப் பெற்றுக் கொள்ளத் துடிக்கும் மலையக அரசியல்வாதிகள் தமது அணிசார்ந்து பெருந்தோட்டத்துறை வாழ் மக்களுக்கும் பொதுவாக மலையகத்துக்கும் பெற்றுக்கொடுக்கப் போவது என்ன? மக்களைக் கவரும் மேடைப் பேச்சுக்களோ, துண்டுப் பிரசுரங்களில் குறிப்பிடப்படுபவை போன்றன என்றும் ஏட்டுச்சுரைக் காய்தான்.

முன்னைய மகிந்தரின் ஆட்சியும், இவ்வருடம் ஜனவரியில் பதவியேற்ற ரணில் தலைமையிலான அரசும் தொழிலாளர்களுக்கு 7 பேர்ச்சஸ் காணி என்பதையே உறுதிப்படுத்திவிட்டன. இரண்டாவது, சம்பள ஒப்பந்த விடயம். தேர்தல் முடிந்ததும் ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும். இதனை விட வேறு விடயங்கள் உள்ளனவா?

பெருந்தோட்டங்களை உள்ளடக்கி மலையக வாழ் தமிழர்களின் தனித்துவமிக்க அடையாளங்களை பேணிப்பாதுகாக்கவும் சமூக, கலை, கலாசார, பாதுகாப்பு விடயமாகவும் மண்சார்ந்த பொருளாதார அபிவிருத்தி தொடர்பாகவும் முன்னெடுக்கப்படும் அரசியல் நகர்வுகள் என்ன?



இலங்கையின் மொத்த மக்கள் தொகையில் 1911இல் 13 வீதமாக இருந்த மலையகத் தமிழர்கள் 2011இல் 4.8 வீதமாக குறைந்திருப்பதற்கான சமூக அரசியல் பின்னணி என்னவென ஆராய வழிவகுக்கப்படுமா? இதன் பாதிப்புகள் வெளிக்கொணரப்படுமா? (பெருந்தோட்ட ஆரம்பப் பாடசாலைகள் பிள்ளைகளின் வரவின்றி தொடர்ச்சியாக மூடப்படுகின்றன).

அரசு பெருந்தோட்டங்களைப் பொறுப்பேற்றுக் கொண்டதும் JEDB, SLSPC, எல்கடுவ பிளான்டேஷன் கம்பனி ஆகியவற்றிடமும் பெருந்தோட்டங்கள் நிறுவைக்குக் கொடுக்கப்பட்டன. இத்தோட்டங்களில் தொழில் புரிந்தோரின் EPF, ETF பணமான ரூபா 1888 மில்லியனுக்கும் அதிகமான தொகை மிக நீண்டகாலமாக மத்திய வங்கியில் வைப்பிலிடப்படவில்லை என்று கூறப்படுகிறது. இப்பணத்தின் உரிமையாளர்களான தொழிலாளர்களுக்கு வழங்கும் பாதுகாப்பு உத்தரவாதம் என்ன?

பெருந்தோட்டங்களைப் பொறுத்தவரை 1904இல் - 1320, 1980இல் - 668, 1992இல் - 506, 2013இல் - 427 என தோட்டங்கள் குறைந்துகொண்டு வருகின்றன.

இதனால், இத்துறை சார்ந்த தொழிலாளர்களுக்கு ஏற்படும் சமூகப் பாதிப்புகள் பற்றி ஆராயப்படுமா?

தொழிலாளர்களாக 1981இல் - 497,995 பேர், 1992இல் - 376,498 பேர், 2013இல் - 193,412 பேர் எனக் குறைந்துள்ளதோடு, தொழிலாளர்கள் சுயமாகவே பெருந்தோட்டங்களை விட்டு வெளியேறுவதற்கான பின்புலங்கள் திட்டமிட்டே உருவாக்கப்படுகின்றமைக்கான அரசியல் பொருளாதாரக் காரணிகள் கண்டறியப்படவும், இவர்கள் தமது வாழ்விடங்களில் தொடர்ந்து பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபட திட்டங்கள் உள்ளனவா?

மேலும், 1995இல் 82,000 ஹெக்டேயராக இருந்த சிறுதோட்டங்கள் 2012இல் 120,000 ஹெக்டேயராக அதிகரித்துள்ளதோடு, தேயிலை உற்பத்தியில் 70 வீதத்தினை இவர்களே மேற்கொள்கின்றனர். இன்று ஐந்து இலட்சத்திற்கும் அதிகமானோர் சிறுதோட்ட உரிமையாளர்களாக உள்ளனர். இந்நிலைக்கு 200 ஆண்டுகால அனுபவம் வாய்ந்த மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்களும் உயர்த்தப்படுவார்களா?

மலையகப் பெருந்தோட்ட தொழிலாளர் சம்பள மற்றும் நல விடயமாக 2 வருடத்திற்கு ஒருமுறை ஒப்பந்தம் செய்துகொள்ளப்படுகிறது. அதற்காக போலிப் போராட்டங்களும் முன்னெடுக்கப்படுகின்றன. இந்நிலையில் இருந்து பெருந்தோட்டத் தொழிலாளர்களை விடுவித்து நிலத்தோடு ஒட்டிய சுய பொருளாதாரத்தில் அபிவிருத்தியடைய வகுத்துள்ள திட்டம் என்ன?

பெருந்தோட்டத் தொழிலாளர்களில் 32 வீதமானோர் ஏழ்மை நிலையில் உள்ளனர் என்றும், 11.4 வீதமானோர் தேசிய வறுமைக் கோட்டுக்குக் கீழ் நிலையில் வாழ்கின்றனர் என்றும் கடந்தகாலப் புள்ளிவிவரங்கள் கூறுகின்றன். இந்நிலை போக்க எடுக்கப்படவுள்ள உடனடி நடவடிக்கைகள் ஏதும் உண்டா?

பெருந்தோட்டக் கம்பனிகள் தமது பயன்பாட்டிலிருந்து வருடாந்தம் ஒதுக்கப்படும் காணிகள் அதிகரித்துக் கொண்டிருக்கின்ற நிலையில், அதாவது, 2005 - 2011 காலப்பகுதியில் வருடாந்தம் 1,650 ஹெக்டேயர் காணிகள் பாவனையிலிருந்து நீக்கப்படுவதாகக் கூறப்படுகின்றது. பெருந்தோட்டங்கள் தொடர்ச்சியாக நஷ்டமடைவதாகக் கூறுகின்ற இக்காலகட்டத்தில் காணிச் சட்டத்தின் கீழ் மீண்டும் அரசு பெருந்தோட்ட காணிகளைப் பொறுப்பேற்று பிரதேச செயலர்கள் ஊடாக மலையக மக்களுக்கு காணிகள் பகிர்ந்தளிக்க புதிய திட்டங்கள் வகுக்கப்படுமா?

இறுதியாக மலையக மக்களும் இந்நாட்டில் வாழும் இன்னுமொரு தேசிய இனம் என்பதற்கான அனைத்து அடையாளங்களும், உரிமைகளும் கொண்டிருப்பவர்களாக விளங்குகின்றனர். இலங்கை வாழ் மலையக மக்கள் எனும் கௌரவ நிலையை அரசியல் சாசனம் ஊடாக உறுதிப்படுத்த முன்னெடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள் என்ன?

மலையக அரசியல்வாதிகளே எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் உங்களுக்கான சலுகைகளையும் பாதுகாப்பையும் அதிகரித்துக் கொள்வீர்கள். பாதுகாப்புப் படைகளோடு உலாவருவீர்கள். உங்களுக்கு வாக்களித்த மக்கள் இந்நாட்டின் கௌரவ பிரஜைகளாக வாழ அரசியல், பொருளாதார, சமூக பாதுகாப்பைப் பெற்றுக்கொடுக்கத் தீட்டப்படும் திட்டங்கள் மூலமே உங்களுடைய எதிர்காலம் நிலையானதாக அமையும் என்பதை கருத்திற்கொள்ள வேண்டும் என்பது சமூக அக்கறை கொண்ட அனைவரினதும் எதிர்பார்ப்பாகும்.

# உயிர் கொல்லும் நுண்கடன் பற்றி உரையாடும் தெருவெளி அரங்கு

- ப.ராஜதிலகன் — 1

மட்டக்களப்பில் நாடக அரங்கச் செயற்பாடுகளிலும் கூத்து மீளுருவாக்க செயற்பாடுகளிலும் ஈடுபட்டு வருகின்ற மூன்றாவது கண் நண்பர்கள் குழுவின் அரங்கச் செயற்பாடுகளில் தெருவெளி அரங்கச் செயற்பாடு முக்கியமான ஒன்றாக விளங்குகின்றது. அந்தவகையில் 2015ஆம் ஆண்டு நுண்கடன் பற்றிய தெருவெளி அரங்கச் செயற்பாட்டில் இக்குழுவினர் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்பில் சமூக செயற்பாட்டு நிறுவனமாக விளங்குகின்ற EHED அனுசரணையுடன் மூன்றாவது கண் நண்பர்கள் குழுவினரால் தெருவெளி அரங்க ஆற்றுகைகள் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள அனைத்துப் பிரதேச செயலகப் பிரிவுகளிலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன..

இன்றைய உலகமயமாக்கல் சூழலின் மூலமாக உலகிலே நுகர்வுப் பண்பாடு அதிகரித்துக் கொண்டு வருகின்றது. இச்செயற்பாடானது பல்தேசிய கம்பெனிகளினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமையானது மனிதர்களை மேலும் மேலும் நுகர்வுப்பண்டங்களாகவே வடிவமைத்து வருகின்றது..

இந்நிலையானது மனிதர்களை தங்கி வாழ்வோராக மாற்றியமைக்கப்பட்டிருப்பதனையும் கண்டுகொள்ள முடிகிறது. திட்டமிட்ட வகையில் பல்தேசிய கம்பெனிகளின் மூலமாக பல திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. வறுமை ஒழிப்பு என்கின்ற திட்டத்தின் கீழ் நுண்கடன் முறை அறிமுகப்படுத்தப்பட்டு கிராமங்கள் தோறும் பல்தேசிய கம்பெனி முகவர்களால் பரவலாக்கம் அடைந்திருக்கின்றது.

குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் சுயசார் உற்பத்தியாளர்களாக இருந்த இடங்களை அடையாளம் கண்டு அத்தகைய இடங்களில் நுண்கடன் திட்டமானது அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றன. இத்தன்மையானது ஆபத்தான சூழலை தோற்றுவிக்கின்றது. சுயசார் உற்பத்தியாளர்களாக இருந்த மக்களை தங்கி வாழ்வோராகவும் மேலும் மேலும் வறுமைக் கோட்டிற்கு இட்டுச் செல்வதாகவுமே நுண்கடன் திட்டங்கள் நடைமுறையில் காணப்படுகின்றது.



மக்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதான் திட்டமாக இருந்தால் மக்கள் நலன் சார்ந்ததாக அமைந்து காணப்பட வேண்டும். ஆனால் நுண்கடன் திட்டமானது அவ்வாறு அமையாமல் சுரண்டி இலாபம் அடைகின்ற பெரு வணிக நோக்குக் கொண்டதாக மாற்றமடைந்து இருக்கின்றது. நுண்கடன் திட்டமானது மனிதர் ஏறி வருகின்ற வளர்ச்சிப்படியான கயிறாக இருப்பதனை விடுத்து இன்று தூக்குக் கயிறாக மாறியிருப்பதன் அபத்தம் தான் என்ன?

எனவே இவற்றிலிருந்து விடுபட்டு சுயசார்புள்ள மனிதர்களாக வாழ்வதன் அவசியத்தை வலியுறுத்தியும் நுண்கடன் சார்ந்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதனை நோக்கமாக கொண்ட இத்தெருவெளி அரங்கச் செயற்பாடானது சமூகத்தின் மத்தியில் நுண்கடன் திட்டமானது எவ்வாறான பிரச்சினைகளை தோற்றுவிக்கின்றது? அது தொடர்பான கேள்விகளை எவ்வாறு முன்வைக்கலாம்? போன்ற விடயங்களை எடுத்துக் கூறி மக்கள் இதுபற்றிய உரையாடல்களை மேற்கொள்வதற்கான களமாகவும் சிந்திக்கத் தூண்டும் செயற்பாடாகவும் அமைகின்றது.

இத்தெருவெளி நாடக உருவாக்கமானது களப்பயிற்சி அரங்க முறை மூலமாகவே உருவாக்கப்பட்டது. இந்நாடகத்தில் நடிக்கின்ற நடிகர்கள் ஒவ்வொருவரும் மட்டக்களப்பிலுள்ள வெவ்வேறு கிராமங்களைச் சேர்ந்தவர்கள். இவர்கள் தங்கள் கிராமங்களில் மக்கள் நுண்கடனினால் எதிர் நோக்குகின்ற பிரச்சினைகள், கிராமங்களில் நடைபெற்ற சம்பவங்கள் போன்றவற்றை ஒவ்வொருவரும் கதைகளாக கூறினார்கள். பின்னர் இக்கதைகளை வைத்துக் கொண்டு கலாநிதி சி.ஜெயசங்கர் அவர்களின்

# சொன்னார்கள்....

## எதைக் கொண்டு எதற்காக பேரம் பேசப் போகிறார்கள்?

திரு. சம்பந்தன் ஒரு முக்கியமான செய்தியைத் தமிழ் மக்களுக்குக் கூறியுள்ளார். த.தே.கூட்டமைப்புக்கு எல்லோரும் வாக்களித்து அவர்களுடைய பேரம் பேசும் சக்தியை வலுப்படுத்த வேண்டும் என்பது அவருடைய வேண்டுகோள். அவர்கள் எதைக் கொண்டு எதற்காகப் பேரம் பேசப் போகிறார்கள் என்று விளங்கவில்லை. ஆனால் பேரம் பேச எதிர்பார்க்கிறார்கள்.

**பேரம் பேசும் சக்தியை வலுப்படுத்த வேண்டும்**



பொன்னம்பலம் இராமநாதன் காலந்தொட்டுத்தான் பேரம் பேசியிருக்கிறார்கள். பேரம் பேசுவதற்குத் தேவையான நாற்காலிக் கணக்குகள் 1947 இல் கிடைத்தன. 1956 இல் கிடைத்தன. அப்போது பேரம் பேசவில்லை; போராடுவதாகப் பேசினார்கள். 1960 இல் ஒரு முறை பேரம் பேசும் வாய்ப்பு கைக்கெட்டி வாய்க்கெட்டாமற் போனது. 1965 இல் பேரம் பேசி ஒரு அமைச்சர் பதவியைப் பெற்ற பிறகு இலங்கையை ஆளுவது யார் என்பதை முடிவு செய்வது தமிழர் தான் என்று வீரம் பேசினார்கள். ஆனால், 1969 இல் அவர்களுடைய பேரம் பேசும் வலிமை நன்கு புலனாகிவிட்டது. 1970 இல் பேரம் பேசவே இடமில்லாமல் போய் "கடவுள்தான் தமிழரைக் காப்பாற்ற முடியும்" என்று தலையிற் கையை வைத்தார்கள். 1976 இல் தமிழீழக் கோரிக்கையை ஒரு தீர்மானமாக்கி அதை வைத்துத் தேர்தலில் வென்றார்கள். தமிழீழம் என்று கேட்டுப் பேரம் பேசினாற் தான் சமஷ்டியாவது கிடைக்கும் என்று சமாதானம் சொல்லித் தமிழீழக் கோரிக்கையை மெல்லக் கைகழுவினார்கள். ஜயவர்த்தன "போர் என்றால் போர், சமாதானமென்றாற் சமாதானம்" என்று இன்னொரு பேரத்தை முன்வைக்க, என்ன செய்வதென்று தெரியாமற் தவித்தார்கள். அதன் பிறகு பல்வேறு பேரங்களுக்கான சூழ்நிலை உருவானது.

இந்தியாவுடனான தொப்புள்பொடிப் பேரம் இந்தியப் படைகளைக் கொண்டுவந்து இறக்கியது. பேரம் பேசக்கூடிய வேளைகளில் பேசாமல் போர் நடாத்தியதன் பயனாகவும் நம்பத் தகாதவர்களை நம்பியதாலும் தமிழரின் பேரம்பேசும் ஆற்றல் எல்லாம் முள்ளிவாய்க்காலில் முடிந்து போனது.

இப்போது தமிழருக்காகச் சர்வதேசம் பேரம் பேசும் என்ற கணக்கில் காலம் போய்க்கொண்டிருக்கிறது. ஆனால், தேர்தல்கள் என்று வரும்போது, எதையாவது உறுதியளித்தாக வேண்டுமே! அதனால்தான் சம்பந்தன் இன்னொரு முறை பேரம் பேச வல்லமை தரும்படி தமிழ் வாக்காளர்களுடன் பேரம் பேசுகிறார். இவ்வளவு காலமும் வழங்கிய வல்லமையை வைத்து என்ன செய்தார்களென்று யாரும் ஏன் கேட்கமாட்டார்கள்?

வடமாகாண முதல்வர் அமெரிக்காவுக்குப் போய் "இனப்படுகொலை பற்றித் தான் தீர்மானங் கொண்டு வந்து நிறைவேற்றியதாலேயே சர்வதேச சமூகம் தமிழர் பிரச்சினை பற்றி மீண்டும் கவனங்காட்டுகிறது" என்று இங்கே எங்கள் காதிற் சுற்றமுயன்று கழன்று போன பூச்சரத்தை அங்கே சுற்ற முயன்றிருக்கிறார். அங்கே கை தட்டினார்கள். காதிற் சுற்றிக் கொண்டார்களோ தெரியாது. எனினும் அவர் சந்திக்க முயன்ற அயல் விவகாரப் பெண் பிரமுகர், வெண்ணை திரண்டு வருகிற வேளையில் தாழியை உடைக்கிற விதமாக எதையும் செய்யாதே என்று பண்பாக எச்சரித்துள்ளார் என்று செய்தி வந்துள்ளது. ஆனால், நமக்கு அவர் எதை வென்று வந்தார் என்று தான் சொல்லப்படும். செய்தி உண்மையா பொய்யா என்பதை விட அது எங்களை மகிழ்விப்பது தானே முக்கியம் என்பதை எல்லா ஊடக நிறுவனங்களும் விளங்கியுள்ளன.

**- கோகர்ணன்**

## தீர்வுத்திட்டம் இன்றிப் பேரம் பேசப் பலம் கேட்பது ஏமாற்று

இருபது ஆசனங்களைத் தந்தால் 2016 இல் தீர்வு என்று சம்பந்தன் கூறுவதை பெரும்பாலானோர் சீரியஸாக எடுக்கப்போவதில்லை. இருபது ஆசனங்கள் கூட்டமைப்புக்குக் கிடைக்காது. நிரந்தர அரசியல் தீர்வுக்கான சூழ்நிலை 2016 இல் உருவாகப் போவதில்லை. இது சம்பந்தனுக்கு தெரியாததல்ல. தேர்தலுக்காக இப்படியொரு கயிற்றை வீசுகின்றார். இப்படியான எதிர்வு கூறல்கள் கூட்டமைப்புத் தலைமையின் நம்பகத் தன்மையைக் கேள்விக்குட்படுத்தக் கூடியவை. மைத்திரி பாலவைத் தெரிவு செய்தால் 2015 இல் தீர்வு என்று சம்பந்தன் கூறினார். சந்திரிகாவின் செயலணி மூலம் வருட இறுதிக்குள் தீர்வு என்று பின்னர் சொன்னார். இப்போது சொல்கிறார் 2016 இல் தீர்வு என்று. எதையாவது சொல்லி வாக்குக் கோட்பது உண்மையான தலைமையாகாது. செய்யப்போவதைச் சொல்லி வாக்குக் கேட்பவர்களே உண்மையான தலைவர்கள். இனப்பிரச்சினைக்கான தீர்வொன்றை முன்வைத்து அதற்கு மக்களின் அங்கீகாரத்தைக் கோருவதன் அவசியத்தை இன்னும் கூட்டமைப்புத் தலைமை ஏற்கவில்லை. யாருடன் பேசுவது, எப்படிப் பேசுவது என்பதெல்லாம் இரண்டாம் பட்சம். எதைப்பற்றிப் பேசுவது என்பதே முக்கியமானதாகும்.




பேரம் பேசுவதற்கான பலத்தைக் கேட்பதொன்றும் தவறல்ல. யாருடன் எதைப் பற்றிப் பேரம் பேசுவது என்ற தெரிவு முதலில் வேண்டும். அமையப்போகும் அரசாங்கத்துடன் பேரம் பேசப்போவதாகக் கூறலாம். எதைப் பற்றிப் பேசுவது? நாங்கள் ஒரு தீர்வை முன்வைத்து அது பற்றி அரசாங்கத்துடன் பேரம் பேசுவது தான் சரியான நடைமுறை. எங்களிடம் தீர்வுக்கான ஆலோசனை இல்லாத நிலையில் பேரம் பேசும் பலத்தைத் தாருங்கள் என்று கேட்பது மக்களை ஏமாற்றும் செயல்.

கூட்டமைப்புத் தலைவர்கள் முதலில் நடைமுறைச் சாத்தியமான தீர்வுத்திட்டத்தையும் அதை அடைவதற்கான அணுகுமுறையையும் முன்வைத்து மக்களின் அங்கீகாரத்தைப் பெறவேண்டும். அதன் பின் அந்தத் தீர்வுத்திட்டத்தின் அடிப்படையில் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடாத்த வேண்டும். இது தமிழ்ப் பிரதேசங்களில் களமிறங்கியிருக்கும் எல்லாக் கட்சிகளுக்கும் பொருந்தும்.

**- சிவா சுப்பிரமணியம்**

## த.தே.கூ வுக்கு வாக்களிக்கும் மக்கள் எந்தக் கொள்கைக்கு அளிக்கிறார்கள்?

நடைபெறவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தல் தன்னுடையதும் சம்பந்தன் ஐயாவினதும் அரசியற் கொள்கை மீதும், உபாய வழிமுறை மீதும் நடத்தப் படவுள்ள பொதுசன வாக்கெடுப்பு என்கிறார் சுமந்திரன். அது நல்ல விடயம். அவரதும் ஐயாவினதும் அரசியல் செல்நெறி பொதுசன அங்கீகாரத்தைப் பெற வேண்டும் என்பதே எனது தனிப்பட்ட விருப்பமும் கூட. ஆனால் - வீட்டுச் சின்னத்தின் கீழ் போட்டியிடுகின்ற அத்தனை வேட்பாளர்களும் இவர்கள் இருவரினதும் கொள்கையை மட்டுமே பேச வேண்டும்; புலிகளைப் "பயங்கரவாதிகள்" என்றும் உரைக்க வேண்டும்; கொழும்போடு இணக்க-அரசியல் செய்யும் கொள்கையையே பரப்ப வேண்டும்; சிங்கள-எதிர்ப்பு அரசியலை எந்த வடிவத்திலுமே பேசக் கூடாது; "தமிழர் ஒரு தேசம்" என்ற கோட்பாடெல்லாம் கதைக்கக் கூடாது; நாம் எல்லோருமே "இலங்கையர்கள்" என்று பிரகடனம் செய்ய வேண்டும். இவ்வாறாக - எல்லோருமே ஒன்றைப் பேசி வாக்குச் சேகரித்தால் தானே அது கட்சியின் கொள்கைக்கும் அரசியல் உபாயத்திற்கும் கிடைத்த பொதுசன அங்கீகாரம் ஆகும்"?

அதற்கு மாறாக - புலிகளைப் "பயங்கரவாதிகள்" என்று சுமந்திரன் ஆங்கிலத்தில் கொழும்பில் அர்த்தப்படுத்துகையில், பிரபாகரனைத் "தலைவன்" என்று சிறீதரன் யாழ்ப்பாணத்திலும், "ரணில்




ஏமாற்றுக்காரன்" என்று அரியநேந்திரன் மட்டக்களப்பிலும் தமிழில் உரைக்கையில், சிறீதரனதும் அரியநேந்திரனதும் உரைகளுக்காகச் சனங்கள் வீட்டுச் சின்னத்திற்கு அளிக்கும் வாக்குகளின் மூலமாகச் சுமந்திரனும் தெரிவாகி ஏழாவது ஆளாகத்தன்னும் நாடாளுமன்றம் செல்லுவாராயின், அது சுமந்திரனின் இணக்க அரசியல் உபாயத்துக்கு கிடைத்த பொதுசன அங்கீகாரம் என அர்த்தமல்லவே. சுமந்திரனின் கொள்கைக்கு மாறான கருத்துக்கு மக்கள் கொடுத்த அங்கீகார வாக்குகளால் அவரும் தெரிவாகி - ஒரு கபட வழியில் சுமந்திரனும் நாடாளுமன்றம் செல்கின்றார் என்பதுதானே அர்த்தம். ஏனெனில் - இலங்கை தேர்தல் முறையில், வாக்காளர்கள் உண்மையில் கட்சிக்குத் தானே தமது வாக்குகளை அளிக்கின்றார்கள்"?

சிங்கள-எதிர்ப்பு அரசியல் செய்து சேனாதிராசாவும் பிரேமச்சந்திரனும் வீட்டுச் சின்னத்திற்குச் சேகரிக்கும் வாக்குகள் மூலமாக சுமந்திரனும் நாடாளுமன்றத்திற்குத் தெரிவாகுவாரெனில் - அது அவரது "மென்சக்தி" வழிமுறைக்கான தமிழ் பொதுசனத்தின் அங்கீகாரம் அல்லவே"? அது உண்மையில் "வன்சக்தி" வழிமுறைக்கான அங்கீகாரம். இவ்வாறாக - சனங்களைக் குழப்பும் முரண்பட்ட அரசியற் பரப்புரைகள் மூலம் தெரிவாகிய பின்பு, சுமந்திரனும் ஐயாவும் தெற்கோடு ஓர் இணக்கப்பாட்டு அரசியலை முன்னெடுப்பார்களாயின், அது அரசியல் நேர்மையும் அல்லவே...? ஒரு வகையில் தமக்கு வாக்களித்த மக்களுக்கே அவர்கள் செய்யும் துரோகம் தானே...?

**- தி.பரந்தாமன்**

---

காத்திரமான கலந்துரையாடல்கள் மூலமாக நாடகத்திற்கான கதையும் நாடக வடிவமைப்பும் உருவாக்கப்பட்டது.

பின்னர் நுண்கடன் பற்றிய ஆபத்துக்கள், அதிலிருந்து மக்களை எவ்வாறு விழிப்படைய வைக்க வேண்டும் என்பது பற்றிய கருத்து நிலையினை பெண்நிலைவாத செயற்பாட்டாளரான வாசுகி ஜெயசங்கருடன் சந்தித்துக் கலந்துரையாடி பல ஆக்க பூர்வமான விடயங்களை கற்றுக் கொண்டோம். இவர் நுண்கடன் பற்றியும் அதனால் மக்கள் எதிர்கொள்கின்ற சவால்கள் பற்றியும் விரிவான, காத்திரமான ஆய்வை மேற்கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

நடிகர்கள் அனைவரும் இணைந்து நுண்கடனினால் சமூகத்தில் ஏற்பட்ட பிரச்சினைக்குரிய சம்பவங்களை எடுத்து அதனைப் புதிதளித்தல் செய்து கலந்துரையாடி நாடகத்தை வடிவமைத்தோம். இவ்வாறு உருவாக்கப்பட்ட நாடகத்தின் கதைச் சுருக்கமானது பின்வருமாறு அமையும்.

பார்வையாளர்களுக்குள் இருந்து இருவர் கைகளைக் கோர்த்துப் பிடித்தபடி பாடல் ஒன்றைப் பாடியவாறு மையப்பகுதிக்கு வந்து விளையாடுவதற்குத் தயாராகி மற்றவர்களையும் அழைத்து விளையாடுவர். இவ்விளையாட்டானது 'கொத்துருக்கு கொத்து' என்ற விளையாட்டாக அமையும். பின்னர் அனைவரும் உறைநிலையில் நிற்க கடன் கொடுப்பவர் தோளில் பறையை சுமந்தவாறு பார்வையாளர்களுக்குள் இருந்து கடன் பற்றிய நன்மைகளைக் கூறிக்கொண்டு மையப்பகுதிக்கு வந்து உறைநிலையில் நின்ற அனைவரையும் தன் பக்கம் இழுப்பார். அப்பொழுது அனைவரும் கடன் கொடுப்பவரிடமிருந்து பணத்தைக் கடனாகப் பிய்த்து எடுத்துக் கொண்டு ஓடுவது போன்று உறைநிலையாவர்.

கடன் கொடுப்பவர் அனைவருக்கும் விண்ணப்பப்படிவத்தைக் கொடுப்பதும் அதில் போதிய விளக்கங்கள், நிபந்தனைகள், வட்டி வீதம், எந்த நிறுவனம்?, எங்கு பதிவு செய்யப்பட்டிருக்கின்றது? போன்ற தெளிவின்மையும் ஒருவரால் சுட்டிக்காட்டப்பட மற்றவர்கள் அவரை விடுத்து கடன் வாங்குவதிலேயே முழு ஆர்வத்தையும் காட்டுவதும் சொல்லப்படுகின்றது. பின்னர் கடன் கொடுப்பவர் விண்ணப்பப்படிவத்தைப் பெற்றுக் கொண்டு இரண்டு பகுதிகளாகப் பிரிந்து நிற்கச் சொல்லி கடன் தொகையையும் வட்டி வீதத்தையும் சொல்லிக் கூப்பிடுவார். இருபக்கமுமிருந்து மக்கள் முண்டியடித்துக் கொண்டு ஓட இறுதியில் ஒருவர் எடுத்துக் கொண்டு ஓடுவார். பின்னர் மீண்டும் அனைவரும் உறைநிலையில் நிற்பர்.

(மீதி நாளை)

# கணக்குப் புதிர்

| | | | |
|---|---|---|---|
| 8 | 1 | 6 | = 15 |
| 3 | 5 | 7 | = 15 |
| 4 | 9 | 2 | = 15 |
| = 15 | = 15 | = 15 | |

21 இலிருந்து 9 இற்குள் ஒரு எண்ணை நினைத்துக் கொள்ளுங்கள் அந்த எண்ணை கீழ்க்கண்ட எண்களால் வரிசையாக பெருக்கினால் நீங்கள் நினைத்த எண்ணே 6-முறை இடம்பெறும். முதலில் 7-ஆல் பெருக்கவும், பின்பு 3-ஆல், அதன் பின்பு 11-ஆல், பிறகு 37-ஆல், கடைசியாக 13-ஆல் பெருக்க வேண்டும். (உதாரணம்:- 1, 1X7=7, 7X3=21, 21X11=231, 231X37=8,547, 8547X13=111111.)

1-முதல் 9-வரை உள்ள எண்களை வைத்து 9-கட்டங்களை நிரப்பி எப்படிக் கூட்டினாலும் கூட்டுத் தொகை 15 வரும் கட்டங்கள் கீழ் உள்ளன பிறரிடம் வெற்றுப் பெட்டியைக் கொடுத்து எண்ணிட வைத்துப்பாருங்கள்

# கம்பிக்கட்டை




நூறு மீற்றர் நீளமான ஒரு வேலிக்கு கம்பி அடிக்க 5 மீற்றர் தூரத்திற்கு ஒரு மரம் நடவேண்டி உள்ளது.

ஒரு மரம் நட 150 ரூபா செலவாகும்.

கேள்வி: தேவையான மரங்களை நடுவதற்கு (மாத்திரம்) எவ்வளவு செலவாகும்?

# எந்தப்பக்கம்

வடக்கு வாசல் வீடொன்றின் குசினி மேசையின் மீது கைபிடியுள்ள ஒரு தேநீர்க் கப் இருக்கிறது. குசினி, வீட்டின் வட கிழக்கு மூலையில் இருக்கிறது.



கிழக்குத் திசையை நோக்கி நிற்கும் ஒருவருக்கு அந்தக் கப்பின் கைபிடி வலப் பக்கமாக இருக்கிறது.

கேள்வி: கப்பின் கைபிடி எந்தப் பக்கத்தில் இருக்கிறது?

உதவி: கொடுக்கப் பெற்ற தரவுகள் சில இடங்களில் உதவியாகவும், சில சந்தர்ப்பங்களில் குழப்பத்தையும் ஏற்படுத்துவதற்காகவும் தரப்படுகின்றன.


# கண்களை நம்பாதீர்கள் மாயத்தோற்றம்



கீழே உள்ள சதுரங்களிற்கிடையில் எத்தனை வெள்ளைப் புள்ளிகளும் கறுத்தப் புள்ளிகளும் உள்ளன?

இங்கே உள்ள எல்லாமே வெள்ளைப் புள்ளிகள் ஆனால் கட்டத்தில் உள்ள வெள்ளைப் புள்ளியை பார்க்கும் போது அருகில் உள்ள வெள்ளைப் புள்ளி கறுப்பாக தோன்றும்

# தப்பித்ததே பெரிசு



ஓநாய் ஒன்று அரக்கப்பரக்க ஆசையுடன் மாமிசத் துண்டு களை வேக வேகமாக சாப்பிட்டது. அப்படி சாப்பிட்டதனால் அதன் தொண்டைக்குள் பெரிய எலும்புத் துண்டு ஒன்று மாட்டிக் கொண்டது. எலும்புத் துண்டு உள்ளேயும் செல்லவில்லை. வெளியேயும் வரவில்லை. ஓநாயும் எப்படி எப்படியோ தலையை ஆட்டிப்பார்த்தது. எலும்புத்துண்டு தொண்டைக்குழியில் நின்று தொந்தரவு தந்தது. நேரம் செல்லச் செல்ல ஓநாய்க்கு வலி தாங்க முடியவில்லை. வேதனையால் கதறியது. அதன் கதறலைக்கேட்டு காட்டு மிருகங்கள் அங்கு வந்து கூடிவிட்டன. ஐயோ... வலிக்கிறதே, என் தொண்டையில் சிக்கிய எலும்புத்துண்டை யாராவது எடுத்துவிடுங்களேன். என்று ஓநாய் கெஞ்சியது, எந்த மிருகமும் உதவிக்கு வரவில்லை.

வலி தாங்க முடியவில்லையே... எனக்கு உதவி செய்தால் அவர்களுக்கு நான் நல்லதொரு பரிசு தருகிறேன். என்று கூறியது ஓநாய். அப்பொழுதும் உதவிக்கு வர மிருகங்கள் தயக்கம் காட்டின.

கொக்கு ஒன்று அந்த நேரம் அங்கு வந்து சேர்ந்தது. கொக்கே... நீயாவது எனக்கு உதவிசெய். தொண்டையில் மாட்டிய எலும்புத்துண்டை எடுத்துவிட்டால் உனக்கு, நீ கேட்கும் பரிசு தருகிறேன் என்று கொக்கைப் பார்த்து பரிதாபமாகக் கெஞ்சியது ஓநாய், கொக்கும் ஒப்புக்கொண்டது. பிறகு ஓநாயின் வாயைத் திறக்கச் சொன்னது. ஓநாயும் தன் பெரிய வாயை அகலமாகத் திறந்தது. கொக்கும் மெதுவாகத் தன் நீண்ட கூடிய அலகை ஓநாயின் வாய்க்குள் செலுத்தியது. பின்னர் மெதுவாக அசைத்து அதன் வாயில் சிக்கியிருந்த எலும்புத் துண்டை வெளியே எடுத்துவிட்டது. அப்பாடா... இப்பதான் நிம்மதி... என்று ஓநாய் மகிழ்ச்சி அடைந்தது. நேரமாகுது, பேசியபடி பரிசைக் கொடுங்கள் என்று ஆவலாய்க் கேட்டது கொக்கு. பரிசா? உனக்கா? அப்போதே கொடுத்து விட்டேனே என்று ஏளனமாய்ச் சொன்னது ஓநாய், எப்போது பரிசு கொடுத்தீங்க? கொக்குக் குழம்பியது.

கொக்கு.. நீ ஒரு மக்கு... என்னோடே வாயுக்குள்ளே உன் அலகைவிட்டு, அப்புறம் அந்த எலும்புத்துண்டை வெளியே எடுத்தாயே அதுவே ஒரு பெரிய பரிசுதானே இப்போ நினைச்சாலும் நான் உன்னை அடிச்சு சாப்பிடலாம். தெரியுதா? ஓநாய் கூறிவிட்டு வாய்விட்டுச் சிரித்தது.

தகுதி இல்லாதவர்களுக்குச் செய்யும் உதவி நன்மை தராது

நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2015
(தேர்தல் மாவட்டம் - வன்னி)



விஜயரட்ணம் சுரேந்தர்
(சுரேன்)



X 6

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)

# பருத்தித்துறை நீதிமன்றில் 24 வழக்குகள் பதிவு

## 94,500 ரூபா தண்டம் அறவீடு



(பருத்தித்துறை)

பருத்தித்துறை நீதிமன்றத் திற்குட்பட்ட பிரதேசங்களில் உள்ள பேக்கரி உரிமையாளர்கள், விற்பனை நிலைய உரிமையாளர்கள், உற்பத்தி நிலைய உரிமையாளர்கள் ஆகியோருக்கு எதிராக சுமார் 24 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு அவர்களிடம் இருந்து 94 ஆயிரத்து 500 ரூபா தண்டப்பணம் அறவிடப்பட்டுள்ளதாக நுகர்வோர் அதிகாரசபையின் யாழ்.மாவட்ட இணைப்பதிகாரி வசந்தசேகரன் தெரிவித்துள்ளார்.

இதன்படி நிறைகுறைவான பாண் உற்பத்தி செய்தமை தொடர்பாக பேக்கரி உரிமையாளர்களுக்கு எதிரான 3 வழக்குகளும், காலாவதியான பொருட்கள் விற்பனை தொடர்பாக 11 வழக்குகளும், உற்பத்தி தொடர்பான விபரம் இல்லாமல் விலைப் பட்டியல் காட்சிப்படுத்தாமை, கூடிய விலையில் பொருட்கள் விற்பனை என்பன தொடர்பாக 10 வழக்குகளும் பதிவு செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை, காலாவதியான பொருட்கள் விற்பனையில் முகத்துக்கு பூசுவதற்காக பயன்படுத்தப்படுகின்ற கிரீம் வகைகளே அதிகம் அடங்குவதாகவும் காலாவதியான பொருட்களை விற்பனை செய்தமை தொடர்பில் பலநோக்கு கூட்டுறவு சங்கமும் அடங்குவதாக வசந்தசேகரன் தெரிவித்தார்.

குறித்த வழக்குகள் கடந்த மாதத்திலும் இந்த மாத முற்பகுதியிலும் நடாத்தப்பட்ட சுற்றி வளைப்பின் போதே கண்டு பிடிக்கப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# யாழ்ப்பாண நினைவுகள் 2 நூல்வெளியீட்டு விழா




வேதநாயகம் தபேந்திரனின் யாழ்ப்பாண நினைவுகள் 2 நூல் வெளியீட்டுவிழா நேற்று முன்தினம் நடைபெற்றது.

யாழ்ப்பாணம் திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது கலையகத்தில் பிற்பகல் 2.35 மணியளவில் யாழ். இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தலைவரும், யாழ்ப்பாண ஹற்றன் நஷனல் வங்கி, மெற்றோ கிளை, முகாமையாளர் சிவசரவணபவன் சுந்தரேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வரவேற்புரையினை கிளிநொச்சி ஊற்றுப்புலம் அ.த.க. பாடசாலை அதிபர் மகேசன் உமா சங்கர் நிகழ்த்தினார்.

வாழ்த்துரைகளை யாழ். இந்துக்கல்லூரியின் ஓய்வுநிலை பிரதி அதிபர் பொன்னம்பலம் ஞானதேசிகன், கைதடி அரச முதியோர் இல்ல அத்தியட்சகர் தங்கவடிவேல் கிருபாகரன், மற்றும் இராசரத்தினம் சிறிகரன் ஆகியோர் நிகழ்த்தினார்கள்.

நூல் வெளியீட்டுரையினை மட்டக்களப்பு கிழக்குப் பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் ஆறுமுகம் சௌந்தரலிங்கம் நிகழ்த்தி நூலினை வெளியீடு செய்ய நூலின் முதற்பிரதியினை திரு திருமதி வே.இளங்கோவன் சுஜ்வா பெறறுக்கொண்டனர். நூலின் மதிப்பீட்டுரையினை கிளிநொசசி காவேரி கலாமன்ற இயக்குனர் வணபிதா ரி.எஸ்.ஜோசுவா நிகழ்த்தினார். ஏறபுரையினை நூலாசிரியர் நிகழ்த்தினார். (160,105)

# மாடுகள் திருட்டு; மக்கள் விசனம்

(யாழ்ப்பாணம்)

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொடிகாமம் வடக்கு தாவளை இயற்றாலை போன்ற பகுதிகளில் மேய்ச்சலுக்காக மாடுகள் செல்லும்போது திருடப்படுவதாகவும் அவை இறைசசிக்கு வெட்டப்படுவதாகவும் பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

அண்மையில் கொடிகாமம் தெற்குப் பகுதியில் வீட்டில் கட்டப்பட்டிருந்த பசுமாடு ஒன்று இரவு நேரம் களவாடப்பட்டிருந்தது.

சுகாதார பரிசோதகரின் அனுமதியுடனேயே மாடுகள் இறைசசிக்கு வெட்டப்படவேண்டும் என்ற நடைமுறை உள்ள போதிலும் திருடடுத்தனமாக வெட்டப்படும் மாட்டிறைச்சி எவ்வாறு சந்தைக்கு வருகின்றது என்றும் மக்கள் கேள்வியெழுப்புகின்றனர்.

அத்துடன் திருட்டுத்தனமாக வெட்டப்படும் மாடுகளின் கழிவுப் பொருட்களை வீதிகளில் விட்டுச் செல்வதனால் பொது மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்கின்றனர். எனவே சமபந்தப்பட்ட அதிகாரிகள் கவனமெடுத்து மாடுகள் திருடப்படுவதனைத தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்கவேண்டுமென இப்பகுதி பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**ஈரான் அணுசக்தி.....**

இப்போது ரஷ்யக் கம்பெனிகள் ஈரானில் எண்ணெய் வயல்களைக் குத்தகைக்கெடுப்பது, தொழில்நுட்ப உதவிகள் பற்றிய பேச்சுக்கள் தொடங்கியுள்ளன. இவை ரஷ்யாவுக்கு அவசியமானவை. இதனாலேயே ரஷ்யா, இவ்வுடன்படிக்கைக்கு தனது ஆத்ரவை வழங்கியுள்ளதன் மூலம் ரஷ்ய ஆதரவின்றி உலக விடயங்களில் முடிவெடுக்க இயலாது என்ற நிலையை உருவாக்கியுள்ளது.

இவ்வுடன்படிக்கைக்கான ஏனைய ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் ஆதரவானது அவர்களது பொருளாதார நலன் சார்ந்தது. ரஷ்யா மீதான பொருளாதாரத் தடைகள் எண்ணெய் வர்த்தகத்தில் நெருக்கடியை மறைமுகமாகத் தோற்றுவித்துள்ளன. பொருளாதாரத் தடைகள் விதிக்கப்பட முன், ஐரோப்பிய ஒன்றியத்துக்கான எண்ணெய் விநியோகத்தில் 42 சதவீத சந்தையை ஈரான் கொண்டிருந்தது குறிப்பிடத்தக்கது. ஈரான் அணுசக்தி உடன்படிக்கையானது அணுஆயுத உற்ப்த்தி சார்ந்த விடயங்களுக்கப்பால், பூகோள அரசியலையும் உலகப் பொருளாதார நலன்களையும் அடிப்படையாகக் கொண்டது. இதில் ஈரான் அடைந்திருக்கின்ற வெற்றி சொல்கிற செய்தி: உலக அரங்கில் வலியோர் எப்போதும் வெல்வதில்லை.

(முற்றும்)

# பதிவிறக்கப் பெட்டகம்

இந்தப் பொதுத்தேர்தலில் தமிழ் மக்களிடம் வாக்குறுதி கொடுப்பதற்குரிய எவ்வித எதிர்ப்பு முழக்கங்களும் கூட்டமைப்பிடம் இல்லை. முன்னைய தேர்தல்களில் தெற்கிலும் எமது பலத்தைக் காட்ட வேண்டும்; சர்வதேசம் எம்மை உற்று அவதானிக்கிறது; எமது உரிமைகளின் நியாயப்பாட்டைத் தேர்தல் மூலம் எடுத்துக் காட்ட வேண்டும் எனத் தமிழ் உணர்ச்சி கலந்த பிரசாரப்படுத்துவார்கள். ஆனால், இத்தேர்தலில் இனவுணர்வூட்டி தேர்தல் வெறியேற்ற எதுவும் கிடைக்காத நிலையில் மிகத் தாழ்ந்த குரலில் வாக்குக் கேட்டு வரும் போக்கினையே காண முடிகிறது.

மைத்திரி – ரணிலின் வரவுடன் இணக்க அரசியலில் கை கோர்த்து வந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெயருக்குத் தானும் எதிர்ப்புக்குரல் கொடுக்க முடியாத நிலைக்குள் இருந்து வருகிறது. முன்பெல்லாம் போராட்டம் வெடிக்கும், மக்கள் பொங்கி எழுவார்கள், அகிம்சைப் போராட்டத்தில் குதிப்போம் என்பார்கள். ஆனால் இப்போது பேரம் பேசுவதற்குக் குறைந்தது இருபது ஆசனங்கள் தரவேண்டும் எனக் கெஞ்சும் குரலில் கேட்கிறார்கள். – **காலகண்டன்**

இனப்பிரச்சினைக்கு என்ன தீர்வென்டு கேட்கிறீர்கள்? அதுக்கும் நாடாளுமன்றத் தேர்தலுக்கும் என்ன சம்பந்தம்?

சம்பந்தம் இருக்கிறதெனச் சம்பந்தர் சொல்லுவார். ஒரு வருடத்தில தீர்வென்றும் சொல்லுவார். சம்பந்தர் எல்லாம் சொல்லுவார். சம்பந்தமில்லாமலும் சொல்லுவார். அண்மையிற் கூட, தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுத பலத்தைப் பார்த்துப் பயந்து பேச்சுவார்த்தைக்கும் தீர்வுக்கும் அன்றைய அரசு முன்வந்ததாகவும் அந்த இராணுவ பலத்தை தற்போது அரசியல் பலமாக மாற்றவேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

அந்த ராணுவ பலமோ? எங்கை... இதில வைச்சன் காணேல்லை!! – **தேவ அபிரா**

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் வடக்கு கிழக்கில் உள்ள 5 தேர்தல் மாவட்டங்களில் இருந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு 20 ஆசனங்கள் கிடைத்தால், 2016ல் தமிழ் மக்களுக்கான தீர்வு பெறப்படும் என்றும் அத்தோடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது அரசியல் பயணத்தை முடித்துக் கொள்ளும் என்றும், திருமலையில் தனது தேர்தல் பிரசாரத்தைத் தொடங்கிய திரு. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்கில் உள்ள 5 தேர்தல் மாவட்டங்கள் மொத்தமாக 29 உறுப்பினர்களைக் கொண்டது. அதில் 20 ஐ தமக்குத் தரும்படி கூட்டமைப்பின் தலைவர் கேட்கிறார். யாழில் 7, வன்னியில் 6, திருமலையில் 4, மட்டக்களப்பில் 4, அம்பாறையில் 7 என மொத்தம் 29 உறுப்பினர்களில் 20 பேரை; கூட்டமைப்புக்கு வாக்களிப்பதன் மூலம் தெரிவு செய்ய, வாக்காளருக்கு அழைப்பு விடுக்கிறார் அதன் தலைவர்.

தற்போது உள்ள கள நிலவரப்படி யாழில் 5 வன்னியில் 3 திருமலையில் 2 மட்டக்களப்பில் 3 அம்பாறையில் 1 மொத்தம் 14 ஆசனங்கள் வருவதற்கான நிலைமையே எதிர்வு கூறப்படுகிறது. இதில் கூட இழப்புகளுக்குச் சாத்தியம் உண்டு. அப்படி என்றால் 20 எப்படி வரும்? தேசியப்பட்டியல் ஆசனத்தில் 1 அல்லது 2 கிடக்கலாம்: அதைச் சேர்த்துக் கூட்டினாலும் 20 எப்படி வரும்? ஞானப்பால் உண்டவர் தான் விளக்கம் தரவேண்டும்.

தமிழர் தரப்பிடம் ஒரு பழக்கம் உண்டு. நிறைவேற்ற முடியாத அல்லது நிறைவேறாத கோரிக்கையை முன்வைத்தல – அது எதிர்த் தரப்பினரிடம் மட்டும் அல்ல தமது தரப்பினரிடமும். இம்முறையும் அதையேதான் முன்வைக்கின்றனர். இதனால் தொடர்ந்தும் கேட்டோம்.... நீங்கள் தரவில்லை எனவே எம்மால் ஒன்றும் செய்ய முடியவில்லை என்று கையை விரித்தபடி இன்னொரு தேர்தலை எதிர்நோக்கி காத்திருப்பர். மீண்டும் அடுத்த தேர்தலிலும் தமிழ் மக்களிடம் ஆணையைக் கோரியே நிற்பர். பரம்பரை பரம்பரையாக இவ்வாறு பிழைப்பு ஓடிக்கொண்டுதான் இருக்கின்றது – இருக்கத்தான் போகின்றது. பாவம் தமிழ் மக்கள். தமிழர்களிடம் இருக்கும் Short Term Memory (குறுங்கால ஞாபக சக்தி) மீண்டும் அடுத்த தேர்தல் வரும்போது நித்திரையால் எழும்பி கண்ணைக் கசக்கியபடி வீட்டுக்கு நேரே புள்ளடியைப் போட்டுவிட்டு அடுத்த பொங்கல் தமிழ் ஈழத்தில் தான் நடைபெறும் என்று நம்பிக்கொண்டு காத்திருப்பர்.

– **மாதவன் சஞ்சயன்**

# சேறுபூசும் அரசியலில் ஈடுபடப் போவதில்லை

## கூறுகிறார் ரில்வின் சில்வா



(கொழும்பு)

சேறு பூசும் அரசியலில் ஈடுபடப் போவதில்லை என ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

நாம் சேறு மற்றும் இழிவு படுத்தும் அரசியலில் ஈடுபடுவதில்லை. எனினும் சில சில அரசியல் கட்சிகள் வழமையான சேறு பூசும் அரசியலில் ஈடுபட்டு வருகின்றன.

அதிகாரம் இழந்து போய்க் கொண்டிருக்கும் தரப்புக்கள் இவ்வாறு போலிப் பிரசாரங்களை முன்னெடுத்து வருகின்றன. ஜே.வி.பி கட்சியின் மீது சேறு பூசும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சிலர் கடுமையான பொய் வாக்குறுதிகளை அள்ளி வீசுகின்றனர். இவ்வாறான இழிவான அரசியல் பிரசாரங்களில் நாம் ஈடுபடப் போவதில்லை.

சமூகத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட மதிநுட்பமான வேட்பாளர்களை நாம் தேர்தலில் போட்டியிடச் செய்கின்றோம் என ரில்வின் சில்வா நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பொன்றில் தெரிவித்துள்ளார்.

# இருமடங்கு முதியோர் கொடுப்பனவு

# 4402 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

(கொழும்பு)

முதியோர்களுக்கான கொடுப்பனவை இருமடங்காக வழங்குவதற்கு யூலை மாதம் வரை 4402.5 மில்லியன் ரூபா நிதியை திறைசேரி ஒதுக்கியுள்ளது என சமூக சேவைகள் நலன்புரி மற்றும் கால்நடை அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் ரேணுகா ஏக்கநாயக்க தெரிவித்தார்.

இடைகால வரவுசெலவுத் திட்டத்திற்கமைய இந்நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. பதிவு செய்யப்பட்ட அனைவருக்காகவும் அரசு வருடாந்தம் 5000 இலட்சம் ரூபா நிதியை ஒதுக்க வேண்டியுள்ளது. கடந்த அரசினால் 1000 ரூபாவாக வழங்கப்பட்ட கொடுப்பனவு புதிய அரசாங்கத்தினால் 2000 ரூபாவாக அதிகரித்து வழங்கப்படுகிறது.



தெரிவு செய்யப்பட்ட 386,080 முதியோர்களுக்கு இக்கொடுப்பனவு வழங்கப்படுகிறது. அதற்கமைய 2014 ஆம் ஆண்டை விட 2015 ஆம் ஆண்டில் இக்கொடுப்பனவை பெறும் முதியோர்களின் எண்ணிக்கை 137,238 ஆக அதிகரித்துள்ளது. இக்கொடுப்பனவை பெறுவதில் முதியோர்களுக்கு சிக்கல்கள் ஏதும் இருப்பின் அதனை தீர்த்து வைப்பதற்காக முதியோர் செயலக அதிகாரிகள் இருவர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பிரச்சினைகள் தொடர்பில் 0777536034 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக பணிப்பாளர் சுவிந்த எஸ். சிங்கப்புலி அல்லது 0716886121 / 0112587003 என்ற தொடர்பு இலக்கங்களினூடாக உதவிப் பணிப்பாளர் (அபிவிருத்தி) திருமதி நயனா சிங்கப்புலிகே ஆகியோருக்கு தெரிவிக்கலாம். ஒவ்வொரு மாதமும் 15 ஆம் திகதி தொடக்கம் 22 ஆம் திகதி வரை இக்கொடுப்பனவை பெற்றுக்கொள்ளலாம்.

அமைச்சு அந்நிதியை மாவட்ட செயலாளர்களுக்கு அனுப்பி வைக்கும். அந்நிதி பிரதேச செயலாளர்களினூடாக தபால் நிலையங்கள், உபதபால் நிலையங்களில் மக்களுக்கு வழங்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# வெளிநாட்டு கடனில் வீதி அமைப்பு அபிவிருத்தி அல்ல என்கிறார் அனுர



(கொழும்பு)

வெளிநாடுகளில் கடன்களை பெற்று வீதிகள் மற்றும் பாலங்கள் ஆகியன நிர்மாணிக்கப்படுவது அபிவிருத்தி என அடையாளப்படுத்த முடியாது என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

குருநாகலில் இடம்பெற்ற பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அக்குரஸ்ஸ நகரில் அண்மையில் நடைபெற்ற பிரசாரக் கூட்டம் ஒன்றில் மகிந்த ராஜபக்ஷ தனது கட்சி ஆதரவாளர் ஒருவரை தாக்க முயற்சித்ததோடு, பின்னர் அது தொடர்பில் பல்வேறு மாறுபட்ட கருத்துக்களை கூறி சம்பவத்தை மூடிமறைக்க முயற்சித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு முன்னர் இப்படியான பல சம்பவங்கள் நடைபெற்றுள்ளதாகவும், இவ்வாறான சந்தர்ப்பங்களில் ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவு அதிகாரிகள் கமராக்களில் பதிவாகிய காட்சிகளை அழித்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும் தற்போது ஊடகங்களுக்கு ஓரளவு சுதந்திரம் கிடைத்துள்ளதால், உண்மையான மகிந்த வெளியில் தெரிய ஆரம்பித்துள்ளதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

# தேர்தல் வன்முறைகள் வீழ்ச்சி

## கபே

தேர்தல் வன்முறைச் சம்பவங்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக கபே எனப்படும் தேர்தல் கண்காணிப்பு நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஒப்பீட்டளவில் கடந்த தேர்தல்களை விடவும் இம்முறை தேர்தல் விதி மீறல் சம்பவங்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி பதிவாகியுள்ளது. அனுராதபுரத்தில் முன்னிலை சோசலிச கட்சி உறுப்பினர்கள் மீது தாக்குதல் நடாத்தப்பட்டிருந்தது.

யாழ்ப்பாணத்தில் பொலிஸார் மேற்கொண்ட சுற்றி வளைப்பு தேடுதல்களின் மூலம் சுவரொட்டிகள் மீட்கப் பட்டிருந் தன. எவ்வாறெனினும் அரசியல் மேடைகளில் குரோத உணர்வைத் தூண்டும் பேச்சுக்கள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளது.

# தேவையேற்பட்டால் பிரதமருடன் பேச்சுவார்த்தை நடத்தப்படும்

## லால்காந்த தெரிவிப்பு

(கொழும்பு)


தேவை ஏற்பட்டால் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் தமது கட்சி பேச்சுவார்த்தை நடாத்தும் என ஜே.வி.பி கட்சியின் மாகாணசபை உறுப்பினர் கே.டி. லால்காந்த தெரிவித்துள்ளார்.

அண்மையில் நாத்தன்டிய பிரதேசத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் அவர் இதனைக் குறப்பிட்டுள்ளார்.கடந்த காலங்களில் இவ்வாறான பேச்சுவார்த்தைகள் நடாத்தப்பட்டுள்ளன.

சில பிரச்சினைகள் தொடர்பில் பிரதமர், ஜனாதிபதி, முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா அல்லது வேறும் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்தத் தயார்.

நாட்டின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண இவ்வாறான பேச்சுவார்த்தைகள் நடத்தப்படும்

அவ்வாறு நடாத்தப்படும் பேச்சுவார்த்தைகளை மையமாகக் கொண்டு ஜே.வி.பி ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து கொண்டுள்ளதாக எவரேனும் குற்றம் சுமத்தினால் அதைப் பற்றி கவலைப்படப் போவதில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.




நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2015
(தேர்தல் மாவட்டம்-வன்னி)



சுந்தரம் குமாரசாமி



ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி)


# கார் மோட்டார் சைக்கிள் நேருக்கு நேர் மோதி விபத்து

## மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் மரணம்



(கொழும்பு)

மாத்தறையில் ஹக்மன வீதியில் மோட்டார் சைக்கிளும் காரும் நேருக்கு நேர் மோதியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் சம்பவ இடத்தில் மரணமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

நேற்று முன்தினம் மோட்டார் சைக்கிளில் தந்தையும் மகனும் பயணித்துக் கொண்டிருந்த போது எதிரே வந்த கார் இவர்களது மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் அதில் பயணித்த தந்தை ஸ்தலத்தில் மரணமடைந்துள்ளார்.

இவ்விபத்தில் படுகாயமடைந்த நிலையில் அவரது மகன் மாத்தறை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்விபத்துடன் தொடர்புடைய காரின் சாரதியை பொலிஸார் கைது செய்துள்ளதுடன் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

02) முட்டையிட்டு குஞ்சு பொரித்து பாலூட்டும் பிராணி எது?
01. தாரா 02. வெளவால் 03. பிளாற்றிபஸ் 04. பெண்குயின்

03) இலங்கையில் சுவர் ஓவியத்திற்கு பிரசித்தி பெற்ற இடம் எது?
01. பொலநறுவை 02. அனுராதபுரம் 03. கண்டி 04. காலி

04) தலதா மாளிகை அமைந்துள்ள இடம் எது?
01. கண்டி 02. கோட்டை 03. கம்பளை 04. குருநாகல்

05) இலங்கையின் தேசிய விளையாட்டில் இடம்பெறும் வீரர்களின் எண்ணிக்கை யாது?
01. 7 02. 6 03. 11 04. 19

06) இலங்கையில் அதிக மழையைப் பெறும் இடம் எது?
01. வட்டவளை 02. குருநாகல் 03. கம்பளை 04. யாழ்ப்பாணம்

07) நீளத்தை அளக்கும் சர்வதேச அலகு எது?
01. மீற்றர் 02. சென்ரிமீற்றர் 03. கிலோமீற்றர் 04. மில்லிமீற்றர்

08) நள்ளிரவில் சூரியன் உதிக்கும் நாடு எது?
01. நோர்வே 02. ஜப்பான் 03. அமெரிக்கா 04. சீனா

09) கம்பியூட்டர் மொனிற்றர் (computer Monitor) என்பதன் சரியான தமிழ் வடிவம் எது?
01. கணனி காட்சி 02. கணனித்திரை 03. கம்பியூட்டர் திரை 04. கணனி மொனிற்றர்

10) பக்ஸ் (Fax) என்பதன் தமிழ்வடிவம் எது?
01. தொலைநகல் 02. தொலை அஞ்சல் 03. தொலைச்செய்தி 04. தொலைபேசி

11) இலங்கையில் தற்போது உள்ள நாடாளுமன்ற அங்கத்தவர்களின் எண்ணிக்கை யாது?
01. 226 02. 225 03. 125 04. 220

(13) 'நான் பறவையானால' என்ற தலைப்பின் கீழ் ஆறு வாக்கியங்கள் எழுதுக ஒவ்வொரு வாக்கியத்திலும் நான்கு சொற்களாயினும் இடம்பெறுவதுடன் அவ் வாக்கியங்களின் எழுவாய், பயனிலைகளும் திருத்தமான முறையில் அமைதல் வேண்டும்

01) ........................................

02) ........................................

03) ........................................

04) ........................................

05) ........................................

06) ........................................

நேற்று பிரசுரமாகிய வினாக்களுக்கான விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (01) 01. II | 02. III | 03. III | 04. II | 05. III | (02) 01. I |
| 02. 2 | 03. 1 | 04. 3 | 05. 3 | 06. 2 | 07. 1 |
| 08. 3 | 09. 2 | 10. 2 | 11. 3 | 12. 1 | 13. 1 |
| 14. 3 | 15. 1 | 16. 3 | 17. 3 | 18. 3 | 19. 2 |
| 20. 1 | 21. 1 | 22. 2 | 23. 1 | 24. 3 | 25. 1 |
| (03) 01. II | 02. III | (04) 01. I | 02. I | (05) 01. I | 02. III |
| 03. III | (06) 01. 3 | 02. 3 | 03. 3 | 04. 2 | 05. 1 |
| 06. 3 | 07. 2 | (07) 01. I | 02. II | 03. III | 04. III |
| 06. III | 07. III | | | | |

**இப் பயிற்சி வினாக்களின் விடைகள் நாளை வெளியாகும்**



## தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை முன்னோடி - 2015

பகுதி - I
1 மணி 15 நிமிடம்



# கல்வி முரசு

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க

01) பின்வரும் பாடலை வாசித்து 1 முதல் 5 வரையிலான வினாக்களிற்கு விடைகளை புள்ளிக் கோட்டில் எழுதுக.

பருத்ததலை கழுத்தமுகம்
இடித்தகுரல் உடையோன்
பதுங்கி நின்று விலங்குகளைப்
பாய்ந்து கொன்று தின்பேன்

எடுத்தஇரை தனையடிப்பேன்
முன்னங்காலிலே
என் நகமும் கோரப்பல்லும்
கிழித்திடவே உதவும்

கழுத்தினிலும் பிடரியிலும்
நீண்ட மயிர் கொண்டேன்
அல்லும் பகலும் ராஜாவாக
காட்டினிலே வாழ்ந்திடுவேன்

1) இப்பாடலை பாடும் விலங்கு எது? ........................................

2) இது விலங்குகளை எவ்வாறு பிடித்து உண்ணும்? ........................................

3) இது இரையை எவற்றினால் கிழிக்கும்? ........................................

4) இவ்விலங்கு இலங்கையில் ஏன் முக்கியத்துவமுடையதாகக் கருதப்படுகின்றது?
........................................

5) இவ்விலங்கு வாழும் இடம் எது? ........................................

(02) இப்பாடலில் காணப்படும் பெயர்ச்சொற்கள் இரண்டு தருக?
1) ........................................ 2) ........................................

(03) அடைமொழிச்சொற்கள் இரண்டு தருக
1) ........................................ 2) ........................................

(04) இணைமொழி ஒன்று தருக
1) ........................................

(05) ஒத்தகருத்துச் சொற்களை எழுதுக
1) இரை ........................................ 2) தலை ........................................ 3) முகம் ........................................

(06) கீழே தரப்பட்டுள்ள மரத்தின் பகுதிகளுக்கு உரிய ஆங்கிலச் சொற்களை எழுதுக



(07) கீழே கொடுக்கப்பட்டுள்ள நூலக அங்கத்துவப்படிவத்தை நீர் ஓர் அங்கத்தவராகச் சேர்ந்து கொள்ளப் போகிறீர் எனக் கருதி பொருத்தமான இடத்தில் நிரப்ப வேண்டிய பகுதிகளைப் பூர்த்தி செய்க

## நூலக அங்கத்துவ விண்ணப்பம்

01. மாணவர் பெயர் :- ..........................................

02. முகவரி :- ..........................................

..........................................

03. தரம் :- ..........................................

04. வயது :- ..........................................

05. பாடசாலையின் பெயர் :- ..........................................

நூல் நிலையம் சம்பந்தமான சட்டதிட்டங்களுக்கு கட்டுப்பட்டு நடப்பதாக இத்தால் உறுதி அளிக்கிறேன்

06. திகதி :- ..........................  07. மாணவர் கையொப்பம்

- - - - - - - - - - - - - - - - - - - -

மேற்கூறிய விண்ணப்பதாரியை அங்கீகரிக்கின்றேன்

..........................  ..........................

அதிபர் கையொப்பம்  நூலகர் கையொப்பம்

08. அங்கத்துவ இலக்கம் :- ..........................................

09. பற்றுச்சீட்டு இலக்கம் :- ..........................................

10. திகதி : ..........................................

(08) ராஜன் மாணவன் அவன் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தில் கொள்வனவு செய்த பொருட்கள் பற்றிய விபரங்கள் பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளன இவற்றை அடிப்படையாகக் கொண்டு கீழ்வரும் வினாக்களிற்கு விடை தருக

| பொருட்கள் | நிறை | விலை |
|---|---|---|
| அரிசி | 2 kg | 160.00 |
| பருப்பு | 250 g | 15.00 |
| சீனி | 750g | 45.00 |
| தேயிலை | 100 g | 12.00 |
| நல்லெண்ணெய் | 500mL | 12.50 |

01. இப்பொருட்களை வாங்க ராஜன் செலவிட்ட பணம் எவ்வளவு? ..........................

02. 500g தேயிலையின் விலை என்ன? ..........................

03. 750ml நல்லெண்ணையின் விலை என்ன? ..........................

04. 5kg சீனியின் விலை என்ன? ..........................

05. ராஜன் கொள்வனவு செய்த அரிசியை 157.50 இற்கு விற்றானாயின் அவன் பெற்றது இலாபமா? நஷ்டமா? எவ்வளவு? ..........................


06. ராஜன் மொத்தம் எத்தனை கிலோகிராம் பொருட்களைக் கொள்வனவு செய்துள்ளார்? ..........................



(09) வண்ணத்துப்பூச்சியின் வாழ்க்கை வட்டம் தொடர்பாக 01 முதல் 09 வரையான வினாக்களிற்கு விடை தருக

பின்வரும் வாழ்க்கை வட்டப்படிவங்களை ஒழுங்கில் எழுதுக

01) 02) 03) 04)



05) இதன் முட்டை எதன் மூலம் பொரிக்கும்? ..........................

06) மனிதனுக்கு தீங்கு விளைவிக்கும் இதன் பருவம் எது? ..........................

07) இதன் குடம்பியை எவ்வாறு அழைப்பர்? ..........................

08) இது எதன் மூலம் தேனை உறிஞ்சும்? ..........................

09) இதன் மூலம் சூழல் அடையும் நன்மை ஒன்று தருக? ..........................

(10) கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு கூற்றும் சரியாயின் (சரி) எனவும் பிழையாயின் (பிழை) எனவும் அடைப்பினுள் எழுதுக

01) இலங்கை மக்களின் பிரதான உணவு நெல் (அரிசி) ஆகும் (    )

02) புல்லாங்குழல் காற்றுக்கருவி ஆகும் (    )

03) எரிதலுக்குப் பயன்படும் வாயு ஒட்சிசன் ஆகும் (    )

04) தேசியகீதத்தை இசைக்கும் போது நிற்க வேண்டிய நிலை நிமிர்ந்த நிலை ஆகும் (    )

05) சுரங்களின் எண்ணிக்கை ஆறு ஆகும் (    )


06) சிவப்பு, பச்சை, மஞ்சள் என்பன மூல வர்ணங்கள் ஆகும் (    )

07) வித்துக்களைப் பயன்படுத்தி 'அல்பனா', 'மொஜாயிக' போன்ற சித்திரங்களை ஆக்கலாம் (    )

08) மனிதனுக்கு நன்மை செய்யும் பிராணி அல்லாதது காகம் ஆகும் (    )

(11) கீழே தரப்பட்டுள்ள உருக்களின் பெயர்களை புள்ளிக்கோட்டின் மீது எழுதுக


01)  ..........................

02)  ..........................

03)  ..........................

04)  ..........................

05)  ..........................


06)  ..........................

(12) 01 முதல் 11 வரையிலான வினாக்களிற்கு சரியான விடையைத் தெரிவு செய்து கோடிடுக

01) கியூலெக்ஸ் நுளம்புக்குடம்பி நீர் மேற்பரப்பில் காணப்படும் வடிவம் எது?


01. கோண வடிவம்
02. சமாந்தர வடிவம்
03. சேர்ந்த வடிவம்
04. தனித்தனியான வடிவம்

# தேர்தல் களம் 2015



## தீவக மக்கள் எமக்கு அரசியல் பலத்தை தரும் பட்சத்தில் குடிநீர் பிரச்சினையை தீர்க்க முடியும்

### முதன்மை வேட்பாளர் டக்ளஸ் தேவானந்தா



தீவக மக்கள் எமக்கு அரசியல் பலத்தை தரும் பட்சத்தில் தீவகத்திற்கான குடிநீர் பிரச்சினையை முற்றாகத்தீர்க்க முடியுமென ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், முதன்மை வேட்பாளருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். தீவகத்திற்கு நேற்று தேர்தல் பரப்புரைக்காக சென்றிருந்த செயலாளர் நாயகம் புங்குடுதீவு மக்களை சந்தித்து கலந்துரையாடிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தீவக மக்களின் குடிநீர் பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் நாம் பல செயற்றிட்டங்களை கடந்தகாலங்களில் முன்னெடுத்திருந்த் போதிலும் அதனை நடைமுறைப்படுத்துவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தடையாக இருந்து வந்தனர். இந்த நிலையில், தீவக மக்களின் குடிநீர் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டுமாயின் மக்கள் எமக்கு முழுமையான அரசியல் பலத்தைத்தர வேண்டும். அவ்வாறு மக்கள் எமக்கு அரசியல் பலத்தை தருகின்ற போது தீவக மக்களின் குடிநீர் உள்ளிட்ட ஏனைய பிரச்சினைகளுக்கும் முன்னுரிமையடிப்படையில் தீர்வுகளைப் பெற்றுத்தர முடியும்.

நாம் இரணைமடு குடிநீர்த் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டுமென விரும்பியிருந்த போதிலும் அத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு கூட்டமைப்பினர் தடையாக இருந்தனர் என்றும் ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் சுட்டிக்காட்டினார். இதனிடையே புங்குடுதீவு மட்டுமல்ல தீவகத்தின் கல்வித்தரத்தை மேம்படுத்தும் முகமாக பிரத்தியேக வகுப்புக்களுக்கு நடவடிக்கை எடுக்கும் அதே வேளை, இங்கு புதியதொரு தரமான கல்வி நிலையத்தை உருவாக்குவதற்கும் நடவடிக்கை முன்னெடுககப்படுமென்றும் சுட்டிக் காட்டினார். தொடர்ந்து புங்குடுதீவு 11ஆம வட்டாரத்திலுள்ள பாரதி முன்பள்ளிக்குச் செயலாளர் நாயகம விஜயம் மேற்கொண்டார். இதே போன்று புங்குடுதீவு 3 ஆம் வட்டார மக்களை சந்தித்து கலந்துரையாடினார்.

இதன்போது ஈழ மக்கள் ஜனநாயகக்கட்சியின் வேட்பாளர் சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்) உடனிருந்தார்.

## மக்கள் நலன்களை புறக்கணித்தே தமிழ் கூட்டமைப்பு செயற்படுகின்றது

### பொற்பதியில் வேட்பாளர் இரா.செல்வவடிவேல்



எப்போதும் எதிர்த்தரப்பை முன்னிறுத்தி அரசியல் செய்யும் பழக்க தோஷத்தால், மக்களின் நலன்களுக்கு விரோதமாகவே செயற்படும் மனப்பாங்கையே தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் கொண்டிருப்பதாக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் வேட்பாளர் இரா.செல்வவடிவேல் தெரிவித்துள்ளார்.

கொக்குவில் பொற்பதியில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் உரையாற்றுகையில்,

நல்லூர் பிரதேசசபையை ஆளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் பதவிக்காலம் இந்த வருடம் டிசம்பர் மாதத்துடன் முடிவடையப்போகின்றது. ஒரு வீதியைக் கூட சரியான முறையில் காப்பெற் வீதியாக திருத்தம் செய் தார்களா?

மில்லியன் கணக்கான நிதியினைப்பல வழிகளில் அரசிடம் பெற்றிருந்தும் இந்த பிரதேச சபைக்குள் வருகின்ற பிரதேசங்கள் சரியான அபிவிருத்தியினைப் பெறவில்லை என்ற குறையினை இந்தப் பகுதி மக்கள் எப்போதும் வெளிப்படுத்தி வந்துள்ளனர்.

உங்கள் பிரதேசங்கள் அபிவிருத்தி செய்யப்படும் வீதிகள் அனைத்தும் காப்பெற் வீதிகளாக மாற்றப்படும் அபிவிருத்திப் பாதையின் முன்னோடிகள் ஈ.பி.டி.பி.யினர் என்பது ஒவ்வொரு தமிழனுக்கும் தெரிந்த உண்மை.

மக்கள் மனமறிந்த கட்சி ஈ.பி.டி.பி இதனால் தான் மக்கள் கேட்காமலேயே அவர்களுக்கு வேண்டிய பணிகளைச் செய்துள்ளோம். முன்னாள் அமைச்சர் டக்ளஸ் ஆட்சியிலிருந்த காலத்தில் பல அபிவிருத்தித்திட்டங்கள் யாழ்.மாவட்டத்தின் உள்ளூராட்சி சபைகள் மூலம் செய்யபபட்டன. நிதியை அரசாங்கம் ஒதுக்கினாலும் உள்ளூராட்சி சபைகள் தூங்குகின்றன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் எதிர்க் கட்சியாகவே இருந்து பழக்கப்பட்டவர்கள். அவர்கள் ஆளும் கட்சியாக இருந்தாலும் மக்களுக்கு எதிரான கருத்துக்களையும் மக்கள் விரோத செயற்பாடுகளையுமே சொல்வர் என்பது கண்கூடு. சாதாரண பிரதேச சபை ஒன்றைக் கூட நடாத்துவதற்கு திராணியற்றவர்களுக்கு எதனைக் கொடுத்தாலும் மக்களுக்கு ஒன்றும் செய்ய மாட்டார்கள். யாழ். மாநகரசபையைப்பாருங்கள் அதனுடைய அபிவிருத்தியைப் பாருங்கள் அதனுடைய எல்லையாக உள்ள நல்லூர் பிரதேச சபையை த.தே.கூட்டமைப்பினர் நாசமாக்கிவிட்டனர்.

எனதருமை சகோதர சகோதரிகளே! தேசத்தின் அபிவிருத்தி மூலம் உங்கள் பிரதேசம் அபிவிருத்தி பெற உங்கள் வாக்கு வீணைக்கு விழ வேண்டும்

## நல்லூர் தொகுதி செயற்பாட்டாளர்களுடன் ஈ.பி.டி.பி.யின் செயலாளர் நாயகம் சந்திப்பு




ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், முதன்மை வேட்பாளருமான டக்ளஸ் தேவான்ந்தா நல்லூர் தொகுதி கட்சியின் செயற்பாட்டாளர்களுடன் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

கொக்குவில் கிழக்கு பொற்பதி சனசமூக நிலையத்திற்கு அருகாமையில் கட்சியின் செயற்பாட்டாளர்களுடன் நேற்று முன்தினம் இச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது. இதன்போது கருத்துத் தெரிவித்த ஈ.பி.டி.பி.யின் செயலாளர் நாயகம் கடந்த அறுபது வருட காலமாக மக்களை ஏமாற்றி வந்த தமிழ்த்தலைமைகள் மாற்றப்பட வேண்டுமென்பதே எமது நிலைப்பாடாகும் தற்போதுள்ள சூழலானது ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினராகிய எமக்கு சாதகமான சூழலாகவே அமையப் பெற்றுள்ளது.

இதற்கு இரு பிரதான காரணங்கள் அமையப் பெற்றுள்ளன அவற்றுள் ஒன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குள் இருக்கும் உள் முரண்பாடுகள் மற்றும் பிரச்சினைகள் இரண்டாவது நம் சொந்தச்சின்னமான வீணைச்சின்னத்தில் போட்டியிடுவது பிரதான காரணமாகும். எனவே இச் சூழலை நன்கு பயன்படுத்தி எமது மக்கள் அதிகப்படியான வாக்குகளை அளித்து அரசியல் பலத்தை எமக்கு தர வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

இதில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் வேட்பாளர்களான இரா.செல்வவடிவேல், திருமதி. யோகேஸ்வரி பற்குணராசா ஆகியோர் உடனிருந்தனர்.


நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2015

(தேர்தல் மாவட்டம் - வன்னி)







ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி)


நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2015
யாழ்.கிளிநொச்சி தேர்தல் மாவட்டத்தில்
போட்டியிடும் ஈ.பி.டி.பி. வேட்பாளர்களை
வெற்றி பெறச் செய்வோம்!
X 4
சில்வேஸ்திரி அலைன்றின்
(முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்)
8
ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன்
(வடமராட்சி ஈ.பி.டி.பி. இணைப்பாளர்)
1
டக்ளஸ் தேவானந்தா
(செயலாளர் நாயகம் - ஈ.பி.டி.பி.)
முதன்மை வேட்பாளர்
இராமநாதன் ஐங்கரன்
(வலிகாமம் கிழக்கு ஈ.பி.டி.பி. இணைப்பாளர்)
2
முருகேசு சந்திரகுமார்
(முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்)
7
பசுபதி சீவரத்தினம்
(ஈ.பி.டி.பி. தேசிய அமைப்பாளர்)
6
'சொல்லின் செல்வர'
இரா.செல்வவடிவேல்
3
சிவகுரு பாலகிருஸ்ணன்
(வலிகாமம் மேற்கு ஈ.பி.டி.பி. இணைப்பாளர்)
9
திருமதி.யோகேஸ்வரி பற்குணராஜா
(யாழ்.மாநகர முன்னாள் முதல்வர்)
5
சூசைமுத்து அலெக்ஸ்சாண்டர்
(தென்மராட்சி ஈ.பி.டி.பி. இணைப்பாளர்)
10
ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி)

## கூட்டமைப்பு...

வர்கள் சிலர் பலர் முன்னிலையில் அந்த இளைஞர்கள் மீது தாக்குதல் நடத்திவிட்டு தமது சைக்கிள்களில் தப்பியோடியுள்ளனர்.

பாடசாலை வீதிக் கடமையில் நின்ற பொலிஸாரிடம் இது குறித்து உடனடியாகவே பாதிக்கப் பட்ட இளைஞர்கள் தெரியப்படுத்தியபோதும் பொலிஸார் அதனை கண்டுகொள்ளவில்லை. சம்பவ இடத்திற்கு வந்த வேட்பாளர் சிவமோகன் குறித்த இளைஞர்களை அங்கிருந்து அழைத்துச் சென்றுள்ளார்.

## அப்துல் கலாம்...

அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது. அவரது உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்படவில்லை. இதையடுத்து இராணுவ மருத்துவமனையின் சிறப்பு மருத்துவர் குழு வரவழைக்கப் பட்டது.

இந்த மருத்துவர்கள் அப்துல் கலாமின் உடல்நிலையை பரிசோதனை செய்து, தீவிர சிகி ச்சை அளித்தனர். ஆனால், சிகிச்சை பலனின்றி அப்துல் கலாமின் உயிர் பிரிந்தது. அவரது மறைவுக்கு பல்வேறு அரசியல் தலைவர்கள் இரங்கல் தெரிவித்தனர்.

இந்தியாவின் தலைசிறந்த விஞ்ஞானி, தொழில்நுட்ப வல்லுநர், மிகப்பெரிய பொருளாளர், இந்தியாவின் 11 ஆவது குடியரசு தலைவர், இந்திய ஏவுகணை நாயகன், "இந்திய விஞ்ஞான வளர்ச்சியின் தநதை, சிறந்த ஆசிரியர் மற்றும் அனைவராலும் மதிக்கத்தக்க அற்புதமான பேச்சாளர், வருங்கால இளைஞர்களின் முன்மாதிரியாக கருதப்படும் நம் எல்லோருக்கும் தெரிந்த ஏ.பி.ஜே.அப்துல் கலாம் 1931 ஆம் ஆண்டு, ஒக்ரோபர் மாதம் 15 ஆம் திகதி ஜைனுலாப்தீனுக்கும், ஆஷியம்மாவுக்கும் மகனாக இந்தியாவின் தமிழ்நாடு மாநிலத்தில், பாம்பன் தீவில் அமைந்துள்ள இராமநாதபுரம் மாவட்டத்தில் இருக்கும் ஒரு சிறிய நகராட்சியான இராமேஸ்வரத்தில் பிறந்தார்.

தன்னுடைய பள்ளிப்படிப்பை முடித்தபிறகு, திருச்சிராப்பள்ளியிலுள்ள செயின்ட் ஜோசப் கல்லூரியில் இயற்பியல் பயின்றார். 1954 ஆம் ஆண்டு, இயற்பியலில் இளங்கலை பட்டம் பெற்றார். ஆனால், இயற்பியல் துறையில் ஆர்வம் இல்லை என உணர்ந்த இவர், 1955 ஆம் ஆண்டு தன்னுடைய விண்வெளி பொறியில் படிப்பை சென்னையிலுள்ள எம்.ஐ.டி.யில் தொடங்கினார். பின்னர் அதே கல்லூரியில் முதுகலைப் பட்டமும் பெற்றரார்.

1960 ஆம் ஆண்டு வானூர்தி அபிவிருத்தி அமைத்தல் பிரிவில் விஞ்ஞானியாக தன்னுடைய ஆராய்ச்சி வாழ்க்கையைத் தொடங்கிய அப்துல கலாம், ஒரு சிறிய ஹெலிகொப்டரை இந்திய இராணுவத்திற்காக வடிவமைத்து கொடுத்தார். பின்னர், இந்திய விண்வெளி ஆராய்ச்சி கூடத்தில் தனது ஆராய்ச்சிப்பணிகளைத் தொடர்ந்த அவர், துணைக்கோள் ஏவுகணைக் குழுவில் செயற்கைக்கோள் ஏவுதலில் முக்கிய பங்காற்றினார்.

1980 ஆம் ஆண்டு SLV-III ராக்கெட்டைப் பயன்படுத்தி ரோகினி-I என்ற துணைக்கோளை வெற்றிகரமாக விண்ணில் ஏவச்செய்தார். இது அவருக்கு மட்டுமல்லாமல், இந்தியாவிற்கே ஒரு சாதனையாக அமைந்தது. இத்தகைய வியக்கத்தக்க செயலைப் பாராட்டி மத்திய அரசு இவருக்கு 1981 ஆம் ஆண்டு இந்தியாவின் மிகப் பெரிய விருதான பத்ம பூஷன் விருது வழங்கி கௌரவித்தது. 1963 ஆம் ஆண்டு முதல் 1983 ஆம் ஆண்டு வரை, இந்திய விண்வெளி ஆராய்ச்சிக் கூடத்தில் பல பணிகளை சிறப்பாக செய்த இவர், 1999 ஆம் ஆண்டு பொக்ரான் அணு ஆயுத சோதனையில் முக்கிய பங்காற்றியுள்ளார். இந்தியாவை அணு ஆயுத வல்லரசாக மாற்றிய ஏ.பி.ஜே அப்துல் கலாம், இதுவரை ஐந்து ஏவுகணை திட்டங்களில் பணிபுரிந்துள்ளார். அவர், அனைவராலும் இந்திய இராணுவ ராக்கெட் படைப்பின் பிதாவாக் போற்றப்படுகிறார்.

2002 ஆம் ஆண்டு நடந்த குடியரசுத் தலைவர் தேர்தலில் வெற்றி பெற்று, இந்தியாவின் 11 ஆவது குடியரசு தலைவராக யூலை 25 ஆம் திகதி 2002 இல் பதவியேற்றார். குடியரசு தலைவராவதற்கு முன், இந்தியாவின் மிகப்பெரிய விருதான பாரத ரத்னா விருது மத்திய அரசு இவருக்கு வழங்கி கௌரவித்தது. மேலும், பாரத ரத்னா விருது பெற்ற மூன்றாவது குடியரசு தலைவர் என்ற பெருமையைப் பெற்றார்.

2007 ஆம் ஆண்டு வரை குடியரசுத் தலைவராக இருந்த இவர் மக்களின் ஜனாதிபதி என்று அனைவராலும் அன்போடு அழைக்கப்பட்டார். 2007 ஆம் ஆண்டு குடியரசுத் தேர்தலில் மீண்டும் போட்டியிட நினைத்த கலாம், பிறகு பல காரணங்களால் அந்த தேர்தலில் போட்டியிட போவதில்லை என முடிவு செய்து விலகினார்.

விருதுகள்:

1981 - பத்ம பூஷன், 1990 - பத்ம விபூஷன், 1997 - பாரத ரத்னா, 1997 - தேசிய ஒருங்கிணைப்பு இந்திராகாந்தி விருது, 1998 - வீர் சவர்கார் விருது, 2000 - ராமானுஜன் விருது, 2007 - அறிவியல் கவுரவ டாக்டர் பட்டம், 2007 - கிங் சார்லஸ்-II பட்டம், 2008 - பொறியியல் டாக்டர் பட்டம், 2009 - சர்வதேச வோன் கார்மான் விங்ஸ் விருது, 2009 - ஹூவர் மெடல், 2010 - பொறியியல் டாக்டர் பட்டம், 2012 - சட்டங்களின் டாக்டர், 2012 - சவரா சம்ஸ்க்ருதி புரஸ்கார் விருது.

## மன்னாரில்...

தீர்மானித்ததை அடுத்து எண்ணெய் அகழ்விற்காக சர்வதேச ரீதியில் கோரப்பட்ட பகிரங்க விலைமனுவை அடுத்து இந்த விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

மசகு எண்ணெய் விலையில் சுமார் 50 வீத வீழ்ச்சி ஏற்பட்டதை அடுத்து இலங்கையில் எண்ணெய் அகழும் நடவடிக்கையில் இருந்து விலகுவதற்கு இந்தியாவின் கெயின் நிறுவனம் தீர்மானித்திருந்தது.

இதனையடுத்து அமைச்சரவை அங்கீகாரத்துடன் மன்னார் வளைகுடாவில் எண்ணெய் அகழ்வை மேற்கொள்வதற்கான முதலீட்டாளர்களை தேர்வு செய்வதற்கென விலைமனு கோரப்பட்டிருந்தது.

மன்னார் வளைகுடாவிலுள்ள இரண்டு கிணறுகளில் 10 வருடங்களுக்கு நாட்டின் தேவையை பூர்த்தி செய்வதற்கான 2 ரில்லியன் கனமீற்றர் இயற்கை வாயு உள்ளதாக அமைச்சின் செயலாளர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த எரிவாயு கெரவலப்பிட்டிய மற்றும் களனிதிஸ்ஸ மின் உற்பத்தி நிலையங்களை செயற்படுத்த பயன்படுத்தப்படும் எனவும் அவர் கூறியுள்ளார்.

## அரசியல் கட்சிகளுடன் இன்று அவசர சந்திப்பு

தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய மற்றும் கட்சி பிரதிநிதிகளுக்கு இடையில் தேர்தல் திணைக்களத்தில் இன்று விசேட சந்திப்பொன்று இடம்பெறவுள்ளது.

தேசிய தொலைக்காட்சிகளில் வேட்பாளர்களுக்கான பிரசாரம் தொடர்பில் நேரம் ஒதுக்குவது, அரச வாகனங்கள், சொத்துக்களை தேர்தல் கடமைகளில் பயன்படுத்துவது தொடர்பில் இங்கு ஆராயப்படவுள்ளது.

## கிளிநொச்சியில் குழந்தை மரணம் சிறுவன் கைது

கிளிநொச்சியில் சுமார் ஒரு மாதத்திற்கு முன்னர் காணாமற் போன பிறகு சடலமாகக் கண்டெடுக்கப்பட்ட 3 வயது குழந்தையின் மரணம் தொடர்பில் 14 வயது சிறுவன் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

தீவிர தேடுதலுக்கு பின்னர் சிறுமியின் உடல் கடந்த வாரம் கண்டெடுக்கப்பட்டிருந்தது.

கைது செய்யப்பட்டுள்ள அந்தச் சிறுவனை ஆகஸ்ட் மாதம் 10 ஆம் திகதிவரை அச்சுவேலி சிறுவர் நன்னடத்தை நிலையத்தில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது என பொலிஸ் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார்.

வாய்க்கால் ஒன்றில் குழந்தையைக் குளிப்பாட்டிய தாய் அந்தக் குழந்தையை அவ்வழியால் வந்த சிறுவன் ஒருவனுடன் வீட்டுக்கு அனுப்பி வைத்ததன் பின்னர் அந்தப் பெண் குழந்தை காணாமல் போயிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## அதிவேக வீதி நிர்மாணம் மீண்டும் சீனாவிடம்

மத்திய அதிவேக வீதி நிர்மாணப் பணியின் முதல் கட்டம் சீனாவின் எம்.சி.சி. நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

சீனாவின் எக்சிம் வங்கி உதவியில் கொஸ்ஸின்ன தொடக்கம் மீரிகம வரை 32.55 கிலோ மீற்றர் வீதி நிர்மாணப் பணிகள் எம்.சி.சி நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளன.

அதற்கு 148.5 மில்லியன் ரூபா செலவிடப்படுகிறது. மத்திய அதிவேக வீதியின் கடவத்த தொடக்கம் கொஸ்ஸின்ன வரையான 5 கிலோ மீற்றர் வீதி நிர்மாணப் பணிகள் குறித்த நிறுவனத்தால் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடவத்த - கொஸ்ஸின்ன வீதிக்கு அப்பால் சுற்றுவட்ட பாதை மூன்றாம் கட்ட நிர்மாணத்தில் எஞ்சிய பணத்தில் கொஸ்ஸின்ன - மீரிகம வீதி அமைக்கப்படும் என அண்மையில் அமைச்சரவை தீர்மானம் வெளியிடும் ஊடக சந்திப்பில் தெரிவிக்கப்பட்டது.

## போதைவஸ்து...

குறித்த பகுதியைச் சேர்ந்த இளைஞர் விற்பனைக்காக வைத்திருந்த போதே அவரிடம் இருந்த 12, கிலோ கிராம் நிறையுடைய மாவா என்ற போதைப்பொருளையும் மீட்டதுடன் இளைஞரும் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட நபர் 21 வயதுடையவர் என்றும், குறித்த இளைஞரை யாழ். நீதவான் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்துவதற்கான நடவடிக்கையினையும் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (25)

# சுசில் மீது முறைப்பாடு; கெமுனு விஜேரத்ன முயற்சி

(கொழும்பு)

பொலிஸ் விசேட நிதி மோசடி விசாரணைப் பிரிவிற்கு செல்லவுள்ளதாக தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

முன்னாள் கனியவளத்துறை அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவிற்கு எதிராக முறைப்பாடு செயவதற்காகவே தான் அங்கு செல்லவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே கெமுனு விஜேரத்ன இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சுசில் பிரேமஜயந்த கனிய வளத்துறை அமைச்சராக இருந்த போது இறக்குமதி செய்த தரம் குறைந்த எரிபொருள் காரணமாக அப்போது பல பேருந்துகள் பழுதடைந்ததாக அவர் குறிபபிட்டுள்ளார்.

பேருந்துகள் பழுதடைந்ததன் காரணத்தால் தமக்கு 22 இலட்சத்து மூவாயிரத்து 64 ரூபா செலவு ஏற்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமக்கு ஏற்பட்ட நட்டத்தை நிவர்த்தி செய்து கொள்வதற்காக அப்போது அமைச்சருடன் பேச்சுவார்த்தை நடத்தியதாக குறிப்பிட்ட அவர்,

பேச்சுவார்த்தையின் பின்னர் தமது கோரிக்கை அடங்கிய கடிதம் ஒன்றை 2012 ஆண்டு ஆகஸ்ட் மாதம் வழங்கியிருந்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் அந்த விடயம் தொடரபில் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும், விசாரணை மேற்கொண்டு தமக்கு நியாயம் வழங்குமாறும் கோரி பொலிஸ் விசேட நிதி மோசடி விசாரணைப் பிரிவில் முறைப்பாடு செய்யவுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை குறித்த காலப் பகுதியில் பிரதமர் ரணில் விக்ரமசிங்க மற்றும் பலரது வாகனங்கள் பழுதடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கூட்டமைப்பின்...

உள்ளடக்கப்பட்டுள்ளன.

மேலும் ஜெனிவாவிற்கு மனித உரிமைகள் பேரவையில் இலங்கைப் பிரச்சினை குறித்த விடயத்தில் சர்வதேசத்தின் தலையீட்டை அனுமதித்தல், என்பவற்றோடு, இராணுவத் தளபதிகள், படைவீரர்களை சர்வதேச நீதிமன்றத்திற்கு அழைக்க வேண்டுமென்ற கோரிக்கையையும் அவர்கள் முன்வைத்துள்ளனர்.

தீவிரவாதிகள் என கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் அனைவரையும் விடுதலை செய்ய வேண்டும் என்பதோடு, தேசிய பிரச்சினைக்கு சர்வதேசத்தின் தலையீடு இல்லாமல் தீர்வுகாண முடியாது என்பதே அவர்களின் நிலைப்பாடு.

இங்கு இரு பிரச்சினைகள் காணப்படுகின்றன. இராணுவ உறுப்பினர்களை சர்வதேசத்தின் தலையீட்டுடன் தண்டிக்க வேண்டுமென கோரும் கூட்டமைப்பு, முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்களை விடுதலை செய்ய வேண்டும் என்கிறது.

இந்த தேர்தல் விஞ்ஞாபனம் தொடர்பில், கடந்த ஜனாதிபதி தேர்தல் காலத்திலிருந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து செயற்படும், ஐக்கிய தேசியக் கட்சி, ஹெல உறுமய ஆகியவற்றின் நிலைப்பாடு என்ன?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கொழும்பிலும் போட்டியிடப் போவதாக அறிவித்திருந்தது. ஆனால் இன்று ஏன் போட்டியிடவில்லை என்ற கேள்வி எழுகிறது.

அவர்களால் இந்த கேள்விக்கு விடையளிக்காமல் விலகிச் செல்ல முடியாது, இது தொடர்பில் தெளிவுபடுத்துமாறு நாங்கள் மிக கௌரவத்துடன் கேட்டுக்கொள்கிறோம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.


நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2015
(தேர்தல் மாவட்டம் - வன்னி)



செ. ஸ்ரீராமச்சந்திரதாஸ்




ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)

# ரணிலுடன் இன்று ஒப்பந்தம்

(கொழும்பு)

பொதுத் தேர்தலில் ஆதரவு வழங்குவது தொடர்பில் ஐக்கிய தேசிய முன்னணியுடன், சிறந்த சமூகமொன்றுக்கான மக்கள் அமைப்பு உட்பட்ட 75 சிவில் சேவை அமைப்புக்கள் இன்று புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திடவுள்ளன.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவின் வெற்றிக்காக உழைத்த மாதுலுவாவே சோபித தேரர் உட்பட்ட குழுவினரே, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க வுடன் இவ் உடன்படிக்கையில் கைச்சாத்திடுகின்றனர்.

ஸ்ரீலங்கா பவுண்டேஷன் இன்ஸ்டிடியூட்டில் இன்று காலை 9.30 மணிக்கு இவ் உடன்படிக்கை கைச்சாத்திடப்படவுள்ளது.

# மெண்டிஸ் இன்று பதவியேற்பு

(கொழும்பு)

ஓய்வுபெற்ற பிரதிப் பொலிஸ் மா அதிபர் சிசிர மெண்டிஸ், தேசிய புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் இன்று தனது பதவியை ஏற்றுக் கொள்வார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளராகவும், போதைப்பொருள் தடுப்பு பிரிவின் பணிப்பாளராகவும் சிசிர மெண்டிஸ் முன்னர் பணியாற்றியிருந்தார்.

மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக்காலத்தில், மேஜர் ஜெனரல் கபில ஹெந்தவிதாரண, தேசிய புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளராகப் பணியாற்றியிருந்தார்.

மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்தவுடன், அவர் பதவியில் இருந்து விலகியிருந்தார்.

அந்த வெற்றிடத்துக்கே, ஓய்வுபெற்ற பிரதிப் பொலிஸ் மா அதிபர் சிசிர மெண்டிஸை நியமிக்க அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

# மக்கள் சேவையை முன்னெடுக்க எங்களுடன் அணி திரளுங்கள்

## அரியாலையில் முதன்மை வேட்பாளர் டக்ளஸ் தேவானந்தா



ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மக்கள் நலன்சார்ந்த விடயங்களை நிச்சயம் நாம் மக்களின் பெரும்பான்மையான வாக்குப் பலத்துடன் வெற்றி பெற்று நிறைவேற்றுவோம் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், முதன்மை வேட்பாளருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அரியாலை காந்தி சனசமூக நிலையத்தின் திறந்தவெளி அரங்கில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் மக்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றுவது, அபிவிருத்தி செயற்றிட்டங்களை முன்னெடுப்பது மற்றும் அரசியல் உரிமைகளை வென்றெடுப்பது ஆகியவற்றை நோக்காகக் கொண்டு எமது கட்சியின் கொள்கைப் பிரகடனம் அமையப் பெற்றுள்ளது.

இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படையில் 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதில் ஆரம்பித்து கட்டம் கட்டமாக முன் கொண்டு செல்லப்பட வேண்டும் என்பதை நாம் நீண்டகாலமாக வலியுறுத்தி வருகின்றோம்.

அதுமட்டுமன்றி மத்திய அரசுடனான நல்லுறவினூடாகவே எமது மக்களின் பிரச்சினைகளுக்கும் தேவைகளுக்கும் தீர்வு காண முடியும் என்ற வகையில் நாம் கடந்த காலங்களில் பல்வேறு மக்கள் நலன்சார்ந்த அபிவிருத்தி உள்ளிட்டதான செயற்றிட்டங்களை முன்னெடுத்துள்ளோம்.

இதைத்தான் இந்தியா அமெரிக்கா உள்ளிட்ட சர்வதேச நாடுகளும் வலியுறுத்தி வருகின்றன.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்காவின் தீர்வுத் திட்டத்தை அன்று எதிர்த்தவர்கள் இன்று தமிழ் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கின்றனர்.

நாம் எமது மக்களின் நலன் சார்ந்த விடயங்களை முன்னெடுக்கும் வகையில் மத்திய அரசுடன் நல்லுறவை பேணி அதனூடாகச் செயற்படுத்தியுள்ளோம்.

இவ்வாறே நாம் எதிர்காலத்திலும் தொடர்வதற்கு மக்களாகிய நீங்கள் வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் அதிகளவான வாக்குகளை வழங்கி எம்மை அமோக வெற்றி பெறச் செய்யும் பட்சத்தில் மக்களின் நாளாந்த பிரச்சினைகள் உள்ளிட்ட அனைத்து பிரச்சினைகளுக்கும் உரிய தீர்வினை காண முடியும்.

இதனடிப்படையில் தான் மக்கள் நலன் சார்ந்ததாக எமது கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தை தயாரித்துள்ள அதே வேளை அவற்றை மக்கள் பங்களிப்புடன் நிச்சயம் நிறைவேற்றும் என்றும் சுட்டிக்காட்டினார்.

இதன்போது ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் வேட்பாளரான யாழ் மாநாகர• முன்னாள் முதல்வர் திருமதி. யோகேஸ்வரி பற்குணராஜா, சொல்லின் செல்வர் இரா.செல்வ வடிவேல் உடனிருந்தனர்.

# சஜின்வாஸ் மேற்கொண்ட வெளிநாட்டு சுற்றுப் பயணம்

## மெல்ல மெல்ல கசியும் இரகசியம்

(கொழும்பு)

ஜனாதிபதிகள், அரச தலைவர்கள் போன்ற விசேட பிரபுக்கள் மாத்திரம் தங்குவதற்குப் பயன்படுத்தும் வோல்ட்டொப் அஸ்டோரியா ஹோட்டலில் முன்னாள் கண்காணிப்பு அமைச்சர் சஜின்வாஸ் குணவர்தன பரிமாறியுள்ள உயர் ரக உணவுகள் தொடர்பில் ஊடகங்களுக்கு தகவல்கள் கசிந்துள்ளன.

2014 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 20 ஆம் திகதியிலிருந்து 28 ஆம் திகதி வரையில் இந்த பிரபுக்கள் ஹோட்டலில் அவர் தங்கியுள்ளார். Remy Martin Louis X111 எனும் பெயரையுடைய அதிக விலைக்கு விற்பனை செய்யப்படும் மதுபான கிளாஸ் ஒன்றை குடிப்பதற்கு இலங்கைப் பணத்தின் படி 27000 ரூபா (US$ 195)வை அவர் செலவு செய்துள்ளார்.

அத்துடன், 100 வருடங்கள் பழைமையான பிரான்ஸ் உத்பத்தியிலான மதுபான கிளாஸ் ஒன்றையும் ரூபா 27000 செலுத்தி இவர் பின்னர் மீண்டும் கொள்வனவு செய்துள்ளார்.

அதேபோன்று, 60000 ஆயிரம் ரூபா பெறுமதியான Didier Dagueneau எனும் பெயரையுடைய பிரான்சு நாட்டின் உற்பத்தியான மதுபான போத்தல் ஒன்றையும் இவர் கொள்வனவு செய்துள்ளார். மேலும் Ciacci Reserva எனும் பெயரையுடைய இத்தாலியில் உற்பத்தி செய்யப்படும் மதுபான போத்தல்கள் இரண்டை 68000 ரூபா செலுத்தி கொள்வனவு செய்துள்ளார்.

இந்த ஹோட்டலில் அவர் பரிபாறியுள்ள ஒரு வேளை உணவுக்கு 12125 ரூபாவும், இன்னுமொரு நேர உணவுக்கு 39119 ரூபாவும் செலுத்தியுள்ளார். வ்யது வந்தவர்கள் மாத்திரம் பார்க்கக் கூடிய திரைப் படத்துக்கு 5000 ஆயிரம் ரூபாவை அவர் செலுத்தியுள்ளார்.

ஒரு ஹோட்டலின் முழுத் தொகையையும் செலுத்திய பின்னர் எஞ்சிய 450 டொலர் (ரூபா 60000) பணத்தையும் அங்குள்ள ஊழியர்களுக்க (டிப்) சன்மானமாக வழங்கியுள்ளார்.

இவருடைய சுற்றுப்பயணத்துக்கு செலவு செய்யப்பட்ட பற்றுச் சீட்டொன்றையும் தேசிய சிங்கள ஊடகமொன்று இத்தகவல்களுடன் வெளியிட்டுள்ளது.

# விவாதத்துக்கு அழைக்கிறார் அர்ஜுன

(கொழும்பு)

மத்திய வங்கி, திறைசேரி முறிகள் தொடர்பில் தான் பொதுயிடமொன்றில் முன்னாள் அமைச்சர் ஜீ.எல்.பீரிசுடன் விவாதம் புரிவதற்கு தயாராக இருப்பதாக மத்திய வங்கியின் ஆளுநர் அர்ஜுன மஹேந்திரன் தெரிவித்துள்ளார்.

மத்திய வங்கி முறிகள் குறித்து அண்மைக் காலமாக ஜீ.எல்.பீரிஸ் சர்ச்சைக்குரிய கருத்துக்களை முன்வைத்து வருவது குறிப்பிடத்தக்கது

# பிரதி அமைச்சருக்கு எதிராக முறைப்பாடு

நீதிமன்றை அவமதித்ததாகக் கூறி பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்கவிற்கு எதிராக உயர் நீதிமன்றில் முறைப்பாடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கோட்டே பிரதி மேயர் மதுர வித்தானகே இந்த முறைப்பாட்டை தாக்கல் செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க அண்மையில் சிறிகொத்தவில் ஆற்றிய உரையால் நீதிமன்றுக்கு அவமதிப்பு ஏற்படுத்தப் பட்டுள்ளதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் விசாரணை நடத்தி சட்ட நடவடிக்கை எடுக்குமாறு முறைப்பாட்டாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

# செய்தியாளர்கள் மீது தொடுக்கப்பட்ட தொந்தரவுகள்

## கசிகிறது தகவல்

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் குருணாகல் மாவட்ட வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷ கலந்து கொள்ளும் யட்டிநுவர தேர்தல் பிரசாரக் கூட்டம் தொடர்பான செய்திகளை சேரிக்க சென்ற ஊடகவியலாளர் அங்கு ஏற்றப்பட்டிருந்த மாற்றியமைக்கப்பட்டிருந்த தேசியக் கொடிகளை கண்டு அவற்றை புகைப்படம் எடுக்க முயற்சித்துள்ளனர்.

இதனையடுத்து மகிந்த ராஜபக்ஷவுக்கு வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பு அதிகாரிகள் அந்த ஊடகவியலாளர்களை கைது செய்துள்ளனர். இந்த சம்பவம் நேற்று நடந்துள்ளது.

ஊடகவியலாளர்களை பிடித்து அவர்களை பாதுகாவலர்கள் இருந்த இடத்திற்கு அழைத்துச் சென்று ஒரு அறையில் இட்டு பூட்டியுள்ளனர். கொடிகள் அகற்றப்படும் வரை ஊடகவியலாளர்கள் அந்த அறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

எடுத்த புகைப்படங்களை பிரசுரிக்க வேண்டாம் என பொலிஸார் என்று கூறிக்கொண்ட சிலர், ஊடகவியலாளர்களை அச்சுறுத்தியுள்ளனர்.

வாள் ஏந்திய சிங்கம் நடுவிலும் அதனை சுற்றி அரச இலைகள் காணப்படும் திரிபுப்படுத்தப்பட்ட தேசியக்கொடி இதற்கு முன்னரும் இலஞ்ச ஆணைக்குழுவிற்கு எதிரில் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு ஆதரவாக நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது காட்சிப்படுத்தப்பட்டது.

தேசியக் கொடியை அவமதித்ததாக இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டது.

பொதுபல சேனா, ரவணா பலய, சிங்கள ராவய ஆகிய அமைப்புகள் பல சந்தர்ப்பங்களில் இந்த கொடியை பயன்படுத்தியுள்ளன.

மகிந்த ராஜபக்ச ஜனாதிபதியாக இருந்த காலத்தில் அவரது ஊடகப் பிரிவு வெளியிடும் புகைப்படங்கள் மற்றும் காணொளிகளை தவிர வேறு படங்களையோ காணொளி களையோ வெளியிட ஊடகங்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை. மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக பதவி வகித்த காலத்தில் ஊடகவியலாளர்களுக்கு கடும் தொந்தரவுகள் கொடுக்கப்பட்டன.

இப்பத்திரிகை இல: 373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2015 யூலை 28ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.